# தமிழில் விடுதலை இலக்கியம்

முனைவர் கா. செல்லப்பன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# தமிழில் விடுதலை இலக்கியம்

முனைவர் கா. செல்லப்பன்
ஆங்கிலப் பேராசிரியர் (ஓய்வு)

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை
அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர்- திரு. இரா. ராஜா, அமெரிக்கா.
வரிசை எண் : 2 நாள்: 29.01.2003

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil̲il viṭutalai ilakkiyam |
| Author | : | Dr. K. Chellappan |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 22542992 |
| General Editor | : | Dr. D. Renganathan |
| Publication No. | : | 442 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 72 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 20/- (Rupees Twenty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004<br>PH. 24984693, 24661807 |
| Subject | : | Tamilology |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு-நிறுவனம் பொறுப்பன்று

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113.

# அணிந்துரை

காலந்தோறும் இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு அவ்வக் காலச் சூழல்கள் காரணமாக அமைந்துவிடுகின்றன. இலக்கிய வகை என்பதுகூட ஒரு வகையில் தேவைக்கு ஏற்பவே தோன்றுகின்றது என்றும் கூறலாம். சமுதாயச் சூழல், மக்களின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை அடியொற்றியே இலக்கியங்கள் தோன்றுதல் கூடும். இதனை, இலக்கிய வகையையும் காலச் சூழலையும் இணைத்துப் பார்க்கும் ஆய்வினால் மட்டுமே நன்கு உணர்ந்து கொள்ளவியலும்.

நாட்டில் விடுதலை வேட்கை வேரூன்றி இருந்த காலத்தில் மக்கள் தங்களுடைய முழுக் கவனத்தையும் நாடு விடுதலை பெறவேண்டும் என்பதிலேயே செலுத்தினர். இந்நிலையில் அவர்களுக்கு எளிமையாகப் புரிந்து கொள்ளும் மொழிநடை, உணர்ச்சியைத் தூண்டும் மொழிக்கூறுகள், தொன்மக் கூறுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் கருத்துப்பரவல்கள் போன்றவை பெரிதும் தேவைப்பட்டன. இத்தகைய தேவையின் அடிப்படையில்தான் விடுதலை இயக்கக் காலத்தில் மரபுநிலை மீறிய கவிதைகளும், உரைநடைத் தன்மைகள் கொண்ட இலக்கியங்களும் எழுந்தன என்பதை ஆய்ந்து பார்த்தால் நன்கு விளங்கும். இக்கருத்துகளை மையமாகக் கொண்டு விடுதலைக்கால இலக்கியங்களை உற்று நோக்கினால் அக்கால இலக்கிய வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிக்கான தேவை, இலக்கியப் படைப்பாளனின் மனநிலை, அவர்களின் பின்புலங்கள், மக்கள் அவர்களை ஏற்றுக் கொண்ட மனப்பாங்கு, இதனால் நாட்டின் தமிழிய தேசிய நோக்கில் உண்டாகிய நற்பலன்கள் போன்றவை எளிதில் விளங்கும். இத்தகைய ஆய்வுப் பரப்பை உள்ளடக்கிய நிலையில் பேராசிரியர் முனைவர் கா. செல்லப்பன் அவர்கள் எழுதிய **தமிழில் விடுதலை இலக்கியம்** என்ற தலைப்பில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்துவது பெரிதும் பொருத்தமான ஒன்றாகும். 'விடுதலை இயக்கமும் தேசிய இலக்கியமும்' முதல் 'கல்கியின் புதினங்களில் காந்தியம்' என்பது ஈறாக ஆறு உட்தலைப்புகளில் இச்சொற்பொழிவை அமைத்துக்

கொண்டுள்ளார். இத்தலைப்புகளில் தமிழ் விடுதலை இலக்கியத்தில் தேசியமும் காந்தியமும் கலையுணர்வுடன் இழையோடுவதை ஆசிரியர் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். கவிதை தொடங்கிப் புதினம் ஈறாக விடுதலை இயக்க உணர்விற்கு இவ்விலக்கியங்கள் எவ்வளவு பங்காற்றியுள்ளன என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளமை பாராட்டுக்குரிய தாகும். இவ்விடுதலை இயக்க இலக்கியங்களில் பாரதியின் தேசிய உணர்வையும், பாரதிதாசனின் தேசிய தமிழிய உணர்வையும், நாமக்கல்லாரின் காந்திய உணர்வையும் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளமை எண்ணி மகிழத்தக்கதாகும்.

தேசியத்துக்கும், காந்தியத்துக்கும் முழுமையான வெளிப்பாடாக விளங்கும் நாமக்கல் கவிஞரின் பெயரால் அமைந்த இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு இப்பொருண்மை பெரிதும் பொருத்தமுடையதாகும். இச்சொற்பொழிவைக் குறித்த காலத்தில் உருவாக்கித் தந்த இருமொழிப் புலமையாளராகிய பேராசிரியர் முனைவர் கா. செல்லப்பன் அவர்களுக்கு இந்நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சொற்பொழிவு நூலாக்கம் பெறுவதில் பெரிதும் ஒத்துழைத்த அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தா. ரெங்கநாதனுக்கு நன்றியும் பாராட்டுதல்களும் உரியன. இச்சொற்பொழிவை நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெரிதும் மகிழ்வெய்துகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறையமைச்சர் எஸ். செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலுக்கு ஒளியச்சுக் கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யாவுக்கும், இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
நாள்: 13-1-2003

**இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி



**கல்வி** : அண்ணாமலைப் பல்கலையில் ஆங்கில இலக்கிய முதுகலைப் பட்டமும் ( முதல் வகுப்பு, முதல் மாணவர்), மான்செஸ்டர் பல்கலையில் ஆங்கிலம் கற்பித்தல் மேனிலைப் பட்டயமும் ( தனிச்சிறப்பு நிலை) பெற்று, மதுரை காமராசர் பல்கலையில் பணியாற்றும் போது, தெ.பொ.மீ. அவர்களின் வழிகாட்டுதலுடன் ஆய்வறிஞர் (Ph.D.) பட்டமும் பெற்றார். திருச்சி, சென்னைப் பல்கலை மையம் மற்றும் பாரதிதாசன் பல்கலையில் 1978 லிருந்து 96 வரை பேராசிரியராகப் பணியாற்றினார். ஓய்வு பெற்ற பின் 1997 லிருந்து 2000 வரை சென்னைப் பல்கலைச் சிறப்பு நிலைப் பேராசிரியராகவும் 2001 வரை மாநில ஆங்கில மைய இயக்குநராகவும் பணியாற்றினார். ஒப்பிலக்கிய நோக்கில் 'ஷேக்ஸ்பியரும் இளங்கோவும்', போன்று 10 நூல்களும், 5 மொழியாக்கங்களும், 80 ஆய்வுக் கட்டுரைகளும் படைத்துள்ளார். அவற்றுள் சில New Comparison, New Helicon போன்ற சர்வதேச இதழ்களில் வெளியாகியுள்ளன; பலவற்றை அமெரிக்கா போன்ற நாடுகளில் நடந்த கருத்தரங்குகளிலும் வழங்கியுள்ளார். ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் ஜப்பான் முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று வந்தார். ஏறக்குறைய 50 ஆய்வு மாணவர்களுக்கு அறிஞர் பட்டத்துக்கு வழிகாட்டியுள்ளார். தமிழக அரசின் சிறந்த பல்கலை ஆசிரியர் விருது, தமிழ்ப்பணி விருது மற்றும் ஆழ்வார் மையத்தின் அண்ணா விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் Margaret Laurence Review இன் ஆசிரியர் குழுவிலும் சாகித்ய அகாடமி தட்சிணாவின் தமிழ்ப்பகுதி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இந்திய ஒப்பிலக்கியக் கழகத்தின் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

# முன்னுரை

விடுதலைப் போர் இந்திய இலக்கியங்களுக்கு ஒரு அகன்ற பார்வையையும், வீர உணர்வையும், மனிதப் பண்பையும் தந்தது. இந்திய மனத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி எழுந்த சுதந்திர உணர்வு தமிழகத்தில் வீறுமிகு கவிதைகளாகவும், உணர்ச்சி மிக்க உரைநடை இலக்கியமாகவும் வெளிவந்தது. அகம் புறத்தை ஆணி வேராகக் கொண்டு காப்பியப் பருமனைப் பெற்று விரிந்து வளர்ந்த தமிழ், பக்திக் கனிகளைப் பாருக்கு வழங்கியது. பிறகு உள்நாட்டுச் சமூக மாற்றங்களாலும் அந்நிய ஆதிக்கத்தாலும், சற்றுச் சரிவடைந்த தமிழ், விடுதலை இயக்கத்தின் போது மறுபடியும் தனது முழு ஆற்றலையும் உணர்ந்து தலை நிமிர்ந்து நின்றது. அப்போதுதான் பாரதி சுதந்திரச் சங்கு ஊதினான். பாவேந்தர் புரட்சி கீதம் பாடினார். நாமக்கல்லார் காந்திய ஒளிக்குக் கவிதாஞ்சலி படைத்தார். அதே போல் வேத நாயகரிலிருந்து வெங்கடரமணி வரை தமிழ்ப் புதினங்களில் தேசியம் மொட்டாகி மலர்ந்தது; கல்கியிலே முழுமையான காந்தியமாக மணம் கமழ்ந்தது.

தேசியமும் காந்தியமும் இரட்டைக் குழந்தைகள். அவை தமிழில் இலக்கியக் கருப்பொருளாக (Literary theme) முழுவடிவம் பெற்றன. அவற்றின் கூறுகள்: சமூகச் சீர்திருத்தம், தீண்டாமை, மதுவிலக்கு ஒழிப்பு, தாய்மொழி உணர்வு, பெண் விடுதலை. ஆனால் இவை வெறும் பிரச்சாரக் கருத்துகளாக இருந்தால் தமிழில் விடுதலை இலக்கியம் சிறப்புப் பெற்றிருக்க முடியாது. அவை மனித வாழ்வின் அடிப்படைகளை ஆட்டிப் படைத்ததை அழகுடன் காட்டிய போதுதான் கருப்பொருள் கலைப்பொருளாகிறது.

இந்நூலில் வரும் கட்டுரைகள் தமிழ் விடுதலை இலக்கியத்தில் தேசியமும் காந்தியமும் கலை உணர்வோடு இழையோடுவதைக் காட்ட முயல்கின்றன. முதற் கட்டுரை இதை இந்திய இலக்கிய எழுச்சியின் கூறாகக் காண்கிறது. அடுத்து வரும் மூன்று கட்டுரைகளிலும் தமிழ்க் கவிதையில் தேசியமாகவும், தேசியத் தமிழியமாகவும், காந்தியமாகவும் முறையே பாரதி, பாரதிதாசன், நாமக்கல்லார் பாடல்களில் விளங்குவதைக் காண்கிறோம். இறுதி இரு கட்டுரைகளும் தமிழ்ப் புதினங்களில்

தேசிய எழுச்சி பெண்மையின் எழுச்சியோடு இணைக்கப் பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இக்கட்டுரைகள் விடுதலைக்கு முன் எழுதப்பட்ட இலக்கியங்களையே ஆய்வுக் களமாகக் கொண்டுள்ளன. 'அலை ஓசை' ஒன்றுதான் விதிவிலக்கு. அதுவும் சுதந்திரம் அடைந்தவுடன், காந்தியின் சத்திய அலை சீதாவின் காதுகள் வழியாக இந்த மண்ணோடு இரண்டறக் கலந்ததைக் காட்டி நிறைவு பெறுகிறது. அந்த உரைநடைக் காப்பியத்தில் காந்திய அலை, சாதாரண மனிதர்களைச் சரித்திர புருஷர்களாக்குகிறது.

தமிழில் தேசியத்துக்கும் காந்தியத்துக்கும் முழுமையான இலக்கியக் குரலாக விளங்கிய நாமக்கல் கவிஞரின் பெயரால் அறக்கட்டளை நிறுவியவர்களுக்கும், அதை நிர்வகிக்கும் குழுவினருக்கும் என் அன்பான நன்றி. அதன் சார்பாகவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாகவும் என்னை உரையாற்ற அழைத்த, அதன் எழுச்சி மிகு இயக்குநர் பேராசிரியர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், இந்த உரையை நிகழ்த்துவதற்கும் அதை அச்சேற்றுவதிலும் உறுதுணை செய்த அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தா.ரெங்கநாதன் அவர்களுக்கும் என் இதய நன்றி.

# உள்ளே

| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | |
| முன்னுரை | |
| விடுதலை இயக்கமும் தேசிய இலக்கியமும் | 1 |
| பாரதியின் கவிதைகளில் தெய்வ தரிசனமும் தேச தரிசனமும் | 12 |
| பாவேந்தர் பாடல்களில் தேசியமும் தமிழியமும் | 23 |
| நாமக்கல்லாரின் கவிதைகளில் காந்தியம் | 32 |
| தமிழ்ப்புதினங்களில் நாட்டு விடுதலையும் பெண் விடுதலையும் | 43 |
| கல்கியின் புதினங்களில் காந்தியம் | 55 |

# விடுதலை இயக்கமும் தேசிய இலக்கியமும்

இந்தியாவில் தேசியம் முழுமையாக உருவாகுமுன் ஒரு தேசிய இலக்கியம் இருந்தது உண்மை தான். இந்தியா என்பது தேசம் என்பதைவிட ஒரு நாகரிகம் என்பதுதான் உண்மை. Not a nation but a civilizaion என்பார்கள். இந்திய நாகரிகம், அரசியல் ரீதியாக ஒன்றுபடுவதற்குமுன் பண்பாட்டு ரீதியாகவும் இலக்கிய ரீதியாகவும் ஒன்றுபட்டிருந்தது. அந்த ஒருமையுணர்வு ஆழ்நிலையில்தான் அடிமனநிலையில் தானிருந்தது. வேதகாலத்தில் சமஸ்கிருத இலக்கியம் வட இந்தியாவிலும், தமிழ் இலக்கியம் தென்னிந்தியாவிலும் தனித்தனியே தழைத்தோங்கி யிருந்திருக்க வேண்டும். தமிழில் சங்க இலக்கியமும் அதற்கு முந்தைய இலக்கியமும் எந்த அளவுக்கு இந்தியத் தன்மையை வெளிப்படுத்தின என்பது இன்றும் வரையறுக்கப்படவில்லை. சங்கத் தமிழில் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற அகன்ற மனப்பான்மையோடு ஐந்திணைப் பகுப்பும் இணைந்திருந்தது. அது சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒட்டிய தேசிய உணர்வாகி, ஒரு தமிழ்த் தேசிய உணர்வாகச் சிலப்பதிகாரத்தில் முழுமை பெறுகிறது. அதன் பின் தமிழ் மண்ணிலிருந்து எழுந்த பக்தி இலக்கியம் நாடுதழுவிய இலக்கியமாக விளங்குகிறது. கம்பனது இராமகாதை, வால்மீகி கதையைத் தமிழ்க் காவியமாக்கும் போது இலக்கியத்தில் கங்கை-காவிரிச் சங்கமம் ஏற்படுகிறது. அதற்குப்பின் தமிழ் இலக்கியத்தில் ஒரு வகையான நிலப்பிரபுத்துவப் பண்பும் அலங்காரமும் மிகுந்தது. இலக்கியத்தில் ஏற்பட்ட இந்த நிலை தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் மாற்றம் ஏற்பட்டது.

விடுதலைப் போர் என்ற வேள்வியில் இந்தியா தன்னைப் புதுப்பித்துக் கொண்டபோது, இந்திய மொழிகளும் அந்தப் புனிதப் போரில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, ஒரு புதிய

எழுச்சியும் பரிமாணமும் பெற்றன. விடுதலை என்பது, வெளி நாட்டாரை விரட்டுவது மட்டுமன்று; நம்மை நாமே உணர்வதுதான். அந்த அகவிழிப்பின் வெளிப்பாடுதான் இந்திய மொழி இலக்கியங்களின் மறு மலர்ச்சி.

சுதந்திரப் போரின் போது இந்திய மொழிகளில் ஒரு புதிய உத்வேகம் பிறந்தது. எல்லா மாநிலங்களிலும் மொழி மறுமலர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. இந்திய நாட்டில் தன்னைத் தேடுதல் இந்திய மொழிகளின் மூலம்தான் பெரிதும் நிகழ்ந்தது. (இதற்கு ஆங்கிலமும் துணையாக இருந்தது என்பதும் மறுக்க முடியாத உண்மை). காந்தியடிகளும், ஜவஹர்லால் நேருவும் இந்திய மொழிகளின் முக்கியத்துவத்தைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். தாய்மொழியை மையமாக வைத்துத்தான் ஆட்சி, கல்வி முதலியன அமைய வேண்டும் என்ற அடிப்படையில் தான் நேரு, மொழிவழி மாநிலங்கள் உருவாக்கத்துக்கு வழிவகுத்தார். பண்பாட்டுப் புத்தாக்கத்துக்கு மொழி ஒரு குவியும் புள்ளியாக (focal point) அமையும் என அவர் கருதியதில் தவறில்லை. மொழிவழி மாநிலச் சீரமைப்பில் சில சிக்கல்கள் எழுந்தன. ஒவ்வொரு மாநில மக்களும் ஒரு பொது மொழி வழித் தங்களை இணைத்துக் கொள்வதன் மூலம், மக்களாட்சி மேலும் வலுப்பெறும். அந்த மக்களின் சுய வெளிப்பாட்டுக்கும் அது பெரிதும் உதவியுள்ளது.

ஜவஹர்லால் நேரு இந்தியாவின் அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்கும் அவற்றின் இலக்கியச் சங்கமத்துக்கும் வழி செய்ய தேசிய இலக்கியக் கழகத்தை (Sahitya Academy) நிறுவினார். 'இந்திய மொழிகள் பல, ஆனால் இந்திய இலக்கியம் ஒன்று' என்பது இந்த அகாடமியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. காலனி ஆதிக்கத்திலிருந்து கடந்து வந்த நாடுகளில் புதிய தேசிய உணர்வின் வாய்க்காலாக இலக்கியம் உருவாகி வருகின்றது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்திய இலக்கியம் என்பது ஒரு புதிய கண்டுபிடிப்பன்று; ஏற்கெனவே இருந்து இடையில் இழந்ததின் மீட்பே (not a discovery, but a recovery) என்பவர்களும் உள்ளனர். அரசியல் ரீதியாக இந்தியா ஒரு தேசமாக உருவாவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இந்நாட்டு இலக்கியங்கள் ஒரு பொதுமையான உணர்வைப் படம் பிடித்தன. ஆங்கில ஆட்சியின் போது, குறிப்பாக அதை எதிர்த்துப் போராடியபோது, ஆழ்மனத் தேசிய உணர்வு ஒரு வெளிப்படையான பிரக்ஞையின் வெளிப்பாடாக மலர்ந்தது (An unconscious feeling became a self conscious process).

இந்தத் தேசிய எழுச்சியும் இலக்கிய மறுமலர்ச்சியும் வங்கத்தில்தான் முதலில் எழுந்தாலும், தமிழகம் அதில் முழுமையாகப் பங்கு பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. கலாநிதி கைலாசபதி, விடுதலைப் போரில் வங்கத்தின் பங்களிப்புப் பற்றி இப்படிக் கூறுகிறார்:

"ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் பிரான்சு தேசத்தைப் பற்றி அழகான ஒரு விளக்கம் கூறுவார்கள். பிரான்சு தும்மினால் ஐரோப்பாவிற்குச் சளி பிடித்துக் கொள்கிறது என்பதே அது. பிரான்சு நாட்டில் தோன்றிய புரட்சி சிந்தனைகள், ஐரோப்பாவை அவ்வாறு உலுப்பின. இந்த நூற்றாண்டின் முற்பகுதியைப் பொறுத்தவரையில் வங்காளத்திற்கும் இந்த உவமை பொருந்தும். வங்காளம் இன்று நினைப்பதை இந்தியா நாளை நினைக்கும் என்று அக்காலத்தில் கூறத்தக்கதாக இருந்தது. பிற்காலத்தில் மகாத்மா காந்தியடிகள் இதனை நன்குணர்ந்தார். வங்கத்தை இந்தியாவின் ஒரு மாகாணம் என்று கொள்வது தான் இயல்பு, ஆனால் இந்தியாதான் வங்கத்தின் ஒரு மாகாணமோ என்று எனக்கு அடிக்கடி தோன்றுவதுண்டு. ஏனென்றால் வங்கத்தின் தேசிய இயக்கத்தை நான் இந்தியாவெங்கும் காண்கின்றேன். ஆனால் வங்கத்திலேயே அதன் முழு நிறை உயிராற்றலைச் செறிவுறக் காண முடிகிறது என்று கூறினார் காந்தியடிகள்".

ஈஸ்வர் சந்திர வித்யாசாகரர் (1820-91) காலத்திலிருந்தே வங்கத்தில் தேசிய உணர்வு தழைக்கத் தொடங்கியது. அவர் இராஜாராம் மோகன்ராயின் சமூகச் சீர்திருத்தப் பணிக்குப் புத்துயிர் அளித்தார். குறிப்பாக, விதவை மணத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். இதையொட்டி இலக்கிய மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. ஆங்கில மோகம் கொண்டிருந்த மதுசூதனதத்தர், வித்யாசாகரின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி, வங்க மொழியில் மேற்கத்திய மோகத்தையும் வைதீகத்தையும் ஒருசேரக் கேலிசெய்து இரண்டு நாடகங்களை 1860இல் எழுதினார். சுசோபன் சர்க்கார் இவர் பற்றிக் கூறுகிறார்.

"புதிய வகைக் கவிதைகளை வங்கமொழியில் இயற்றமுடியும் என்பதைக் காட்டினார் மதுசூதனர்.

இவ்வகையில் அவர் ஒரு வழிகாட்டியாக விளங்கியதோடு மட்டுமின்றி, பெருங் கவிஞராகவும் திகழ்ந்தார். மேலும் இதிகாசப் பாத்திரங்களையே புதிய வகையில் எடுத்தாண்டும், பழைய மரபுகளுக்குப் புதிய பொருளை ஊட்டியும், கொடுமைகளுக் கெதிராகப் போராடும் மனப்பாங்கினைப் புகழ்ந்தும் அவர் எழுதினார். மூன்றே ஆண்டுகளில் இலக்கியப் புரட்சி ஒன்றையே அவர் நடத்தினார் என்று கூறலாம். இதைத் தொடர்ந்து ஆங்கிலக் கவிதையைப் பின்பற்றி பரிபாடல் வகையையும் 1865-66 இல் வங்கக் கவிதையில் அவர் புகுத்தினார். அவரது வாழ்க்கைப் பாதை துயரம் மிகுந்ததாக இருந்தது. ஆயினும் வங்க இலக்கியத்தின் வரலாற்றில் நிரந்தர இடம் ஒன்றை அவரது அற்புதமான கவித்துவம் அவருக்குப் பெற்றுத்தந்து விட்டது".

இதே சமயத்தில் தீனபந்துமித்திரர் பழமையை மறவாமல் வாழ்ந்தாலும் 1860 இல் குடியானவர்க்கு நிகழ்ந்த கொடுமைகளைச் சித்திரித்து 'நீல்தர்ப்பண்' என்ற சமுதாயப் புரட்சி நாடகத்தை எழுதினார்.

தீனபந்து மித்திரரது நெருங்கிய நண்பரான பக்கிம் சந்திரரது புதினங்கள் வங்காள மறுமலர்ச்சிக்கும் இந்திய எழுச்சிக்கும் பெரிதும் துணைபுரிந்தன. அவரது 'ஆனந்தமடம்' தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை அடுத்து வரும் கட்டுரைகளில் விரிவாகக் காணலாம்.

இதே காலகட்டத்தில் பிரம்ம சமாஜத்தில் கேசவசந்திரசேனரை மையமாகக் கொண்டு தீவிரவாதம் உருவாகியது. ஆனால் தேவேந்திர நாத் தாகூர் இந்து சமுதாயத்துக்கும் பிரம்ம சமாஜத்துக்கும் இடைவெளி அதிகரிக்கக்கூடாது என்று கருதினார். 1896 இல் கேசவசந்திரர் பிரம்ம சமாஜத்திலிருந்து விலகி இந்திய பிரம்மசமாஜத்தை நிறுவினார். இவர்களின் தாக்குதலுக்கு எதிராக வைதிகமும் குரல் எழுப்பியது. இராமகிருஷ்ண பரமஹம்சரும், விவேகானந்தரும், இந்து மதத்தின் புதிய வடிவமாகக் காட்சியளிக்கின்றனர்.

இப்போது இந்திய தேசியமும் வங்கத்தில் அருணோதய சங்கம் முதலிய அமைப்புகளும் வேரூன்றி வளரத் தொடங்கின. 1905இல் நடந்த வங்கப் பிரிவினை இந்த உணர்வை மேலும்

பெரிதாக்கியது. 1905 அக்டோபர் 16 அன்று வங்கப் பிரிவினை அமுலாகியது. அதனை எதிர்த்து வங்கத்தில் அன்று தேசிய ஒற்றுமை நாள் அனுசரித்தார்கள். அது குறித்துப் பாரதி 'இந்தியா' வில் எழுதினார்.

பாரதி, விவேகானந்தர், நிவேதிதை மற்றும் விபின் சந்திரபால், சுரேந்திரநாத் பானர்ஜி குறித்தும் 'இந்தியா'வில் எழுதினார்.

இந்திய தேசிய எழுச்சியின், இலக்கிய மலர்ச்சியின் முழுமையை ரவீந்திரநாத் தாகூரில் காணலாம். மேற்கத்திய பாதை, மரபுப்பாதை இரண்டின் தாக்கத்தையும் கவிஞரிடம் காணலாம். முந்தியது அவருக்கு மனிதாபிமானத்தையும் சமூக சீர்திருத்த உணர்வையும் ஊட்டியது.

> **"நமது சுதந்திரத்துக்கு எந்த ஒரு சமூக விதிமுறை தடையாக இருக்கிறதோ, அதற்குக் கட்டுப்படுவது இயலாது. சென்றதை நினைத்து அழுபவர்கள் சிலர் எப்பொழுதும் இருக்கவே செய்வர்....கடந்த காலமே எப்பொழுதுமே பொற்காலமாகத் தோன்றும், நிகழ்காலமல்ல"**

என 1881ஆம் ஆண்டிலே ஒரு கட்டுரையில் எழுதினார். சுபோசன் சர்க்கார் கருத்துப்படி 1898 வரை மேற்கத்திய கண்ணோட்டம் அவரிடம் மிகுந்திருந்தது. அப்போது இந்து மதத்தின் தீய சம்பிரதாயங்களை வன்மையாகக் கண்டித்தார்.

ஆனால் 1905 இலிருந்து கவிஞரிடமும் சுதேசியத்தின் தாக்கம் வலுப்பெறுகிறது. 1898 இல் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே அவரது சுதேசியச் சிந்தனை விளங்குகிறது.

அவர் இந்து சமயத்தின் குறைபாடுகளைக் காண்பித்தாலும் இந்து சமுதாயத்தை அறிந்த யாரும் அவை காட்டுமிராண்டித்தனமானவை என்று கூறமுடியாது எனக் கூறுகிறார். பிரிட்டிஷ்காரரர் ஆட்சி அகற்றப்பட, இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என நம்பினார்.

> என்னருமை நாடே பெருவெறுப்பில் இம்மக்கள்
> உன்னை விட்டகன்று தனிமையிலே ஒதுங்குகின்றார்
> எனினுமவர் அடிமையினை ஏற்பாக ஒழித்திடவே
> அன்போடு இன்றிவரை அரவணைத்துச் செல்கின்றோம்

என்ற பாடலும் அவரது தேசியக் கொள்கையை விளக்குகின்றன. சுசோபன் சர்க்கார் கருத்துப்படி, தாகூரின் ஜனகனமன, பக்கிம் சந்திரரின் வந்தே மாதரத்தை விட உயர்ந்தது, ஏனெனில் அதில் ('ஜனகன மன'வில்) இந்து சமய உணர்வு வெள்ளமே அதிகம், மேலும் இந்து சமயத் தாய்த் தெய்வம் அப்பாடலில் தாய் நாட்டோடு கலந்து போகவில்லை. அதற்குப் பதிலாகத் தாய்நாடுதான் அத்தெய்வத்துடன் ஐக்கியப்படுத்தப்படுகிறது.

தாகூர் தேசத்தைத் தெய்வமாக உருவகிப்பதை எதிர்த்தார். அவருடைய 'வீடும் உலகமும்' என்ற புதினத்தில் சந்திப் என்ற பாத்திரம் வழியாகத் இதனைக் கூறுகிறார். பிமலாவின் கணவன் நாட்டைவிட நல்லறத்தைத் தான் வழிபடுகிறான். (I am willing to serve my country, but I reserve my worship for the right, which is far greater than any country. To worship my country as a god is to bring a curse upon it) சந்திப் 'மானுடத்தை வழிபடுகிறேன். கடவுள் மனிதர் மூலமாகவும் அவரது நாடு மூலமாகவும் தான் காட்சியளிக்கிறார்' என்று கூறும்போது 'அது தான் நீ உண்மையாக நம்புவதானால், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே நாட்டுக்கும் நாட்டுக்குமிடையே எந்த பேதமும் உனக்கு இருக்கக் கூடாது' என்கிறான்.

தாகூரின் தேசியத்தின் முழு வடிவையும் 'கோரா'வில் காணலாம். பழமை இந்து மதவாதியான கோரா இறுதியில் தான் ஐரிஷ் இனத்தவன் என உணர்ந்தபோது, தான் பிறப்பில் இந்தியனாக இல்லாவிட்டால் பரவாயில்லை, நான் இந்தியனாக வாழ்ந்து காட்டுகிறேன்' எனக் கூறுகிறார். அவனது வளர்ப்புத் தாயில் இந்தியாவைக் காண்கிறான்.

> "இங்கே வீட்டில் உட்கார்ந்திருக்கும் நீ தான் தாய், உன்னைத் தேடி ஊரெல்லாம் அலைந்திருக்கிறேன். உனக்கு ஜாதி கிடையாது. நீ உன் குழந்தைகளிடம் வேறுபாடு காட்டுவதில்லை. நீ தான் இந்தியா உன்னிடத்தில் என் இந்தியாவை நான் காணுகிறேன்".

பின் (1921) தாகூர் சுதேசி இயக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் உலகப் பண்பு என்ற பெயரில், அழகின் ஆனந்தக் கூத்தைப் படம் பிடித்தார். இதைப்பற்றி ரோமன் ரோலண்ட் 'கலைக் கனவின் முன் உலகத்தின் துன்பங்கள் எல்லாம் திரண்டு' எனக்கு வாழ்வில்லையா? என்று கேட்பது போலிருந்தது என்கிறார். தாகூரின் தேசியம், இந்துத்துவத்தைத் தாண்டிய உலகளாவிய

மனித வழிபாடாக இருந்தது. ஆனால், சுதேசியத்தை உண்மையின் அக விழிப்பாகவும் இந்தியப் பண்பாட்டினை உணர்வதாகவும் அவர் கண்டார்.

இந்திய மறுமலர்ச்சியும் தேசிய எழுச்சியும் இந்தியர்கள் படைத்த ஆங்கில இலக்கியத்திலும் வெளிப்பட்டது. அரவிந்தரும் ஹைதராபாத்தில் வசித்த ஒரு வங்காளக் குடும்பத்தில் பிறந்த சரோஜினி நாயுடுவும் இந்தக் குழுவில் அடங்குவர். அரவிந்தர் பின்னர் முழுக்க ஆன்மீக வாதியாகிவிட்டார்.

கவிக்குயில் சரோஜினி நாயுடு இந்தியாவின் வானம்பாடியாக இறவாத இலட்சியக் கீதங்களை இசைத்த கவிஞர் மட்டுமல்ல; தாய்த் திருநாட்டின் விடுதலைக்கும் உயர்வுக்கும் தன் வாழ்வையே அர்ப்பணித்த விடுதலை வேட்கை கொண்ட ஒரு வீராங்கனை. அவருடைய வாழ்வும், வாக்கும் ஒரு இலட்சியத்தின், இருகூறுகளாகவே விளங்கின. ஜவஹர்லால் நேருவின் சொற்களிலே சொல்வதானால்,

> **“அவர் முதலிலே கவிஞராக வாழ்வைத் துவக்கினார். பிறகு அவரது வாழ்வையே ஒரு வீரகாவியமாக மாற்றினார்.”**

சுதந்திரப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு, அந்த வேள்வியில் தன்னை அவர் அர்ப்பணித்துக் கொண்டபோது, அவர் பேனாப் பிடித்துத் தாளில் கவிதை எழுத வில்லை; அவர் வாழ்வையே கவிதைப் பாடலாக மாற்றினார். அது மட்டுமல்ல; தேசியப் போராட்டத்திற்கு ஒரு கவிதைப் பண்பினையும் கலையழகினையும் ஊட்டிய பெருமை இந்தப் பெண் கவிமணியையே சேரும்'.

1879ஆம் ஆண்டு பிப்ரவரி 13ஆம் நாள் ஹைதராபாத்தில் பிறந்த சரோஜினியின் தந்தை அகோரநாத் சட்டோபாத்யா ஒரு விஞ்ஞான அறிஞர்; தத்துவ ஞானி. அவரது அன்னை சுந்தரி தேவி கவிஞர். ஒரு கலைக் கழகமாயிருந்த நல்ல குடும்பத்தில் வளர்ந்த அவர் நாட்டையே ஒரு குடும்பமாக நேசிக்கக் கற்றுக் கொண்டார்.

> **“எங்கள் இல்லம் இந்திய இல்லம், இந்துக்களின், பிராம்மணர்களின் இல்லமன்று ஏனென்றால் என் தந்தை சொன்ன மந்திரம் இது. 'இந்தியர்களுக்குள் கூட உன்னை நீ குறுக்கிக் கொள்ளாதே”.**

உலகக் குடிமகள் என்பதில் நீ பெருமை கொள். அனைத்து இந்தியாவின் நலத்துக்காக உன் இன்னுயிரையே அர்ப்பணிக்க உன்னைத் தயார் செய்து கொள்'. சென்னை மாநிலத்தில் முதல்வராக மெட்ரிகுலேஷனில் தேறி, லண்டனிலும் கேம்பிரிட்ஜிலும் உயர் கல்வி கற்றாலும், அவர் உள்ளம் கவிதையிலும் நாட்டுப்பணியிலும் தான் பெரிதும் நாட்டம் கொண்டது.

அவரது கவிதைகள் அவரது இசையுணர்வையும் அழகு வேட்கையையும் காட்டினாலும் அவை இந்தியப் பண்பினைப் பேசிய, இந்தியாவின் இதய கீதங்களாகவே விளங்கின. இந்திய நடனக்காரர்கள் பற்றி, இந்திய நெசவாளிகள் பற்றி, இந்திய நாடோடிகள் பற்றி, இந்தியக் காதலைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் இந்தியாவின் ஆத்மாவின் குரல்கள்தாம். எல்லையற்ற பழமைக்குள் தன் குரல் இளமையினைக் குவித்து வைத்திருக்கும் இந்தியாவை நோக்கி, 'எழு, அன்னையே எழு, உன் சோகத்தினை விடுத்து புத்துயிர் பெற்று எழு' வானத்து மண்டலங்களோடு கைகோத்த மணப் பெண்போல், தன் காலத்தின் வடுப்படாத வயிற்றிலிருந்து பெருமைகளைப் பெற்றுத்தா, அன்னையே, ஓ அன்னையே இன்னும் ஏன் தூங்குகிறாய்? விழித்தெழுந்து, உன் குழந்தைகளுக்காகப் பதில் சொல்'.

'எதிர்காலம் பலதிறத்த ஒலிகளுடன் உன்னை அழைக்கிறது. விண்முட்டும் பெருமைகளுக்கு, பிரகாசங்களுக்கு, அகன்ற வெற்றிகளுக்கு' என்று அவர் தாயகத்துக்குப் பாடிய திருப்பள்ளி எழுச்சி, நம் மக்களனைவருக்கும் விடுத்த அழைப்பேயாம். அவர் போரில் இந்திய வீரர்களுக்காகப் பாடிய உருக்கமான பாடலை அவர் சொற்களில் கேட்போம்.

**When the terror and tumult of hate shall cease. And life be refashioned on the anvil of neace. And when you honour the deeds of the deathless ones. Remember the blood of my maryrted sorg.**

வெறுப்பின் கொடுமையும் ஆரவாரமும் தணிந்து, அமைதிக் களத்தில் வாழ்வு புதுப்பிக்கப் பெறும்போது சாகாதவர்களின் செயல்களைப் போற்றும் போது, இலட்சியத்துக்கு இன்னுயிரை ஈந்த என் செல்வங்களையும் நினையுங்கள், பின்பகுதியில் அவரது வாழ்வு விடுதலைக்கு உழைத்த 'வீர காவியமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தேசிய உணர்வு கட்டபொம்மன் காலத்திலிருந்தே தொடங்கியிருந்தாலும், இந்திய தேசிய இயக்கத்தை ஒட்டி வள்ளலார் காலத்தில் தான் மறுமலர்ச்சி இலக்கியமாக வடிவம் பெற்றது. ம.பொ.சி. அவர்கள் ஆன்மீக ரீதியில் இந்து சமூதாயத்திய நால்வருள் ஒருவராக அவரை அடையாளம் காட்டுகிறார். இராஜாராம் மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஏனைய மூவர். இராஜாராம் மோகன்ராய்க்குப் பிறகு பிரம்மசமாஜ இயக்கத்தின் தலைவரான கேசவவேந்திர சென் 1864 இல் சென்னை வந்து வேதசமாஜம் என்ற பெயரில் பிரம்ம சமாஜத்தின் கிளையை நிறுவினார். (அது 1874 இல் பிரம்ம சமாஜம் என அழைக்கப்பட்டது). கடலூரில் சப்பேடு ஸ்ரீதர சுவாமி என்ற பிரம்ம சமாஜிக்கும் வள்ளலாருக்கும் உருவ வழிபாடு பற்றி வாதம் நடந்ததாகக் கூறுவர். வள்ளலாரின் அடிப்படைத் தத்துவம் 'ஆன்மீக ஒருமைப்பாடு. ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும் எவரும்' எனப்பாடினார். அவரது ஆறாம் திருமுறைப் பாடல்கள் 1885 இல் வெளியிடப்பட்டது குறிப்பிடத் தக்கது. 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' என்றும் அவர் துன்மார்க்க ஆட்சிக்கு எதிராகப் பாடியுள்ளார். அவரைப் பிளாவட்ஸ்கி என்ற ரஷ்யப் பெண்மணியும் சார்லஸ் ஹெய்ம்ஸ்த் என்ற ஐரோப்பியரும் 'மகாத்மா ராமலிங்கம்' என்றே குறிப்பிடுகின்றனர்.

கோபால கிருஷ்ண பாரதியின் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை', சமய வைதீகத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து வெளியிடப்பட்டது. இங்கே சேக்கிழாரின் சரிதம், சமுதாயப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப, உழவனின் கதையாக உருவெடுக்கிறது. மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் 'சர்வ சமய கீர்த்தனைகளும்' இக்காலக்கட்டத்தைச் சேர்ந்தவையே.

ஆனால் வேதநாயகம் பிள்ளையிடமும் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையிடமும் ஆங்கிலத் தாக்கம் மிகுதி. சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியத்தைத் தமிழிய அல்லது தமிழ் தேசியத்தின் முன்னோடி எனக் கொள்ளலாம். 'எத்திசையும், புகழ்மணக்க இருந்த தமிழணங்கே' என்ற தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமன்றி, நாஞ்சில் நாட்டைச் சேர பாண்டிய நாடுகளுக்கிடையே எல்லைப் பிரச்சினையாக்கித் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுகிறார்.

தமிழ் நாட்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு மற்றொரு காரணமான சங்க இலக்கிய மீட்சியும் இப்போதுதான் நடந்தது. குறிப்பாக 'ஐங்குறு நூறு', 'பதிற்றுப்பத்து' ஆகியவற்றை 1903-04 இல் உ.வே. சாமிநாத ஐயர் வெளியிட்டார். ஆங்கில ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட பரிதிமாற்கலைஞர் ஆங்கில மொழி, வடமொழி ஆதிக்கத்தை ஏற்கவில்லை. மொத்தத்தில் தமிழகத்தில் ஆரம்பத்திலிருந்து இந்தியத் தேசியம், தமிழியமாகவும் தழைத்தது. பாரதியிலேதான் தேசியம் முழுமையாக முகிழ்த்தது.

> **"பாரத தேசம் மற்றும் அன்னியதேசங்கள் பற்றி 2000 க்கு மேற்பட்ட பாடல்களைப் பாடிய பாரதி தமிழ், தமிழ் மொழி பற்றி ஆறே பாடல்கள் தான் எழுதினாலும் அந்தப் பாடல்கள் தமிழுலகத்திலே அவருக்கு நிலையான இடம் தந்துவிட்டன"**

என ம.பொ.சி. கூறுகிறார். சுருங்கச் சொன்னால், தேசியத்தோடு தமிழ் மொழியைத் தமிழ் மொழியோடு தேசியத்தைக் கலந்து கொடுத்ததாலேயே, பாரதியார், அழியாப்புகழ் எய்திவிட்டார். பாரதியின் தேசியப் பாடல்களில் தெய்வீகத்தின் நிழல் மிகுதி. அவர் தேசியத்தைப் புதிய இறையுணர்வாக உயர்த்தினார். நமக்கு நன்மை வரவேண்டுமெனில் பாரத மாதா கோயில் என்று ஓர் ஆலயம் ஏற்படுத்தி அதில் தினம் பூஜை முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் எனக் கூறினார். இவருடைய கவிதையின் தெய்வீக உணர்வுக்கு வங்கமொழித் தாக்கமும் ஒரு காரணம்.

பாரதிக்கு 1902ஆம் ஆண்டிலிருந்து 1903ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்தான் தேசபக்தி உணர்வு நெஞ்சில் ஆழமாக வேர் கொண்டது என தொ.மு.சி. ரகுநாதன் உறுதிபடக் கூறியுள்ளார். அது 1905 இல் வங்கப் பிரிவினையை யொட்டி எழுந்த தீவிர தேசிய இயக்கத்தில் மேலும் கொழுந்து விட்டு எரிந்தது. அப்போதுதான் அவர் கல்கத்தா சென்று நிவேதிதாவையும் தரிசித்து உபதேசம் பெற்றார். இதன்பின் 1909 இல் 'ஜென்மபூமி' என்று சுதேசகீதத் தொகுதி வெளியிட்டார். அதன் முன்னுரையை இக்கட்டுரையின் முடிவுரையாகக் கொள்ளலாம்.

> **"சூரியன் உதித்தவுடனேயே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும் புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுக் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே நாட்டில் ஒரு புதிய ஆதர்சம்**

– ஓர் மார்க்கம் தோன்றுமேயானால், மேம்மக்களின் நெஞ்சனைத்தும் இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர் போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய தேசபக்தி என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையோனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அந்த அன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்".

# பாரதியின் கவிதைகளில் தெய்வ தரிசனமும், தேச தரிசனமும்

**பா**ரதி ஒரு தத்துவக் கவிஞன் என்பதைவிட ஒரு தரிசனக் கவிஞன் என்பதுதான் பொருந்தும். அவரது கவிதையின் மின்னல் கீற்றுக்களில் தத்துவ வெளிச்சம் தெரிந்தாலும், அவர் உண்மையை அழகாகக் கண்டு, அழகில் உண்மை ஒளிந்திருப்பதை உணர்கிறார். அவரது கவிதை விண்ணை மண்ணுக்கிழுத்து வருகிறது. அவர், மண்ணில் விண்ணைத் தரிசிக்கின்றார். வானில் மின்னிடும் வாழ்வுத் தத்துவத்தையும் கண்ணில் தெரியும் வானத்தையும் ஒரு சேரக் கண்டு அதைச் சொல்லில் தெரியும் சுடரொளியாக்கினார். அவர் கவிதைகளில் தெய்வ தரிசனமும் தேசதரிசனமும் இணைந்திருப்பதைக் காணலாம்

பாரதியின் கவிதைகளின் அடிப்படைக் கருத்தாக்கம், 'அத்வைதம்' எனப் பலரும் அறிவர். பிரமத்துக்கும், பிரபஞ்சத்துக்கும் மனித ஆத்மாவுக்கும் பேதமற்ற நிலையை உணர்ந்தவர் பாரதி. ஆனால் பழைய வேதாந்தம், பிரம்மம் என்ற முழுமைக்கு முதலிடம் தந்த பாரதீயம், அந்த முழுமையை மண்ணிலும் மனிதத்திலும் கண்டது. டாக்டர் சச்சிதானந்தன் கூற்றில் "A cardinal doctrine of Vedanta is the oneness or the essential unity of all things which are filled with the same divine spirit" உன்னுடைய ஆத்மாவும், உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுகு - எல்லோரும் ஒரே உயிர், அந்த உயிரே தெய்வம்' என்று 'இனி' என்ற கட்டுரையில் பாரதி கூறுவது இதையே. ஆனால் இந்த ஒருமைப்பாடு படைப்புகளின் தனித்தன்மையினை ஏற்றுத் தாண்டிய தன்மையே தவிர அதனை மறுப்பதல்ல என்று சுவாமி விவேகானந்தர் கூறுவார்.

**And this is the practical side of Vedanta. It does not destroy the world but it explains it, it does not destroy the person, but explains him, it does not destroy the individuality but explains it, by showing the real individuality. It does not show that the world is vain, and does not exist,**

பாரதி இந்த உலகத்தை, வாழ்வை, மனிதனைப் பொய்யாகக் கருதவில்லை. 'கனவில் இதோர் கனவு' என்று வாழ்வைச் சொன்னாலும் இதை உண்மையான கனவாகக் கருதினார்.

*"நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம் சொற்பனந்தானா? - பல தோற்ற மயக்கங்களோ? நிற்பதுவே, நடப்பதுவே, கருதுவதே, நீங்களெல்லாம் அற்பமாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ? வானகமே, இளவெயிலே, மரச் செறிவே, நீங்கள் எல்லாம் கானல்நீரோ? வெறுங் காட்சிப் பிழைதானோ? போனதெல்லாம் கனவினைப் போற்புதைந்தழிந்தே போனதானால் நானுமோர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ? காலமென்றே யொரு நினைவுங் காட்சியென்றே பல நினைவும் கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ, சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால், சோலை பொய்யாமோ? இதைச் சொல்லோடு சேர்ப்பாரோ? காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்த வெல்லாம் காண்பமன்றோ? வீண்படு பொய்யிலே-நித்தம் விதி தொடர்ந்திடுமோ? காண்பதுவே உறுதி கண்டோம், காண்பதல்லால் உறுதியல்ல, காண்பது சத்தியம், இந்தக் காட்சி நித்தியம்"*

என்ற பாரதி கூற்று, அவர் சங்கரரின் மாயாவாதத்தைத் தாண்டிய தத்துவ நிலையைக் காட்டுகிறது. அவரது அத்வைதம், சாக்தத்தோடு இணைந்து, சக்தி வழிபாடாக மலர்ந்து, வாழ்வு ஏற்பாகப் பரிணமிக்கிறது. 'மூர்த்திகள் மூன்று பொருளொன்று, அந்த மூலப் பொருள் ஒளியின் குன்று, நேர்த்தி திகழுமந்த வொளியை- எந்த நேரமும் போற்று சக்தி என்று' என்று

பகரும்போது சக்தியை இறைவனின் மூலமாகக் காண்கிறார். 'இன்ப வடிவாகி நிற்பாள் துன்பமெலாமவள் இழைப்பள் இஃதெலாமவள் புரியுமாயை - அவள் ஏதுமற்ற மெய்ப் பொருளின் சாயை' என்று மாயைக்குப் புதுவிளக்கம் தருகின்றார். அதைப் பிரபஞ்சத்தின் இயக்க சக்தியாக, பேர் ஆற்றலாகக் காண்கிறார். அது ஆண்மையின் ஆற்றலையும் அன்பின் கனிவையும் ஒரு சேரப் பெற்றது.

**மூலப் பழம் பொருளின் நாட்டம் – இந்த**
**மூன்று புவியுமதன் ஆட்டம்.**
**காலப் பெருங்களத்தின் மீதே – எங்கள்**
**காளி நடமுலகக் கூட்டம்**

என்று இந்தப் பேராற்றலின் நடத்தில் உலகங்கள் இயங்குவதாகக் காட்டுகிறார். இதில் புதுமை என்னவென்றால், புதியதிற் புதுமையான புரட்சிக்கும் இவ்வாற்றலே இயங்கு சக்தியாக இருப்பதனால், மாகாளி பராசக்தியின் கடைக்கண் பட்டு, ஆகாவென யுகப்புரட்சி எழுந்ததாக ஆர்ப்பரிக்கிறார்.

பாரதியின் சக்தி அனந்தம், எல்லையற்றது, முடிவற்றது. அது பஞ்சபூதங்களை இயக்குவது மட்டுமின்றி அண்ட கோளங்களையும் சுழலச் செய்வது

“தூமகேது அநேக லட்ச யோசனை தூரமான தனது வாலை இழுத்துக் கொண்டு திசை வெளியில் மகா வேகத்தோடு சூழலுகின்றது. எதனால்? சக்தியினால், அந்தத் தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒரு மண்டலமாகத் தன்னைச் சுற்றி வரும்படி சூரிய கோளம் நியமிக்கிறது. எதனால்? சக்தியினால்? 'சக்தி கண்ணுக்குத் தெரியும் காட்சிகளின் கரு, இயக்கங்களின் மௌன அச்சாணி பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு, எனவேதான் அசையாமல் அசைவு காட்டுகிறது. 'சடத்தைக் கட்டலாம், சக்தியைக் கட்டலாமா?”

என்று வினவுகிறார். அந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை. . . .வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும். . . . பழைய தலையணை அதிலுள்ள பஞ்சையெடுத்துப் புதிய மெத்தையிலே போடு, மேலுறையைக் கந்தை யென்று வெளியேஎறி, அந்த வடிவம் அழிந்துவிட்டது. வடிவத்தைக் காத்தால் சக்தியைக்

காக்கலாம். அதாவது சக்தியை அவ்வடிவத்திலே காக்கலாம். வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை, I change, but I cannot die என்று ஷெல்லி கூறும் indestructability of matter என்ற தத்துவம் மட்டுமன்றி matter-ல் energy குவிந்திருப்பதையும் குறிக்கிறார். இந்த ஆற்றலை அணுவுக்குள் அணுவாக, அண்டசரா சரங்களுக்குள் பொதிந்திருக்கும் பேராற்றலாக, ஓட்டத்தின் ஊடுநிலைத்த நிலையாகக் கல்லில் ஒளிந்திருக்கும் அறிவொளியாகப் புல்லில் ஒளிந்துகிடக்கும் வயிரப்படையாகக் காண்கிறார்.

அல்லி னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங்கண்டார்
கல்லி னுக்கு ளறிவொளி காணுங்கால்
கால வெள்ளத் திலே நிலை காணுங்கால்
புல்லி னில்வயி ரப்படை காணுங்கால்
பூத லத்தில் பராசக்தி தோன்றுமே.

பாரதியின் சக்தி தத்துவம் பாரத சக்தி தரிசனமாகி பாரதத்தின் பெண்மையின் ஆற்றலை வெளிக்கொணரும் வாழ்வுத் தத்துவமாக விளங்கியது. 'பிரமன் மகள், கண்ணன் தங்கை, சிவன் மனைவி, ஏன் பிரமனுக்கும் கண்ணனுக்கும் தாய், என்பது மட்டுமல்ல, மனையாளும் தெய்வம் என இறைமையைத் தன் இல்லத்திலேயே கண்டு வழிபட்டவர் 'சிவன் நீ சக்தி உன் மனைவி. விஷ்ணு நீ, லக்ஷ்மி உன் மனைவி. பிரம்மா நீ, சரஸ்வதி உன் மனைவி' என்பார் சக்தியே நாளும் தன்னைப் புதிய உயிராக்கும் ஆற்றல், உயிர்த்தீ, இன்பம் மற்றும் எல்லையில்லாத துன்பம், அமுது பாரதியிலே சக்தியே பரம் பொருளாகப் பிரம்மமாகவும் அதன் ஆற்றலாகவும் காட்டப்பட்டுள்ளது. அல்லது அத்வைதிகள் பிரமத்துக்குத் தருகின்ற இடத்தைப் பாரதி சக்திக்குத் தருகிறார். அந்தச் சக்தியைச் சமுதாயத்தை இயக்கும் சரித்திரச் சக்தியாகவும் காண்கிறார்.

பாரதியின் அக்கினித் தத்துவம் அவரது சக்தி தத்துவத்தோடு இணைந்ததே.

'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்,
அதை அங்கொரு காட்டிலோர்
பொந்திடைவைத்தேன்.
வெந்து தணிந்தது காடு, தழல் வீரத்திற் குஞ்சென்றும்
மூப்பென்று முண்டோ?
தத்தரி கிட தத்தரிகிட தித்தோம்'

என்ற பாடலில் வரும் அக்கினிக்குஞ்சை 'ஒரு சின்ன நாச சக்தியாக' சி.சு. செல்லப்பா கருதினால் 'ஆக்க சக்தியாக விஜய பாரதி கருதுகிறார். அக்கினிக்குஞ்சு-ஆர்வம் எனப்படுவதாகிய ஆக்க சக்திகளினின்று கனன்று பெருகிப் பெருந்தீயாக வளர்ந்து உள்ளம் என்னும் காட்டில் உள்ள தீய சக்திகளை யெல்லம் அழித்து நாசமாக்கக் கூடிய பெருஞ்சக்தி படைத்திருக்கிறது. ஆனால், 'ஆக்கம் தானாவாள், அழிவு நிலை தானாவாள்' என்று பாரதி கூறும் பராசக்தியே அது, சிட்டி, தமது பாடல்களில், ஒரு தேவியின் மகன் குமரிமைந்தன் என்றெல்லாம் அக்கினியைப் பாரதி குறிப்பிடும்போது முருகனையே பாவிக்கிறார்' என்கிறார். 'வேலன் அல்லது சுப்பிரமணியக் கடவுள் என்பது ஆத்மாவின் வீரிய ரூபமாகிய அக்கினித் தேவனுக்குப் பெயர். இஃது வேதப் பொருள்' என்று வேலன் பாட்டுக்கான அடிக்குறிப்பில் பாரதி குறிப்பதையும் சுட்டிக்காட்டுகிறார். வில்லினையொத்த புருவம் வளைத்த வேலவனை, 'பெருங்கனலே' எனப் பாரதி குறிப்பிடுவதையும் காட்டுகிறார். குகனைக் குகையில் வரும் கனல் என்பதில் தவறில்லை. 'குகைக்குளங்கே இருக்கும் தீப்போல' என்கிற தொடரையும் தொடர்புபடுத்துகிறார். இந்தக் கனல் குண்டலினி சக்தியின் வெளிப்பாடு. எனவே பாரதியின் வேதாந்தம், கௌமாரம், சாக்தம் ஆகியவற்றின் இணைப்பாக மலர்கிறது. அவைமட்டுமன்றி,அவன் போற்றும் ஆற்றல், புனிதத்தீ மட்டுமன்று, தீமையை அழிக்கும் புரட்சித் தீயுமாம். காணி நிலத்தில், காட்டு வெளியினில் காவலுறும் மாதாவும் அவள்தான், கவிதையின் மூலப் பொருளான கன்னியும் அவள்தான். கோல்ட்ரிட்ஜின் குப்ளாகானில் நெருப்புத் தன்மையுடன் இணைந்து கவிதை ஊற்றாவதுபோல் பாரதியிலே சக்தி கண்ணனாகவும் காட்சியளிக்கிறது. 'சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகனென்போம். சங்கரனென்று உரைத்திடுவோம் கண்ணனென்போம்' என்று கூறுகிறார். பாரதியின் கண்ணனிலே ஆண்மை- பெண்மை குரு-சிஷ்யன் அரசன்-அடிமை என்ற பேதமற்ற தன்மையைக் காணலாம். இதில் மிக முக்கியமானது பாரதி கண்ணனைக் கண்ணம்மாவாக்கி அவளைத் காதலிப்பதுதான். இது ஆத்மாவுக்கும், பரம்பொருளுக்கும் காலவெளியில் காலம் கடந்து காலாகாலமாய் நடக்கும் காதலே. ஆனால் இந்தக் காதல் வழி மனிதக் காதலுக்குத்தான் பாரதி தெய்வீகத் தன்மையை வழங்குகிறார். இன்னொரு நிலையில் பார்த்தால், கண்ணனை, மனிதக் காதலுக்கு உட்படுத்துகிறார். கண்ணனைச் சேவகனாக்கி, மனித சகோதரத்துவத்துக்கும்,

உழைப்பின் தெய்வீகத்துக்கும் ஒரு மூலப்படிவமாகப் படைக்கிறார்.

எப்படி பாரதியின் தெய்வ தரிசனத்தில் மனிதப் பண்பினை ஏற்றிப் பாடியுள்ளாரோ அப்படி அவர் தேச தரிசனத்தில் தெய்வீகக் காட்சி தெரிகிறது. பாரதி கண்ட தெய்வீக-தேசிய சங்கமத்தின் மூலப்படிவம் சக்தியே. இந்தக் கருத்தாக்கத்துக்குப் பக்கிம் சந்திரரும் நிவேதிதாவும் அவருக்குப் பெரிதும் உதவியிருக்க வேண்டும். பக்கிம் சந்திரரின் 'ஆனந்த மடத்தில்' தான் பூமியை மாதாவாக வழிபடுவது சிறப்பாகப் பேசப்படுகிறது. அதில், பவானந்தன் என்ற சந்தானன் 'வந்தே மாதரம், சுஜலாம், சுபலாம், மலயஜ சீதலாம் சச்ய ஸ்யாமலாம் மாதரம்' எனப்பாடும்போது மகேந்திரன், 'சச்ய ஸ்யாமலா வானமா தாயார்' எனக் கேட்கிறார். மேலும் மகேந்திரன் மண்ணைப் பற்றிப் பாட மகேந்திரன், 'இது தேசமல்லவோ? மாதா அல்லவே?' என்றான். பவானந்தன் அதற்குக் கூறும் மறு மொழி முக்கியமானது. 'நாங்கள் வேறு மாதாவை ஒப்புவதில்லை, ஜனனீ ஜன்மபூமிச்ச ஸ்வர்க்காதபி கரீயசீ, பிறந்த நாட்டை நாங்கள் தாயாகப் போற்றுகிறோம். எங்களுக்கு வேறு அன்னை இல்லை, உடன்பிறந்தார் இல்லை, மனைவி இல்லை, மக்கள் இல்லை, வீடில்லை, வாசலில்லை. எங்களுக்கு இருப்பது எல்லாம் அந்த ஜன்ம பூமியே. இனியநீர்ப் பெருக்கினள் இன்கனி வளத்தினள், தனிநறு மலயத் தண்காற் சிறப்பினள் பைந்நிறப் பழனம் வரவிய வடிவினள், ஆகிய ஜன்ம பூமியே' என்றான். மகேந்திரன் பாட்டின் கருத்து விளங்கியவனாய், 'அப்படியானால் திரும்பவும் பாடு' என்கிறான். இந்தப் பாடலைப் பாரதி இனிய நீர்ப்பெருக்கினை என்று அழகிய தமிழில் பெயர்த்ததோடு 'வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்' என்று அவரே ஒரு பாடலும் எழுதினார். 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' போன்ற பாடல்களிலும் பாரதி இந்தியாவை ஒரு தெய்வமாகத் தரிசித்தார். 1906-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி வெளியான சுதேசமித்திரன் இதழில் ஓர் வேண்டுகோள் வெளியிட்டார்.

> **"தமிழ்ப் புராணங்களிலும், இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம், கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்பட மாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையின் சான்று விளங்கும் பெரு மக்கள் புதியனவாக தேசபக்திப்**

*பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக்கொள்ளப்படும்'.*

இங்கே அவர் பண்டைத் தமிழ்ப் பாடல்களில் பாரத நாடு முழுமையும் பரவிப்பாடும் பாடல்களைக் கேட்கும் போது, தேசியத்தின் வேரைப் பண்டைய இலக்கியத்திலே காணவிரும்பும் அவா தெரிகிறது. பழைய நாட்டு வருணனைகளை விளக்கும்போது, அவரது தேசம் பற்றிய கருத்து (Concept of nation) இயற்கை அமைப்பை - ஒட்டியதாக மட்டுமின்றி, எல்லாப் பகுதிகளும் உணர்வு வழியாக இணைந்த புதிய இந்திய தரிசனமாக மலர்வதைக் காணலாம்.

சங்கத் தமிழ் இலக்கியத்தில், முதற் பொருளாக இடம் குறிக்கப்பட்டாலும் அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணை சார்ந்ததாகவே இருந்தது. 'சிலப்பதிகாரத்'தில் தான், அது புகார், மதுரை, வஞ்சி என அரசியற் கூறுகளைக் குறித்து, தமிழ்நாட்டுக் கனவாகவும் மலர்ந்தது. இங்கேயே வடவர்கள் வருகையாலும், பொதிகை-இமய இணைப்பாலும் ஓரளவு இந்தியக் கனவும் இடம்பெறுகிறது. கம்பனிலே, கோசலநாடு காவிரி நாட்டோடு கலக்கிறது. இராமன் இந்தியப் பண்பாட்டின் குறியீடாக உருவகிக்கப்படுகிறான். ஆனால் பாரதியிலேதான் முழுமையான இந்தியதேச, தேசிய உணர்வு படம் பிடிக்கப்படுகிறது.

ஆனால், பாரதி தமிழ் மொழியைப் பற்றிப் பாடிய அளவுக்குத் தமிழ் நாட்டினைப் பற்றிப் பாடவில்லை. மொழிவழித் தமிழனாக உணர்ந்தாலும் பாரதியில் பாரத தேசம் தான் பெரிதும் பேசப்படுகிறது. 'மன்னும் இமயமலை எங்கள் மலையே, மாநில மீதது போல் பிறிதில்லையே', என்று- இமயத்தால், கங்கையால், உபநிடதத்தால் காண்டீபத்தால் பாரதம் பெற்ற பழம் பெருமையை வாயார வாழ்த்தினார். இந்தப் பரந்து விரிந்த பாரதத்தின் மொத்தப் பண்பாட்டையும் சுவீகரித்துக் கொண்ட பாரதி, 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியிருந்தது இந்நாடே, அவர் முந்தையர் ஆயிரமாண்டுகள் கூடி மகிழ்ந்ததும் இந்நாடே' என்று தன்னை இந்த மண்ணோடு ஒரு நீண்ட பாரம்பரியச் சங்கிலியால் இறுகப் பிணைத்துக் கொண்டார். மண்ணின் வழித் தன் முந்தையரோடும், முந்தையர் வழி அவர் வாழ்ந்த இந்த மண்ணோடும் பந்தத்தையும், சொந்தத்தையும் ஏற்படுத்திக் கொண்டார். அந்தத் தாயை, 'வந்தே மாதரம் வந்தே

மாதரம்' என்று ஒரு புதிய தேசிய உணர்வோடு வாயார வாழ்த்தி வணங்கினார்.

பாரதியின் தேசியப் பாடல்களில் ஒரு பழம்பெரும் நாட்டின் அகவிழிப்பின் ஆனந்தக் கூத்தைக் கேட்கிறோம். ஒரு நாட்டின் உண்மையான சுதந்திரம் அது தன்னைத் தானே உணர்ந்து கொள்வதுதான். (It is the joyous self discovery of a nation - an awakening to its own true identity). ஆனால் நாடு என்பது வெறும் மலையும் கடலும் வயலும் காடும் மட்டுமல்ல. அது அங்கு வாழும் மனிதர்களால், அவர்களது ஒன்றுபட்ட உணர்வால், இலட்சியத்தால், பாரம்பரியத்தால், பண்பாட்டால் உருவாவது. எனவேதான் 'வெள்ளிப் பனிமலையின் மீது லாவுவோம் மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்' என்று இந்திய தரிசனக் கவிதை படைக்கிறார். இமயத்தில் உலவுவதாகச் சொல்லுகிறார். மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவதாக அகக் கண்களில் தரிசிக்கிறார். நம்முடைய துறைமுகங்களில் பிறநாட்டு வாணிகர் வந்து மொய்ப்பதாகக் காட்டுகிறார். காகிதங்கள் செய்வோம், ஆயுதங்கள் செய்வோம் என்று அறிவையும் ஆற்றலையும் இரு கண்களாகப் பாவித்தார். அனைத்துக்கும் மேலாக இந்திய மண்ணில் வாழும் பல்வேறு இனத்தவரும் மொழியினரும் ஒருணர்வால் உந்தப்பட்டு, எல்லோரும் ஒரு குலமாக, ஒரு குடும்பமாக வாழ்வதைத் தன் தரிசனக் கவிதையில் கண்டுகளிக்கிறார்.

"வங்கத்தின் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" என்கிறார்.

"கங்கை நதிப் புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்.

சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்" என்று பண்டமாற்றுப்போல், பண்பாட்டுச் சங்கமத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இங்கே, இதயங்களுக்கிடையே இடைவெளி இல்லாததனால், காசி நகரத்திலே பேசுவது காஞ்சியிலே கேட்கிறது.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகளோ ட்டிவிளை யாடிவரு வோம்

என்று கூறும்போது, இந்திய நாட்டின் மொழி இன பேதமற்ற ஒருமையை உணர முடிகிறது. ஆனால் இங்கே ஒருமை, வேறுபாடுகளற்ற வெறுமையில்லை. வேறுபாடுகளை ஏற்று இணைந்த முழுமை (Unity and not uniformity). மேலும் அது, வெறும் தேசிய ஒருமைப்பாடு மட்டுமன்று; மனித இனத்தின் ஆன்மீக ஒருமைப்பாடு. இப்படிப்பட்ட கனவின் விரிவாக்கமாகத்தான், "**சிங்களத் தீவினுக் கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்**" என்று நாட்டுக்கும் நாட்டுக்குமிடையேயுள்ள சுவரினை நீக்கி, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இணைப்பினை ஏற்படுத்துகிறார். 'பாலம்', 'வீதி' என்ற சொற்கள், பாரதியின் அகன்று விரிந்த இலட்சியப் பார்வையில், எவ்வளவு பெரிய இடைவெளி கூட மிக எளிதாக அடைத்துவிடக் கூடியதாகத் தோன்றுவதை உணர்த்துகின்றன. இலங்கையும் தென்னிந்தியாவும் ஒரு பிரம்மாண்ட உலக நகரத்தின் இரு தெருக்களாகக் காட்சியளிக்கின்றன.

பாரதியின் பார்வையில் அகலப் பாங்கில் மட்டுமின்றி, உயரவாக்கிலும் பேதங்களற்றுப் போய் விடுகின்றன. 'சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்று சொல்லிவிட்டு 'சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்' என்று கூறும் போது சந்திரமண்டலத்துக்கும் சந்தித் தெருவுக்குமிடையே வேறு பாடற்ற நிலையிலே பேசுகிறார். அது மட்டுமன்று; வானையளக்கும் அறிவியல் அளவுக்கு சந்தித் தெருப் பெருக்கும் கலையைச் சாத்திரமாக்கி உயர்த்துகிறார். பாரதியின் பாடல்களிலே கீழ்-மேல், ஆத்மா-உடல், ஆண்-பெண் என்ற முரண்பாடுகளற்ற நிலையினைக் காணலாம். சந்திரமண்டல இயலையும், சாத்திரம் பெருக்கும் உடல் உழைப்பையும் ஒன்றாகக் காண்கிறார்.

பாரதி சமூகத்தின் அனைவரது விடுதலைக்காகவும்-தீயர், புலையர் முதலான எல்லோரது விடுதலைக்கும் பாடினாலும் அவர் பெண் விடுதலைக்கே முதலிடம் வழங்கினார். பாழ்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் பெண்கள் அடிமைகளுக்கு அடிமைகளாக இருப்பதைக் கண்டு, அதை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்புகிறார். 'சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் பாரினில் இங்கு வந்தோம்' என்று புதுமைப் பெண்ணைப் படம் பிடித்துக் காட்டும் பாரதி, 'பாஞ்சாலி சபதத்தில்' மகாபாரதத்தைப் பெண்ணிய நோக்கில் மாற்றிப்

படைக்கிறார். பாரதியாரைப் பாரதக் கதை பெரிதும் கவர்ந்திருந்தாலும், அதில் பாஞ்சாலி அவைக்கு இழுத்துவரப்படுகின்ற பகுதியை மையமாக்கி 'பாஞ்சாலி சபதம்' படைத்ததன் நோக்கம் இந்திய நாகரிகத்தின் ஒரு மிகப் பெரிய அவல அத்தியாயத்தைப் படம் பிடித்து, அதைத் தாங்குகின்றவளாக மட்டுமல்லாமல் அதைத் தாண்டுகின்ற ஆற்றலின் உருவகமாகப் பெண்மையைக் காட்டுவதே. ஷெல்லி, ஈஸ் கைலசின் 'அடிமைப்படுத்தப்பட்ட ப்ரோமிதியஸ்' என்ற நாடகத்தை விடுதலையடைந்த ப்ரோமிதியஸ் (Prometheus unbound) என்று கவிதை நாடகமாக மாற்றியதும் இந்த அடிப்படையிலே. ப்ரோமிதியஸ் தன் விலங்குகளை உடைத்தெறிவதற்கு ஏசியா என்ற பெண்தான் உந்து சக்தியாக இருக்கிறாள். ஷெல்லி தாசன் எனத் தன்னைக் கூறிக் கொண்ட பாரதி, பாண்டவர்களின் வீரம் கிளர்ந்தெழுந்து, தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வினாலும் தருமம் மறுபடியும் வெல்லும் என்று காட்டி உலகில் அறம் தழைக்க நடந்த பாரதப் போரின் மூலக்கனலாகப் பாஞ்சாலியைப் படைக்கிறார். அதுமட்டுமன்றி, பாரதத்தின் அடிமை வரலாறு பாஞ்சாலியின் அடிமை நிலையிருந்து ஆரம்பமாவதாக அவர் கருதியிருக்கிறார். எனவேதான் பாரதத்தின் விடுதலையைப் பாட விரும்பிய பாரதி, அந்த விடுதலைப் போராட்டத்தின் முதற்குரலைப் பாஞ்சாலி எழுப்புவதாகப் படம் பிடிக்கிறார். இப்படிச் செய்யும் போது, பாரதி துரியோதனனையும் துச்சாதனனையும் மட்டும் குறை கூறவில்லை. பாஞ்சாலி அவைக்கு அழைக்கப்படும்போது, பழைய பதிவிரதா தர்மப்படி, பேசாமல் எழுந்து வராமல்

> "நாயகர் தாம் தம்மைத் தோற்றபின் – என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை – புலைத் தாயத்திலே விலைப்பட்ட பின் – என்ன சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார்"

என வாதிடுகிறாள். தருமனுக்கும், தம்பியருக்கும் அவர்களை இழந்த பிறகு தன்னை அடகு வைக்க உரிமையில்லை என நம்புகிறாள். ஆனால், 'தன்னையடிமையென விற்றபின்னும் தருமன் நின்னையிழப்பதற்கு நீதியுண்டு', என்று ஒரு பெரியவர் கூறும்போது, இந்த மண்ணில் பெண்மைக்கு எழுதப்பட்ட அடிமைச் சாசனம், நீதியாக வேஷம் போட்டு நிற்பதைக் காண்கிறோம். அடிமைகளுக்கு அடிமைகளாகச் சந்தையில் விற்கப்படும் பொருளாக மாறிய பெண் கொதித்தெழ வேண்டும்

எனக் கருதியதால்தான், பாஞ்சாலியைச் சூளுரைக்கச் செய்கிறார். கிருதயுகத்தின் எழுச்சிக் குரலாகப் பெண்மையின் குரலைப் படைத்த பெருமை பாரதிக்கு உண்டு. பாஞ்சாலியைப் பாரத சக்திகாக, அதன் புதிய ஆற்றலின் பழைய வடிவமாக, பழைய ஆற்றலின் புதிய குரலாக ஒரு சேரப் படைக்கிறார். பாஞ்சாலியில் கன்னியும் காளியும் சங்கமமாகிறாள். பாஞ்சாலியில் சக்தியின் ஆற்றல் பெண்மையின் ஆற்றலாகப் படைக்கப்பட்டுள்ளது. 'பாரதி கண்ட தெய்வ தரிசனத்தில்' நஜன் கூறுகிறார். பாரத வம்சம் என்ற பாண்டவ குலத்தின் சக்தியாக விளங்கிய பாஞ்சாலி பாரத சக்தியாகிய புதிய இந்தியாவிற்கு அறிகுறி. பாஞ்சாலி பாரத சக்தியாகி, பராசக்தியுமாகிறாள்'. எனவேதான் பாஞ்சாலியின் வெற்றியைப் பாரத சக்தியின் வெற்றி எனப்பாடுகிறார்.

தேவர்கள் பூச்சொரிந்தார்— ஓம்
ஜய ஜய பாரத சக்தி யென்றே

பாரதத்தைப் பெண்மையாகப் பூஜித்த பாரதி, பெண்மையில் பாரதத்தின் அவலத்தையும் ஆற்றலையும் ஒருங்கே கண்டார். அதனால்தான் அவரால் பாஞ்சாலியைப் பாரதி சக்தியாக உருவகிக்க முடிந்தது. பாரதியின் தெய்வ தரிசனத்திலும் தேசதரிசனத்திலும், சக்தியே, பெண்மையே முதலிடம் பெறுகிறது.

# பாவேந்தர் பாடல்களில் தேசியமும் தமிழியமும்

**பா**ரதி, தமிழ் வழித் தேசியக் கவி என்றால், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ்த் தேசியக் கவி என்பது அனைவரும் அறிந்ததே. பாரதியிடம் தேசிய உணர்வு தமிழ்க் கவிதைப் பெருக்காக வெளிவந்தாலும் அவர் அவ்வப்போது தமிழ்மொழி பற்றியும், தமிழ்நாடு பற்றியும் கவிதைகள் பாடியிருந்தாலும், அவருடைய பாடல்களின் முதன்மையான கருப்பொருள் மனிதத்தின், தேசியத்தின் தெய்வீக மாண்புதான். ஆனால் பாவேந்தர் புரட்சிக் கவிஞர் புனைந்து புகழ் பெற்ற பாடல்கள் எல்லாம் தமிழையும், தமிழ்நாட்டையும் மையமாகக் கொண்டவை. இந்திய வரலாற்றிலும் தேசிய உணர்வு பிறகு மொழி மாநில உணர்வுகளாக மாறியது. எனவே பாரதியின் இந்தியத் தேசியமும் பாவேந்தரின் தமிழ்த் தேசியமும் முற்றிலும் முரண்பட்டவை எனக் கொள்ள முடியாது. இவற்றை ஒரு வகையான பரிணாம வளர்ச்சியாகத்தான் கருதவேண்டும்.

ஆனால் பாவேந்தரும் முதலில் தெய்வ பக்திப் பாடல்களிலும், பாரதி நெறியில் பாடிய தேச பக்திப் பாடல்களிலும் விடுதலை பற்றிப் பாடிப் பிறகு தான் இந்திய தேசியத்தில் ஒரு விதமான கசப்பு ஏற்பட்டு முழுக்க, முழுக்க தமிழியக் கவிஞராகவும், தமிழ் இயக்கக் கவிஞராகவும் உருவானார். அவரது பாரத தேசப் பாடல்களும் விடுதலை வேட்கை பற்றிய பாடல்களும் அவருடைய கவிதைத் தொகுதிகளில் இடம் பெறாமல் போய்விட்டன. அவற்றுள் சிவலற்றை இக்கட்டுரையில் காண்போம். ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் (வெளியீடு 2) வந்துள்ள பாடல்.

**மன்னும் இமயமலை வடக்காம் – புகழ்**
**வாய்ந் திருக்கும் குமரி தெற்காம் – நாம்**

பன்னும் தொடர்ச்சி மலை இரண்டு – மற்ற
பக்கங்களில் அமைந்த துண்டு.

பாரத நன்னாடு
பழமைபெற்ற நாடு – தினம்
சாரத் தமிழிலதைப்பாடு !

முன்னை வணங்கும் உமை போன்றாள் – அவள்
முப்பதுகோடி மைந்தர் ஈன்றாள்
அன்னை வாழ்கென வாழ்த்தி – மற்றும்
அவளுக்குறும் பகையைத் தாழ்த்தி

ஆர்வத்தினில் ஏறு
தாரணிக்குள் வீறு – கொண்ட
பாரத புத்ரனென்று கூறு!

இந்தப் பாடலில் 'மன்னும் இமயமலை' மற்றும் 'பழமை பெற்ற நாடு' என்ற தொடர்களில் பாரதியின் தாக்கம் தெரிந்தாலும் மன்னும் இமயமலை என்பதற்கு அடுத்துப் புகழ் வாய்ந்த குமரியையும் கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலைகளையும் இந்தியாவின் எல்லைகளாகக் கூறும்போது அவரது தென் இந்தியப் பற்றும், தனித் தன்மையும் தெரிகின்றன.

அடுத்து அவர் எழுதிய தேசிய விடுகவி ஒன்றைப் பார்ப்போம்.

கங்கைநிதி தலையில்உண்டு சிவனார் அல்ல
காலடியிற் குமரி யுண்டு, ராமன் அல்ல,
சங்கை யற்ற வயதுண்டு கிழவி அல்ல,
சாத்திரத்தின் ஊற்றணையாள் கலைமா தல்ல ;
எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன் அல்ல
ஏற்றுண்ணும் எண்ணமில்லை இறுமாப் பல்ல
மங்கை என்று பாடிடுவர் புலவ ரெல்லாம்
மற்றிதனை இன்னதென வழுத்து வீரே.

பாரத நாடு பற்றிய இப்பாடலில் இறைமை பற்றிய பழைய தொன்மங்கள் இந்தியாவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பெண் குழந்தையை நோக்கிய பாட்டில், இந்தியாவை ஒரு குடும்பமாக உருவகிக்கிறார் பாவேந்தர்.

மொய்த்திருக்கும் உன்சமூகம் முப்பத்து முக்கோடி
வங்கத்து வீரருன்றன் வாழ்கையிலே சம்பந்தி
மீசைத் தெலுங்கர்களும் வில்லர்களும் மைத்துனர்கள்
அமிழ்தக் கவிகள் அம்புவிக்குச் சொல்லி வைத்த
தமிழ் நாட்டு வீரரெல்லாம் சண்பகமே, சொந்தத்தார்

நாட்டுக்கு நூலிழைக்கும் நல்கையருன்
அக்கையர்கள்
வீட்டில் துணி நெய்யும் வீரருன்றன் அம்மான்கள்
கன்னியாகுமரி முதல் கங்கை இமயம் வரைக்கும்
உன்னிரத்தம் சேர்த்த உடம்புடையார்
பாரதத்தார். . .

இந்தப் பாடலிலும் தமிழரைப் பற்றி பெருமிதத்துடன் குறிப்பிடுவது நோக்குதற்குரியது.

'காலப்பெருங் கடலில்' எனத் தொடங்கும் பாடலில் பாரதியின் 'காலமாம்' என்ற பாடலின் சாயல் தெரிகிறது. அதில் நான்கு சாதிகள் பற்றிப் புதிய விளக்கம் தருகிறார்.

"இயக்கல்" மாற்றுதலும் – ஒருங்
"கிணைத்தல்" "உணர்த்தலாம்"
செயலின் நான்குபெயர்–இவை
செய்வது நால் வருணம்
இயக்கல் சூத்திரராம்– மாற்றல்
இயம்பும் வாணிபராம்
முயற்சி கொண்டிணைத்தல்–தன்னை
முடித்தல் வல்லரசர்.
உணர்த்தல் பார்ப்பனராம்–அன்னை
உரையின் சீர்த்தி கண்டாய்
பணத்தில் சாதியில்லை–ஏழைப்
பறையர் தாழ்மையில்லை
பிணத்தில் செங்கையில்லை–அது
பெரிதும் தாழ்ந்தது தான்
துணைக்கு நான்கு மல்லாமல் ஒன்றைத்
தூண்டிடில் தீமையென்பாள்

அதே 'காலகட்டத்தில் 'தேசசேவகனில்' வெளி வந்த 'சிலதர்மங்கள்' என்ற பாடல் இராவணனையும் துரியோதனனையும் அவர்தம் தன்மான உணர்வுக்காகப் போற்றுகின்றார்.

தென்னி லங்கை யிராவணன் தன்னையும்
தீய னென்னும் துரியனையும் பிறர்
என்ன சொல்லி யெவ்வாறு கசப்பிலும்
இன்று நானவர் ஏற்றத்தைப் பாடுவேன்
இன்னு மிந்தச் செயலற்ற நாட்டினில்
எத்தனை துரியோதனர் வாழினும்
அன்ன வர்தமைக் கொல்ல முயன்றிடும்
அந்த கன்தனை நான்கொல்ல முந்துவேன்
நெஞ்சி லுற்றது செய்கையில் நாட்டுதல்
நீசமன்று மறக்குல மாட்சியாம்
தஞ்ச மன்று பிறன்கையில் தாழ்கிலாத்
தன்மை யாவதுவீரன் முதற்குணம்
நெஞ்சி லூறிக் கிடந்ததம் பூமியை
நேரில் மற்றவர் ஆண்டிடப் பார்த்திடும்
பஞ்சை யன்று, துரியன் இராவணன்
பாரதக் குலம் வேண்டிடும் பண்பிதே

பாவேந்தரின் சுதந்திர உணர்வு, சுய மரியாதை உணர்வாக, சாதி பேதமற்ற மனிதம் போற்றுதலாக வளர்ந்ததால்தான் சுதந்திரம், அமரத் தன்மை என்ற பாடலில் நான்கு வருணத்தையும் நான்கு வகை நிலையாகக் காணாமல், ஒவ்வொருவரிடமும் இருக்கும் நான்குவகைப் பண்பாகக் காட்டுகிறார்.

தேவர்கள் யார் என்று கேட்பீர்—வீரம்
சேர்ந்திடும் வாய்மை படைத்தவர் தேவர்
ஆவதும் தீவதும் எண்ணா—தறம்
ஆண்மைத் தனத்தில் இயற்றுவர் தேவர்
வில்லைப் பிடிக்கின்ற தோளும் – நல்ல
வேதம் படிக்கின்ற மேலான நெஞ்சம்
நல்ல வியாபார நோக்கும் – விதை
நட்டுப் பயிர்செய்யும் தாய் போன்ற அன்பும்
நாலும் நலங்குதலின்றி—ஒரு
நாயும் எறும்பும் அழுங் குரலின்றிச்
சீலம்படத் தங்கள் நாட்டைத் – திறம்
செய்து முடித்தவர் தேவர்கள் என்பேன்

இதே போல், அவரது ராட்டைப் பற்றிய பாடலிலும் முருகன் பற்றிய பாடலிலும் இறைமையையும் சுதந்திரத்தையும் இணைத்துப் பேசுகிறார்.

தேவர்க்கு விடுதலை தந்திடத் தேவி
இந்திரன் தோளுக்கு வச்சிரம் ஈந்தனள்
பார்த்தனுக் களித்தது பாசுபதாஸ்திரம்,
இராமனின் உரிமையைக் காப்பதற் கென்றே
இராமனின் தோளினில் வில்லொன்றையிட்டனள்.
கண்ணன் கையிற் சக்கரம் அளித்தனன்,
கண்ணன் உலகைப் பகைகொன்று காத்தனன்.
இதோஎம் விடுதலை என்றனள் நாமெல்லாம்
எங்கென்று கேட்டதில் இராட்டினம் காட்டினாள்.
இராட்டினம் தந்தனள் எங்கள் மாசக்தி,
மாசக்தி வாழ்க அன்னவள்
தேசத்தில் வாழ்க பாரத நிலமிதே'.

வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா
உன்கையிலுண்டு
வீணில் நாங்கள்பட்ட தெல்லாம் சொல்லவோ–
நின்பால்
வேண்டி நிற்பதெல்லாம் இன்ப மல்லவோ–இந்த
ஆழ்கடல் புவிமே லெமக்கினி
தான பாரத பூமியை நீ
அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய்–
வானில்
எட்டவே உரிமைக்கொடி தூக்குவாய்

இதைப் பற்றி மன்னர் மன்னன் கூறுகிறார். 'மயிலம் முருகனிடம் வேண்டிய சுப்புரத்தினத்தின் பாட்டு, நடையிலே பழமையாக இருந்தது. கருத்தோ முற்றிலும் புதுமையாகும். இவ்வுலகம் நிலையற்றது-இவ்வுலகின் இன்பமெல்லாம் நீர்க்குமிழி போன்றவை. எனக்கு வீடுபேற்றினை அருள்வாய் முருகா என வேண்டுதல் செய்த நிலைமாறி, நாட்டிற்கு விடுதலை வாய்க்க வேண்டும் என்று பாடல் இயற்றும் இந்த நோக்கு. அந்த நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் பாரதி தொடங்கி வைத்த இந்தப் புதுவழியில் சுப்புரத்தினம் வீறுநடை போட்டுச் சென்றார்'. பாவேந்தரின் தாயின் மணிக்கொடி பற்றிய பாடல் பெரிதும் பாரதி அடியொற்றியே பாடப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களைத் தந்த பெரும்புவிக்கே நல்ல மக்களைத் தந்த நிலம்-அது பாக்கியம் என்று பணித்திருக்கும் பாரத அன்னை நிலம்-எங்கள் ஆக்கையும் ஆவியும் அன்ன என்றவரி 'முந்தை

இருட்காட்டில் முகிழ்த்த முழு நிலவே' என்ற அவர்தமிழ் வணக்கத்துக்கு முன்னோடியாக உள்ளது.

பாரதிக்குப் பிறகு சில காலம் இப்படி தேசிய-தெய்வீக பாடல்கள் பாடிய பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தோடு இணைந்து அறிவு சார்ந்த சமத்துவம் நோக்கிய தமிழை மையமாகக் கொண்ட சமுதாயப் பாடல்களைப் பாடிப் புரட்சிக் கவி எனப் பெயர் பெற்றார். இந்த மாற்றத்துக்குச் சேரன்மாதேவி குருகுலத்தில் நிகழ்ந்த சாதி வேறுபாட்டுப் பூசலும் ஒரு காரணம். ஆனால் இந்த மாற்றம் தான் பாவேந்தரை உண்மையாக உலகுக்கு இனம் தெரியவைத்தது. பாரதியடியொற்றி ஏறக்குறைய அவர் சாயலிலே பாடியவர் அந்த நெறிநின்று, தன்னை உணர்ந்து தன் மொழியின் சிறப்பை உணர்ந்து, தன் இனச் சிறப்பையும் உணர்ந்து உத்வேகத்துடன் பாடிய பாடல்களே அவரது ஆழ்மன உணர்வுப் பெருக்கின் வெளிப்பாடு. Harold Bloom என்பவர் The Anxiety of Influence என்ற நூலில், மேலை நாட்டுக் கற்பனையியக் கவிஞர்களான வேர்ட்சுவொர்த் போன்றார், மில்டனின் தாக்கத்தால் முதலில் தள்ளாடிப், பின் அந்த நெறியையே சற்று மாற்றி அவரவர் தனித் தன்மைகளை உணர்ந்து அதன் வழிக் கவிதை படைத்ததாகக் கூறுவார். மில்டன் இறைவனுக்குக் கொடுத்த இடத்தை வேர்ட்சுவொர்த், இயற்கைக்கும் படைப்பாற்றுலுக்கும் தந்து புதிய பாணியில் கவிதை படைத்தார்.

பாவேந்தரின் 1930 க்குப் பின் எழுதப் பெற்ற கவிதைகளில் பாரதியின் இறையியம், இயற்கையியமாகிறது. நாட்டு விடுதலை, சமுதாய சமத்துவமாக மாறுகிறது. தமிழ், இவற்றின் முழுமையான குறியீடாகிறது.

கவிஞரின் முதற்தொகுதி பாடல்களில் இந்த மாற்றம் முழுமை பெறுகிறது. அவரது 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்' இயற்கைச் சூழலில் மனிதக் காதலின் இயற்கைப் பேசப்படுகிறது. பழைய பர்வதம் பகுத்தறிவு மூலிகையின் தளமாகிறது. அனுமன் மலையைத் தூக்கிய அறிவுக் கொவ்வாத கதை மறுத்து மாற்றியமைக்கப்படுகிறது.

'காதல் நிசம், இக்கனிமுத்தம் மிக்க உண்மை' என்ற வாழ்வுத் தத்துவம் வஞ்சி வழியாக வலியுறுத்தப்படுகிறது.

இங்கே குப்பன், வஞ்சி காதலுக்குப் பின்புலமாக, பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள் ஆங்கிலேயர்கள் வழி மனித

சகோதரத்துவம் வலியுறுத்தப்படுகிறது. இவற்றுக்குத் தடையாக மூடநம்பிக்கை பேசப்படுகிறது. சஞ்சீவி மூலிகை பகுத்தறிவாகிறது.

**மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை**
**எக்களிக்க வேண்டும் இதயத்தில்**
**ஈதன்றி நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே**
**புல்லறிவைப் போக்கிய புதுநிலை தேடல் வேண்டும்,**
**மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?**
**எக்காரணத்தாலும் இன்மையிலே உண்மையுண்டோ?**
**மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும் உமை**
**நாடா திருப்பதற்கு நானுங்களையின்று சஞ்சீவி**
**பர்வதத்தில் கூப்பிட்டேன்**

என வஞ்சி இந்தத் தத்துவத்தை விளக்குகிறார். இந்தப் பாடலில் இந்தியாதான் பின்னணியாக உள்ளது.

**நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கை நதி**
**வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மை பொதியமலை**
**செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள்**
**தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன் மரங்கள்,**
**இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்**
**முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?**
**செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?**
**மூடப்பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்**
**ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்.**

அவர் பாடிய முதற்பாடலான 'எங்கெங்குக் காணினு சக்தி'யிலேயே சக்தி இயற்கையாகவும் மனித ஆற்றலாகவும் போற்றப்படுகிறது.

அவரது 'புரட்சிக்கவி'யில் தான் இது முழுமையான தமிழியமாக மாறுகிறது. இங்கே அமுத வல்லி-கவிஞன் காதல் இயற்கையாலும் தமிழாலும் வளர்கிறது. அதை அரசனின் நால்வருணக் கொள்கை அழிக்க முயல்கிறது. அப்போது கவிஞன் தான் சாவதைப் பற்றிக்கூடக் கவலைப்படாது தன்னால் தமிழுக்குப் பழி வந்துவிட்டதே என்றே வருந்துகிறான். அவன் அவையோரையும் மக்களையும் பார்த்துக் கூறுகிறான்.

**தமிழறிந்த தால் வேந்தன் எனை அழைத்தான்.**
**தமிழ்க்கவியென்றெனை அவளும் காதலித்தாள்.**
**அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ்,**
**என்னாவி**

> அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
> சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ என்
> தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?
> உமை ஒன்று வேண்டுகின்றேன். மாசில்லாத
> உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள்'.

பில்கணியக் கதையைத் தமிழை மையமாகக் கொண்ட புரட்சிக் காதல் காவியமாக மாற்றிய கவிஞர், மக்கள் பொங்கியெழுந்து மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சி மலரச் செய்ததாகப் பாடுகிறார். இங்கே பாஸ்டில் சிறை உடைத்தெறிவது பற்றிய பிரெஞ்சுக் கவிதை ஒன்றின் தாக்கம் இருப்பதாகக் கூறுவார்கள். இதன்பின் எழுதப்பட்ட எல்லாப் பாடல்களிலும், இயற்கை சார்ந்த, சமத்துவ வாழ்வின் குறியீடாகத் தமிழ் உயர்த்தப்படுகிறது. முதற்தொகுதியிலே, உலகம் தழுவிய பார்வையோடு, 'மானுடசமுத்திரம் நான் என்று கூவு' என எக்காளமிடுகிறார். இரண்டாம் தொகுதியிலிருந்து திராவிடம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டாலும் அது பெரும்பாலும் தமிழகத்தையும் தமிழியத்தையுமே குறிக்கின்றன. அவருடைய விடுதலைத் தத்துவம் பின்வரும் வரிகளில் தெளிவாகப் பேசப்படுகிறது.

> 'காழ்ச்சிந்தை மறச் செயல்கள்யாவும் வேண்டும்
> இராவணன் கீர்த்தி பெருக வேண்டும்'

> 'வெருட்டுவது பழம் பஞ்சாங்கம் என்றால்
> விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாம்'.

இங்கே பாவேந்தர் ஒரு சுயமரியாதை உணர்வுள்ள, சுரண்டலை எதிர்க்கின்ற, பழம்பஞ்சாங்கத்தை மறுக்கின்ற, செந்தமிழைச் செழுமை செய்து முழுமை பெறத் துடிக்கின்ற தமிழியக்கவியாக மலர்கிறார். 'பாண்டியன் பரிசி'லிருந்து 'தமிழச்சியின் கத்தி' வரை, அவர் தமிழர்தம் தன்மான மீட்சி பற்றிதான் பெரிதும் பேசுகிறார். 'பாண்டியன் பரிசில்' வரும் பேழை, ஒரு பண்பாட்டுக் குறியீடு. தமிழச்சியின் கத்தி, தனது மானம் காக்க மட்டுமன்றித் தமிழ்மானம் காக்கவும் உயர்த்தப்படுகிறது. தமிழை அவர், தமிழர்தம் வாழ்வாகவும் வளமாகவும், உயிராகவும் உணர்வாகவும், கவிதைக்கு வாளாகவும், அசதிக்குச் சுடர் தந்த தேனாகவும், அனைத்து உறவாகவும், ஆழ்மன ஆற்றலாகவும் அறிவுலகப் பாலமாகவும் கண்டார். எனவே தான் 'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும் நான், நான், நான் எனத் தன்னைத் தமிழால்

அடையாளம் காட்டிக் கொள்கிறார். அவர் தமிழ் வழித் தன்னை உணர்ந்த போது, முழுமையான தன் கவிதை ஆற்றலையும் வெளிப்படுத்திய தமிழினக் கவியாக உயர்கிறார்.

ஆனால் இதைத் தேசியத்துடன் முழுக்க முரண்பட்ட நிலையாகக் கொள்ள முடியாது. எனவே தான் சீனப் படையெடுப்பின்போது, 'இமயச் சாரலில் ஒருவன் இருமினான் குமரி வாழ்வான் மருந்து கொண்டோடினான்' எனப்பாடினார். அதற்காகத் தமிழ், தமிழினம் பற்றிப் பாடியவற்றைக் குறுகிய சிந்தனையாகக் கொள்ள முடியாது. ராபர்ட் பான்ஸ், ஸ்காட்லாண்டின் தேசியக் கவியாக இருந்து கொண்டே உலகக் குறியீடாக உயர்ந்தது போல், பாவேந்தர் தமிழ்ப்பண்பாட்டு மீட்சிக் கவிஞராக இருந்த போது இந்திய நாகரிகத்தின் இன்னொரு பகுதியின் குரலாகவும், உலகப் பண்பாட்டின் ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

# நாமக்கல்லாரின் கவிதைகளில் காந்தியம்

> **"திலகர் விதைத்த வித்து, பாரதியாய் முளைத்தது, காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராய்த் தோன்றியது"**

என்றார் மூதறிஞர் ராஜாஜி.

> **"பாரதி தேசியக் கவி, பாரதிதாசன் செந்தமிழ்க் கவி, கவிமணி குழந்தைக் கவி, நாமக்கல்லார் காந்தியக் கவி. காந்தியத்தில் தம்மையே கரைத்துக் கொண்டு அந்த வண்ணக் குழம்பில் காந்தியைக் கவியாய் வரைந்து காட்டினார்"**

என்கிறார் புலவர் மா.கி. இரமணன். தாலுகா கணக்கராகவும் ஆசிரியராகவும் இருந்து வெளியேறிக் கிட்டப்பாவின் நாடகங்களுக்குத் திரை ஓவியங்களும் பாடல்களும் எழுதி வந்த அவர், விடுதலைப் போர் தமிழகத்தில் வேரூன்றியபோது, முழுமையான விடுதலைக் கவியாகவும், காந்தியக் கவியாகவும் முகிழ்த்தார். நாமக்கல்லாரும் இளமையில் புரட்சி வழிச் சுதந்திரம் பெற விரும்பிய திலகரிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். காசி இந்துப் பல்கலைக்கழகத் தொடக்கத்தின் போது காந்திஜியின் ஒளிவுமறைவில்லா உரையைக் கேட்ட பின் அவரது வாழ்வும் வாக்கும் ஒன்றிய தன்மையை உணர்ந்து, அவர் காந்தியத்துக்குத் தன் வாழ்வையும் வாக்கையும் அர்ப்பணித்தார்.

காந்தியடிகளின் தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது, ராஜாஜி தலைமையில் தமிழ்நாட்டில் வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது, அங்கு அணிவகுத்த தொண்டர் படையை உற்சாகப்படுத்தி நாமக்கல்லார் எழுதிய 'கத்தியின்றி ரத்தமின்றி', என்ற பாடல்தான் அவரை நாட்டுக்கும்

உலகுக்கும் உயரிய காந்தியக் கவிஞராக அறிமுகப்படுத்தியது.

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது,
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!
ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்
குயிர் பறித்த லின்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே!
குதிரை யில்லை யானை யில்லை
கொல்லும் ஆசை யில்லையே
எதிரியென்று யாரு மில்லை
ஏற்றும் ஆசை யில்லதாய்
கோப மில்லை, தாப மில்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணுங் மாசை யின்றியே

என்று காந்தியின் சத்தியப் போரை, எதிர்மறையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் எளிய இனிய சந்தத் தமிழில் படம் பிடித்துக் காட்டினார். இதை வெறும் இந்திய விடுதலைப் போராட்டமாக மட்டுமன்றி மானுடத்தை உயர்த்த வந்த மார்க்கமெனப் பாராட்டினார்.

'காந்தி என்ற சாந்த மூர்த்தி தேர்ந்து காட்டும் செந்நெறி, மாந்தருக்குள் தீமைகுன்ற வாய்ந்த தெய்வமார்க்கமே' என இதைப் பாராட்டினார். இப்பாட்டில் பரவசமடைந்த இராஜாஜி 'இந்நேரம் பாரதியார் இல்லையே என்று எண்ணினேன். ஆனால் அந்தக் குறையை நீங்கள் நீக்கி விட்டீர்கள்' எனக் கவிஞரைப் பாராட்டினார். காந்தியத்தின் சாரமாகச் காந்தியைக் கண்டவர் கவிஞர்.

சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் வேதமென்று சங்கூதுவோம்

என்று பாடிய அவர், 'சத்தியமே அவர் மந்திரம், சாந்தம் அவரது தந்திரம், சாத்வீகம் அவரது புதிய மதம்' என்றும் பாடினார்.

மனிதர்கள் கடவுள் ஆகார், ஆனால் கடவுள் மனிதர் ஆவார் என்று கூறிக் காந்தியை மனித உருவில் வந்த கண்ணுக்குத் தெரியும் கடவுளாகத் தரிசித்தார். வாய்மையும் அன்பும் இணைந்ததுதான் கடவுள் எனப் பேசினார்.

ஏட்டள விருந்த வேதம்
இதுவென எடுத்துக் காட்டி
எழுத்தள விருந்த கீதம்
செய்கையில் ஏந்தி நின்று
வீட்டள விருந்த காதல்
விருந்தொடு விரியச் செய்து
விருந்தள விருந்த நேசம்
வியன்பெரு நாட்டிற் காக்கி
நாட்டள விருந்த அன்பை
நானிலம்முழுதும் நீட்டி
நானிலத் தவர்க்கும் அன்பே
நாதனைக் காண்ப தென்று
காட்டினை, சொல்லா லல்ல
ஒழுக்கத்தால் கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க!

இந்தப் பாடலில் வீட்டளவில் உள்ள காதல் உலகளாவிய அன்பாகப் படிப்படியாக உயரமுடியும் என்ற திருக்குறளின் வாழ்வியல் தத்துவத்தைச் சொல்லடுக்குகள் வழியாகக் காட்டியுள்ளார். மேலும் இக்கவிதையில் வேதம் முதல் அன்பு வரையுள்ள உயர்தத்துவங்களைக் கண்ணுக்கும் கைக்கும் எட்டும் காட்சிப் பொருளாக்கிய காந்தியின் பெருமையை வேதம்/இது, எழுத்து/செய்கை என்ற முரண்பட்ட சொற்களை இணைத்துக் காட்டுகிறார். இறுதியிலும் காந்தியத்தின் அடித்தளம் சொல் அல்ல, கருணையும் ஒழுக்கமும் என வலியுறுத்தி அந்தக் கருணை வாழ்வில் வந்த காந்தி என்று காந்திக்கு கருணை ஒளி என்ற விளக்கத்தை எளிமையாகத் தருகிறார் கவிஞர். காந்தி தன் செயல் திறத்தால், கல்லாத எளியவர்க்கும் கடவுள் தன்மையைக் கண்ணாரக் காட்டுவதாக இன்னொரு இடத்தில் குறிக்கிறார். 'கடவுளை உலகில் யாரும் நேருறக் காண்பதில்லை' என்று பாடுகிறார். அனைவருக்கும் கருணை காட்டி அந்தக் கடவுளின் அன்புதனை நடைமுறை வாழ்விற் காணச் செய்த காந்தியே நமது

தெய்வம், காந்தி செய்த ஆன்மீகப் புரட்சி, அஹிம்சையால் அந்நியரை விரட்டியது மட்டுமன்று, நம்மக்களின் உள்ளத்தில் ஒளியும் உரமும் ஊட்டி, அதனை அவர்களே உணரவைத்து உயர்த்தியது தான். 'வையம் வாழ்த்தும் காந்தி' என்ற பாடலில்,

**அடிமையின் அச்சம் போக்கி**
**அச்சத்தை அடிமை யாக்கி**
**குடிகளைக் கோன்க ளாக்கி**
**கோன்களைக் குடிக ளாக்கி**
**மடமையை மதியாய் மாற்றி**
**மதிக்கும் ஓர் புதுமை கூட்டி**
**திடமுறச் செய்த காந்தி**
**திருக்கதை மறக்கலாமா?**

என வினவுகிறார். இந்தப் பாடலிலும் காந்தியப் புரட்சியில் எப்படி உயர்வும் தாழ்வும் பண்பின் அடிப்படையில் தலை கீழ் மாற்றம் அடைகின்றன என்பதை எளிய சொற்களில் காட்டுகிறார். புதிய அமைப்பில் அச்சம் அடிமையாகிவிடுகிறது, கோன்கள் குடிகளாகி விடுகின்றன, ஆனால் மடமை மதியாகும், மதி மடமையாக மாறுவதில்லை, மதி ஒரு புதுமை பெறுகிறது. இது கிராமியப் புரட்சியும்கூட எனவேதான் அடுத்து 'மேழி, செங்கோலாகிறது' எனச் சொல்கிறார்.

**மேழியின் சிறப்பினை மீட்டவர் காந்தி**
**ஏழையின் பெருந்துணை எமதரும் காந்தி**
**கோழையும் திடம்பெறக் கொடுத்தவர் காந்தி**
**வாழிய காந்தியின் வழிகொடு வாழ்வோம்**
**கள்ளினை ஒழித்தவர் கடனறி காந்தி**
**கதருடை தந்தவர் கணக்கறி காந்தி**

என்ற வரிகளிலும் காந்தியடிகளின் வாழ்வுத் தத்துவம், கிராம மேம்பாட்டையும், ஏழைகளின் ஏற்றத்தையும், மையமாகக் கொண்டது என்பதை உணரமுடிகிறது.

ஈடித் மானின் என்ற ஐரிஷ் புரட்சியாளரின் கருத்து இது:

"காந்தி தன் போதனைகள் மூலம் இந்தியாவின் ஆத்மாவுக்கு விடுதலை வழங்கினார். பாழ்பட்டுத் தாழ்வுற்றிருந்த அடிமைகளை அவர் மறுபடியும் மனிதர்களாக்கினார். தலைகளை உயர்த்தி,

**நம்பிக்கையொளி கண்களில் வீசத் தங்களது, முடிவான விடுதலை நோக்கி வீரநடைபோடும் மக்களாக்கினார். அப்போது அவர்கள் தங்களை நசுக்கியவர்களின் கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு இடம் தரவில்லை. பெண்கள் அவர்களது அடிமைத்தனத்தின் குறியீடுகளான திரைகளைப் பீடு கலந்த பணிவோடு, பணிவான ஞானச் செருக்கோடு, தங்களது சுயமரியாதையைத் திரும்பப்பெற்று, ரத்தம் சிந்தாத சுதந்திரப் போராட்டத்தில் ஆண்களோடு சரிநிகர் சமமாக வீரநடை போட்டார்கள். எல்லா வயது ஆண்களும் பெண்களும் அவர்களின் வாழ்வு ஒரு புனித தீச்சுடர் என உணர்ந்தனர். 'தங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஒரு கண்ணுக்குத் தெரியாத கதிரொளியில் வாழ்கிறோம்' என உணர்ந்தார்கள்".**

இந்த உணர்வினைத்தான் நாமக்கல்லார் கவிதைகளாக வார்த்துத் தந்துள்ளார்.

அவர் கருத்துப்படி, தியாகத்தின் மூலம் தான் முன்னேற்றம் காணமுடியும் எனக் காந்திஜி கருதினார். சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இவை எல்லாமே துன்பத்தைத் தாங்கும் விதியின் வெளிப்பாடுகளே. காந்தியடிகளின் கொல்லாமை மற்றும் பொய்யாமைக் கொள்கைகள் இந்தியாவின் இன்மைச் சித்தாந்தத்தின் புது வடிவமே. உபநிஷத்து இறைமையை 'நேதி, நேதி' எனக் கூறுவது இந்த அடிப்படையிலேயே இந்தியர்களுக்கு 'வேண்டாம்' என்று கூறும் ஆற்றல் வேண்டும் என விழைந்தார். இந்தியர்களின் செயலின்மையை ஒரு ஆக்கபூர்வ ஆயுதமாக மாற்றினார்.

ரொமய்ன் ரோலண்ட் காந்திஜிக்கும் தாகூருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு பற்றிப் பேசும்போது இதைக் குறிக்கிறார். காந்திஜியின் கோட்பாடுகளின் சிறப்பையும் அவரது சர்வபரித் தியாக உணர்வின் சுடரையும் தாகூர் இயக்கத்தின் உயிர் நிலையான மறுதளிப்புத் தன்மையைத் தாகூர் வெறுத்தார். 'இல்லை' என்று மறுக்கிற எல்லாவற்றினின்றும் தாகூர் இயல்பாகவே அருவருத்து ஒதுங்கினார்.

இந்தக் கொள்கையின் உறுதிதான் தாகூரை-வாழ்க்கையின் சகல இன்பங்களையும் அங்கீகரித்துப் புனிதமுறச் செய்கிற பிராமணத்துவத்தின் ஆக்க ரீதியான இலட்சியத்தையும்,

ஆசைகளையும் ஒழித்துவிட வேண்டும் என்று விதிக்கும் புத்த சமயத்தின் மறுதளிக்கும் லட்சியத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வைக்கிறது. தாகூரின் இந்த வாதங்களுக்குக் காந்திஜி பதில் கூறுகிறார்.

அங்கீகரித்து எடுத்துக் கொள்வது மாதிரியே சிலவற்றை வேண்டாம் என்று துறக்கும் கலையும் மிக மிக முக்கியமானதாகும். இந்த இரண்டு தன்மைகளின் கூட்டுறவிலேயே மனித சமுதாயம் முன்னேறுகிறது. உபநிஷத்து கர்த்தாக்களின் நிர்ணயிப்புப்படி பிரம்மம் என்பதன் பொருளே, இது அல்ல என்பதாகும். முடியாது என்று மறுக்கும் திராணியை இந்தியா இழந்துவிட்டது. காந்திஜி அந்த சக்தியை இந்தியாவுக்கு மீட்டுக் கொடுத்திருக்கிறார்.

ஆனால் காந்திஜியின் கொல்லாமை, பொய்யாமை ஒத்துழையாமை ஆகியன வெறும் எதிர்மறைக் கோட்பாடுகள் அல்ல.

ரோமன் ரோலண்ட் கூறுகிறார் : 'இந்தியாவின் நிஜமான ஆயுதம் இதுதான். சத்தியாக்கிரஹம் என்ற இந்த வேதவாக்கைப் போதித்ததன் மூலம் - அதன் வழி இந்திய மக்களுக்கு அவர்களது உண்மையான இயல்பினையும் அவர்களுக்குள் உறங்கிக்கிடக்கும் வலிமையையும் அவர்களுக்கு எடுத்துக்காட்டியதன் மூலம்- காந்திஜியின் மேதைமை பிரகாசிக்கிறது (64)

நாமக்கல் கவிஞரும் அஹிம்சைக்கு ஒரு அகன்ற ஆக்கபூர்வ வரையறை தருகிறார். 'காந்திவழி' என்ற பாடலில்,

"கொல்லாதிருப்பது, ஒன்றே தான், கூறும் அஹிம்சை
என்பதை மறுத்து 'எல்லாச் செயலிலும் நன்னோக்கம்,
இணைந்தது அஹிம்சை தன்னாக்கம்"

எனக் கூறுகிறார்.

காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகளான அஹிம்ஸையும் வாய்மையும் தமிழர்தம் வாழ்க்கை நெறி என்று பல இடங்களில் கூறியுள்ளார்.

அமிழ்த மொத்தே அறிவினில்
அழிவி லாத நெறிதரும்
தமிழ றிந்த சத்தியம்
காந்தி வாழ்ந்த தத்துவம் (தூய்மை ஜோதி)

என்றும் 'முன்பிருந்த தமிழறிஞர் சேர்த்து வைத்த மூதறிவே மோகன்தாஸ் கரம் சந்த்காந்தி' (சத்திய மூர்த்தி நம் காந்தி) என்றும், 'வள்ளுவர் மறுபடியும் வாழ்ந்தது போல், என்றும் தமிழ் நெறியோடு காந்தியத்தை இணைத்துப் பேசுகிறார். காந்திஜியை 'உருக்குறள்' எனவும் உருவகிக்கிறார். காந்தியத்தின் அடித்தளத்தை, அந்தச் சத்தியத்தின் உதயத்தைத் தமிழன் இதயத்தில் உணர்ந்த கவிஞர் காந்திய வழியில் கங்கை காவேரி ஒன்றாய் இணைந்து,

இந்திய அன்னை மகிழட்டும்
காஷ்மீர் ஆப்பிள் கன்னியா குமரி
மக்கள் தமக்குண வாகட்டும்
இமயப் பனியும் இளகியேவந்து இந்தியக் கடலைச்
சேரட்டும் இந்தியா நமதே இந்தியர் ஒன்றே

என்ற நல்லெண்ணம் வளரட்டும் எனக் கூறுகிறார். இதை ஒரு பூகோள ரீதியான ஒருமைப்பாடாகக் கருதாமல் உணர்வு வழி ஒருமைப்பாடாகப் பேசுகிறார்.

இமயம் தொட்டும் குமரி மட்டும்
இங்கி ருக்கும் யாவரும்
இந்தி யாவின் மக்க ளென்ற
சொந்தம் காணச் செய்குவோம்
சமயம் என்றும் ஜாதி என்றும்
சண்டை யற்று வாழவும்
சமதை யாக மொழிகள் யாவும்
சலுகை பெற்று வளரவும்
அமைதி யாக தேச சேவை
அச்ச மின்றி ஆற்றுவோம்;
அவதி மிக்க ஏழை மக்கள்
வறுமை போக மாற்றுவோம்;
நமது நாடு உலகி னுக்கு
நல்ல மார்க்கம் காட்டவே
நாங்கள் என்றும் பணிபு ரிந்து
வெற்றி மாலை சூட்டுவோம்.

சுதந்திர இந்தியாவைக் காந்திய நெறியில் இப்படிக் கற்பனை செய்து பார்க்கிறார்.

அவரவர் உழைப்பின் பலன்களை முழுதும்
அவரவர் உரிமையால் அடைந்து
சுவையுள வாழ்க்கைக்கு அவசியமான
பொருளெலாம் சுலபமாய்க் கிடைத்துப்
புவியினில் எல்லா வசதியும் பெற்றுப்
பூரணவளர்ச்சியிற் பொலிதல்
எவரொரு பேர்க்கும் மறுக் கொணா உரிமை;
இந்தியர் எமக்குமாம் இதுவே (சுதந்திர சபதம்)

என்று சூளுரைக்கிறார்.

காந்தியம் இந்தியரை மட்டுமின்றி உலகத்தோரையே உய்விக்க வந்த உயர் நெறி எனக் கவிஞர் கருதினார். 'காந்தியம் உலகைக் காக்கும்' என்ற பாடலில்

இன்பமும் செல்வமும் பொதுப் பொருள் ஆகும்
இரப்பவர் என்பதும் இல்லாது போகும்.
வம்பரும் வணங்கிடும் காந்தியின் போதம்
வளர்ப்பது வேநம் வாழ்க்கையின் கீதம்.

'சங்க நாதம்' என்ற பாடலில்

தீரர் ஞான காந்தி சங்கம்
திசைமு ழங்கக் கேட்குது,
சேர வாரும் மனித வாழ்க்கை
சீர்தி ருத்த வேண்டுவோர்

ஏனென்றால் காந்தியின் தேசபக்தி மனிதாபிமானம் என்ற தளத்தில்தான் உருவானது. காந்திஜி கூறுகிறார்.

"என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்கும் மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான். எனது தேசபக்தி ஏதோ நான் சம்பந்தப்பட்டதும் எனது தேசம் சம்பந்தப்ப பட்டதும் மட்டுமல்ல. நான் பிறந்த எனது தேசமான இந்தியாவுக்கு எனது பணிகளைச் செவ்வனே செய்வதற்காக இங்கிலாந்துக்கோ ஜெர்மனிக்கோ நான் தீங்கிழைக்க வேண்டியதில்லை. என் வாழ்க்கை நெறியில் ஏகாதிபத்தியத்துக்கு இடம் கிடையாது. ஒரு

**மனிதாபிமானி என்கிற முறையில் முழுமையான பக்குவம் பெறாத ஒரு தேசபக்தன் அந்த அளவுக்கு ஒரு தேச பக்தன் என்கிற அளவிலும் பக்குவம் அற்றே இருப்பான்'.**

*காந்தியின் வாழ்க்கையில் தன்னை மறந்து பக்திப் பெருக்கோடு பாடிய கவிஞர் அவரது மரணத்தின் போது பாடிய பாடல்களும் மறக்கமுடியாதவை.*

**தேர்ந்தவருள் காந்தியினும் தெளிந்தா ரில்லை**
**தெரிந்திருந்தும் மரணமிதில் தேடிப் பார்த்தால்**
**காந்தியையும் கடந்த பொருள் உண்டென்று**
**கட்டாயம் நாம் அறியக் கடவோம் அன்றோ**
*(ஜோதி மறைந்து கொண்டதே)*

*எனக் காந்தி என்ற சத்தியத்தின் நித்தியத்தைப் பேசுகிறார் 'காந்தி அஞ்சலி' யில்.*

**ஒப்புடன் உண்மைக் காக**
**உயிர்தர வேண்டும் என்றே**
**எப்படி விரும்பி னாரோ**
**அப்படி இறந்தார் காந்தி**

*என்று உண்மைக்காக வாழ்ந்து உண்மைக்காக மறைந்து, மாறாத உண்மையாக மாறியதைப் பேசுகிறார் கவிஞர். 'தூய்மையின் துணிவுண்டாக்கி துணிவினைத் தூய்மையாக்கி, தீமையைத் தீமையாகவே தீர்த்திட முடியாதென்று தாய்மையே செய்த காந்தி, தவம் செய்த தவமாம் அன்றே' என்று காந்தியின் சத்திய வேள்வியைக் கவிதை யாக்கிய கவிஞரின் கடைசிக் கவிதை 1972 ஆகஸ்டு சுதந்திர தின வெள்ளி விழாவையொட்டித் 'தமிழரசு' மலருக்கு எழுதிய 'கைகுவித்து வணங்குவோம்' என்ற கவிதைதான். அதில் அவர் சுதந்திர நாளை இப்படிப் போற்றுகிறார்.*

**அடிமை வாழ்வை நீக்கி அரசரான நாளிது**
**அஞ்சியர்க்கு அஞ்சி வாழ்ந்த அவதி விட்டநாளிது**
**கடமையோடு கண்ணியம் கட்டுப்பாடு மூன்றையும்**
**கண்ணைப் போல காப்போமென்று கையடித்த நாளிது.**

*நாமக்கல் கவிஞர் காந்தி நெறி தான் வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஆட்சி செய்ய வேண்டும் என விரும்பினார். 'படிப்பினை' என்ற பாடலில்*

கல்வியெல்லாம் காந்தி மணம் கமழவேண்டும்
கலைகள் எல்லாம் காந்தி குணம் காட்டவேண்டும்
சொல்வதெல்லாம் காந்தி அறம் சொல்ல வேண்டும்
சூத்திரமாய்க் காந்தி யுரை துலங்க வேண்டும்

என அனைத்திலும் கலந்த அத்வைதமாகக் காந்தியத்தைக் காண்கிறார் கவிஞர்.

காந்திஜி இலக்கியத்தின் அழகைவிட, சத்தியத்துக்கும், மனிதத் துயரை நீக்கும் தியாகத்துக்கும் முதலிடம் தந்தவர். கவியரசர் தாகூரிடம் இந்நிலையில் கருத்துவேறுபாடு கொண்டார். 'ஆனால் இப்பொழுது இன்னொரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கவிஞன் தனது வீணையைச் சற்றே மடியில் இருந்து இறக்கிவைக்கட்டும்' என்றார் காந்தி. மேலும் 'ஏன் நூற்க வேண்டும்?' என்ற கேள்விக்குப் பதிலளித்து, 'ஏனென்றால் எனக்குச் சொந்தமில்லா உணவை உண்கிறேன். மற்றவர்களைப் போல் மகாகவி தாகூரும் நூற்கட்டும். தன்னிடமுள்ள அன்னியத் துணிகளை அவரும் தீயிலிட்டுப் பொசுக்கிவிடட்டும் என்றார். 'கலையின் இனிய சிருஷ்டிக் கனவின் முன் உலகின் துயரமெல்லாம் திரண்டு எழுந்து நின்று, 'எங்கே எனது வியாபகத்தைத் துணிந்து 'இல்லை' என்று மறுத்துவிடு பார்க்கலாம்' என்று அதட்டிக் கேட்கும் அலறல் இது என்கிறார் ரோமய்ன் ரோய்லண்டு. இலக்கியங்களை மறுத்த மகாத்மா இலக்கியமாகவே வாழ்ந்து, இலக்கியங்களின் கருப் பொருளாகவும் விளங்கினார்.

காந்தி இலக்கியத்தில் நாமக்கல் கவிஞருக்கு மிக உயர்ந்த இடம் உண்டு. ஏனென்றால் காந்தியின் எளிமையான ஏற்றத்தை, தூய்மையான துணிவை, ஆற்றான அன்பை உள்ளத்தால் உணர்ந்து அதை எளிமையான சொற்களில் படைத்து எளிமைக்கு ஏற்றம் தந்தார். காந்தி வாழ்வில் செய்ததைக் கவிஞர் வாக்கில் செய்தார். 'உவமானம் வெறென்று உரைக்க ஒண்ணா உத்தமராம் காந்தியாரை' உவமையற்ற உண்மையாக (Imageless Truth) உருவகித்தார்.

உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைந்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பமும் தேக்குதடா

என்று எளிய சொற்களில் உணர்ச்சிப் பெருக்கோடு காந்தியின்

அற்புதத்தில் ஒன்றுகிறார். காந்தி கவிதை எழுதவில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான கவிதைகளின் ஆழ்நிலை அர்த்தமாக இருந்தார். இந்திய சமுதாயத்தின் ஆழ்மனத்தில் ஒளிந்திருந்த மௌனக் கவிதையின், சத்திய மூலத்தின் வெளிப்பாடாக விளங்கினார். ஒருவகையில், இந்த பிரம்மாண்ட தேசத்தின், அதன் பெரிய பண்பாட்டின் பிரம்மாண்டமான படைப்பிலக்கியம் அவர்தான். இன்னொரு நிலையில் இந்தக் கவிதையை உருவாக்கியவர்கள் இந்த நாட்டின் கோடானு கோடி மக்கள். அந்த நெஞ்சங்களில் ஒளிந்துகிடந்த உள்ளொளியை உலகுக்குக் காட்டிய உண்மையான கவிதை காந்திஜி. அந்த வாழ்வுக் கவிதையை வார்த்தையில் கவிதையாக்கத் தனக்குப் பேராற்றல் இல்லை எனக் கவிஞர் வருந்தினார்.

> கவிபாடிப் பெருமைசெய்யக் கம்ப னில்லை
> கற்பனைக்கிங் கில்லையந்தக் காளி தாசன்
> செவிநாடும் கீர்த்தனைக்குத் தியாகயரில்லை
> தேசிய பாரதியின் திறமுமில்லை

காந்தியம் என்ற சத்தியம் சொல்லுக்கடங்காத கவிதை. அந்த தெய்வீகக் கவிதையை எளிமையில்தான் உணரமுடியும். நாமக்கல்லாரிடம் கற்பனை குறைவு; ஆனால் காந்தியம் என்ற உண்மையை உணர்ந்து, அதை அப்படியே கவிதையாக்கும் உள்ளொளி இருந்தது. காந்தி என்ற வாழ்வுக் காவியத்தையும், காந்தியக் கவிஞரையும் வணங்குவோம்.

# தமிழ்ப்புதினங்களில் நாட்டு விடுதலையும் பெண் விடுதலையும்

புதிய இந்தியாவின் எழுச்சிக்கும் புதினங்களின் வளர்ச்சிக்கும் தொடர்புள்ளது. புதினங்களின் தோற்றத்தை இந்தியப் பெண்ணின் எழுச்சியோடும் தொடர்புபடுத்துவர். உண்மையில், புதிய இந்தியாவின் எழுச்சியைத்தான், தலைவிகளின் எழுச்சி மூலம், புதின ஆசிரியர்கள் காட்டியுள்ளனர்.

இந்திய மொழிகளின் வரலாற்றில் புதினங்கள் ஏறக்குறைய ஒரே காலத்தில் தோன்றின என்பது பலரும் அறிந்தவுண்மையே. தமிழ் மொழியில் முதல் புதினமான வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' 1879லும், முதல் தெலுங்கு நாவலாகிய வீரேசலிங்கம், பந்துலுவின் 'ராஜசேகர சரித்திரம்' 1880 லும், அப்பு நெடுங்குடி எழுதிய முதல் மலையாள நாவலாகிய 'குண்டலதா' 1887லும் எழுதப்பெற்றவை. இவையனைத்திற்கும், பக்கிம் சந்திரரின் 'ஆனந்த மடத்'திற்கும் (1869) உள்ள ஒற்றுமை நோக்கத்தக்கது. இவை அனைத்தும் பெண்கள் சந்திக்கின்ற அதிசய நிகழ்ச்சிகளை (adventures) அவர்தம் ஆற்றலாலும், மதிநுட்பத்தாலும் வெல்லும் திறத்தையும், கற்பனைப் பாங்கையும் எதார்த்தத்தையும் இணைத்துக் காட்டுகின்றன. அடிப்படையில் இவை புதிய இந்தியப் பெண்ணின் பரந்த உலகு நோக்கிய பயணத்தை, அவளது தனித் தன்மையை நோக்கிய பயணத்தைக் காட்டுவதாகச் சொன்னால் மிகையாகாது.

வங்க மண்ணில் தொடங்கிய சுதந்திரப் போராட்டப் பின்னணியில் உருவான பக்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்' இந்திய தேசிய எழுச்சியின் முதல் அங்கமாக மட்டுமன்றி இந்திய இலக்கிய மலர்ச்சியின் முதல் கட்டமாகவும் உள்ளது. அப்போது நடந்த சந்தானர்களின் போராட்டத்தில் கதாநாயகி கல்யாணியும் அவள் மகள் சாந்தியும் ஆணுடையணிந்து பங்கு பெறுகின்றனர்.

இந்தப் புதினத்தில் தான் பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' என்ற பாடலை அறிமுகப்படுத்துகின்றார். சந்தானர்களில் ஒருவரான பவானந்தர், கல்யாணியின் கணவரான மகேந்திரனிடம், மண்ணை மாதாவாகப் பூஜிக்கும் அவர்களது வழக்கம் பற்றிப் பேசும்போது தான் இப்பாடலைப் பாடுகிறார். இதில் புதிய இந்தியாவின் எழுச்சியின் உருவகமாக இரு பெண்கள், கல்யாணியும், சாந்தியும் படைக்கப்படுகின்றனர். அவர்கள் இருவரும் தம் தலைவர்களின் விடுதலை உணர்வுக்கு மிகவும் துணையாக உள்ளனர்.

சாந்தி தன்பதி பற்றிக் கூறுகிறாள்: 'என் பதியின் தர்மம் அவர் கையிலேயே இருக்கிறது, அவரைத் தர்மத்திநின்றும் பிறழச் செய்ய நான் யார்? இம்மையில் பத்தினிக்குப் பதியே தெய்வம். மறுமையிலோ, எல்லோருக்கும் தர்மமே தெய்வம். எனக்கு என் கணவர் உயர்ந்தவர், ஆனால் அவரை விட உயர்ந்தது என் தர்மம். என் தர்மத்தை விட உயர்ந்தது என் கணவரின் தர்மம்'.

இதற்குச் சத்யானந்தர் கூறும் மறுமொழியும் முக்கியமானது 'இதுவரைக்கும் நான் என் தாய்நாட்டைத் தான் அன்னையென்று அழைத்திருக்கிறேன். மற்றெவரையும் அன்று. ஏனென்றால் இனிய நீர்ப் பெருக்கும் இன்கனி வளமும் நிறைந்த இந்தப் பூமியை விட நமக்கு வேறு தாயில்லை. இப்போது உன்னைத் தாயென்று அழைக்கிறேன். நீ மாதாவாக இருந்து சந்தானர்களின் காரியத்தை நடத்த வேண்டும். அந்த இலட்சியம் நிறைவேற வேண்டிய ஏற்பாடுகளைச் செய். ஜீவானந்தனுடைய உயிரைக் காப்பாற்று. உன் உயிரையும் காப்பாற்றிக் கொள்'.

இறுதிவரை சாந்தியிடம் இதே உணர்வு நீடிக்கிறது அவள் 'ஜீவானந்தன் சந்தான தர்மத்தில் தொடர்வதற்கு இடையூறாக இருக்க மாட்டேன்' என்கிறாள்.

சாந்தி: 'அப்புறம் இமாலயத்தில் பர்ணசாலை கட்டிக்கொண்டு நாம் இருவரும் பரமனை வழிபடுவோம். பாரதமாதாவுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகும்படி வரம் கேட்போம்' என்கிறாள்.

அதுகுறித்து பக்கிம் சந்திரர் கூறுகிறார்:

'அப்போது அவ்விருவரும் எழுந்து கைகோத்துக் கொண்டு வெண்ணிலவு விரிந்திடும் அந்நள்ளிரவில் எல்லையற்ற

வெளியில் மறைந்து போயினர். ஐயோ அவர்கள் திரும்பவும் வருவாரோ, அம்மா? ஜீவானந்தனையொத்த புதல்வனையும் சாந்தியைப் போன்ற பெண்ணையும் நீ மீண்டும் பெறுவாயோ?'

இறுதியில் மகாபுருஷரும் சத்யானந்தரும் இணைவதைப் பக்கிம்சந்திரர் வர்ணிக்கிறார்.

'ஒளிபடைத்த மேனியரான அந்த இரு தவசிகளின் வடிவங்கள் மங்கலான நிலவொளியில் தெரிந்தன. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டிருந்தனர். ஞானம் வந்து பக்தியைப் பற்றிக் கொண்டிருந்தது. தர்மம் வந்து கர்மத்தைப் பிடித்துக்கொண்டிருந்தது. கல்யாணி (சுபம்) வந்து சாந்தி (அமைதி)யைப் பிடித்துக் கொண்டிருந்தாள். துறவு வந்து ஆசையை அடக்கிக் கொண்டது. இந்தச் சத்யானந்தரே சாந்தி; (அமைதி) இம் மகா புருஷரே கல்யாணி (சுபம்).'

இந்த நாவலையொட்டி எழுந்த பல இந்திய மொழிகளில் புதினங்கள், பெண்கள், எழுச்சி வழியாகத் தேசிய மறுமலர்ச்சியைப் படம்பிடிக்கின்றன. தமிழில் முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரத்'தில் தேசிய இயக்கப் பிண்ணணி அவ்வளவு இல்லாவிட்டாலும் தாய்மொழிப்பற்று, இந்தியப் பண்பாட்டுப் பற்று முதலியவற்றைக் காணலாம். பலர் ஆங்கிலம் மற்றும் அன்னிய மொழி நூல்களில் ஈடுபாடு காட்டுவதைப் பற்றியும் அதனைத் தவிர்த்துத் தாய்மொழியில் ஈடுபாடு காட்ட வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். அனந்தையன் என்பவன் எப்படி அந்நிய மொழி மோகத்தால் பண்பாட்டுச் சீர்குலைவுக்குட்பட்டான் என்பதைப் புதினம் விளக்குகிறது.

இங்கிலீஷில் சன்மார்க்கமான புஸ்தகங்கள் எத்தனையோ இருந்தாலும் அவைகளை அனந்தையன் வாங்குகிறதும் இல்லை. படிக்கிறதும் இல்லை. லெக்கி எல் (Lecky, L), ஸ்டீபன் (Stephen), பெயின் (Bain), டார்வின் (Darwin ), கமடி எஸ். (Comte S.), மில் (Mill), ஹெர்பட் (Herbert), ஸ்பென்ஸர் (Spencer), ஹக்ஸ்லி (Huxley), ஹ்யூம் (Hume), காலின்ஸ் (Collins), டின்டால் (Tyndall), வால்டேர் (Voltaire), முதலான வேத விரோதிகளுடைய கிரந்தங்களை அவன் படித்ததினால் தெய்வம் இல்லை; வேதம் இல்லை; பாபபுண்ணியங்கள் இல்லை; நரகம் மோட்சம் இல்லை; உலக சுகமே சுகம் என்கிற சித்தாந்தம் உள்ளவனானான். மேற்சொல்லிய சமய விரோதிகள் உலகத்துக்கு ஒரு சமயம்

அவசியந்தானென்றும் அப்படியில்லாதவரையில் அக்கிரமம் நடக்குமென்றும் ஒப்புக் கொண்டார்கள். அப்படியே வால்டேர் (Voltaire) ஒரு தேவாலயம் கட்டினார். ஹயூம் (Hume) சில சமயங்களில் கோவிலுக்குப் போனான். காலின்ஸ் (Collins) தன்னுடைய வேலைக்காரர்கள் தன்னைக் கொலை செய்யாமலும் திருடாமலும் இருக்க வேண்டியதற்காக அவர்கள் கோவிலுக்குப் போகும்படி கட்டாயஞ் செய்தான். ஹக்ஸ்லி (Huxley) பைபிள் (Bible) என்னும் சுவிசேஷத்தைப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கவேண்டுமென்று முயற்சிசெய்தான். டின்டால் (Tyndall) தன்னை யாராவது சமய விரோதியென்று சொன்னால் சண்டைக்கு வருவான். இவ்வகையாக மேற்படி வித்வான்களுடைய நூல்கள் ஒருவிதமாகவும் நடை வேறு விதமாகவும் இருந்தன. ஆனால் அனந்தையனுடைய வார்த்தையும் நடையும் ஒரே தன்மையாயிருந்தன. தெய்வம் இல்லை; பாப புண்ணியம் இல்லை யென்கிற சித்தாந்தத்தைத் தனக்குள்ளே வைத்துக்கொள்ளாமல் தன் பெண்சாதி பிள்ளைகள் முதலானவர்களுக்கு உபதேசிக்கவும் தானே துன்மார்க்கங்கள் செய்து அவர்களுக்கு வழிகாட்டவும் ஆரம்பித்தான். வழக்கு மன்றத்தில் அந்நிய மொழியில் வாதிடுபவர்கள் பற்றி ஞானாம்பாள் வழியாக இப்படிக் கூறுகிறார்:

"இங்கிலீஷ் அரசாக்ஷியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தமிழ்க் கோர்ட்டுக்களில், சில தமிழ் நியாயவாதிகள் தமிழில் வாதிக்காமல் இங்கிலீஷில் வாதிக்கிறார்களென்று கேள்விப்படுகிறோம். தேசபாஷையுந் தமிழ்! கோர்ட்டில் வழங்கா நின்ற பாஷையுந் தமிழ்! நியாயாதிபதியுந் தமிழர்! வாதிக்கிற வக்கீலுந் தமிழர்! மற்ற வக்கீல்கள் கக்ஷிக்காரர் முதலானவர்களுந் தமிழர்களே! இப்படியாக எல்லாந் தமிழ் மயமாயிருக்க அந்த வக்கீல்கள் யாருக்குப் பிரீதியார்த்தமாக இங்கிலீஷில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை! அப்படி வாதிக்கிறதினால் அவர்களுக்குத்தான் என்ன சிலாக்கியம்? மற்றவர்களுக்குத்தான் என்ன பாக்கியம்? நியாயாதிபதியாவது அல்லது வக்கீலாவது இங்கிலீஷ்காரராயிருக்கிற பக்ஷத்தில், இங்கிலீஷில் வாதிப்பது நியாயமாயிருக்கலாம். தமிழ் நியாயாதிபதி முன்பாகத் தமிழ் வக்கீல் இங்கிலீஷில் வாதிப்பது ஆச்சரியமல்லவா? ஜனங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதாகையால் ஐரோப்பியர்கள் கூட இத்தேச பாஷையில் பரீக்ஷைகொடுக்க வேண்டுமென்றும், அவர்கள் தேசபாஷையிலே சம்பாஷிக்கவேண்டுமென்றும் சட்டம்

ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தப்படி பரீக்ஷை கொடுத்து வருவதுமன்றிக் கட்சிக்காரர்களிடத்தில் தேசபாஷையிலே சம்பாஷிக்கப் பிரியப்படுகிறார்கள். அப்படியிருக்கச் சுதேசிகளான வக்கீல்கள் சொந்தப் பாஷையைத் தள்ளிவிட்டு அந்நிய பாஷையில் வாதிப்பது அசந்தர்ப்பமல்லவா?

தமிழ்நாடு தமிழ்மொழி பற்றி இப்படிக் கூறுகிறார்:

"எண்ணிறந்த தேவாலயங்களும், பிரமாலயங்களும் அன்ன சத்திரங்களும், நீர்வளமும், நிலவளமும், நாகரிகமும் ஆசார நியமங்களும் நிறைந்த இந்தத் தமிழ்நாடு, மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும், அப்படியே தமிழ் பாஷையும் சர்வோத்கிருஷ்டமான பாஷையென்றுஞ் சகலரும் அங்கீகரிக்கிறார்கள். அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று, சங்கப் புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்வான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுதும் ஏக சக்ராதிபத்தியஞ் செலுத்தி வந்த தமிழ் அரசியை இப்போது இகழலாமா? நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ். நம்முடைய மழலைச் சொல்லால் நமது தாய் தந்தையரைச் சந்தோஷிப்பதுந் தமிழ். நாம் குழந்தைப் பருவத்திற் பேச ஆரம்பித்தபோது முந்தி உச்சரித்ததும் தமிழ். நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டினதுந் தமிழ். தாய், தந்தை, குரு முதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ். ஆதிகாலம் முதல் நம்முடைய முன்னோர்களெல்லோரும் பேசின பாஷையும் எழுதி வைத்த பாஷையும் தமிழ். இப்போது நம்முடைய மாதா பிதாக்களும் பந்து ஜனங்களும் இஷ்டமித்திரர்களும் இதரர்களும் பேசுகிற பாஷையும் தமிழ். நம்முடைய வீட்டுப் பாஷையும் தமிழ், நாட்டுப் பாஷையும் தமிழ். இப்படிப்பட்ட அருமையான பாஷையை விட்டு விட்டுச் சமஸ்கிருதம் லத்தீன் முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்கிறவர்கள், சுற்றத்தார்களை விட்டுவிட்டு அந்நியர்களிடத்தில் நேசஞ் செய்கிறவர்களுக்குச் சமானமாயிருக்கிறார்கள். ஆபத்துக் காலத்தில் சுற்றத்தார் உதவுவார்களேயல்லாது அந்நியர்கள் எப்படி உதவ மாட்டார்களோ அப்படியே எந்தக் காலத்திலும் நமக்குச் சுயபாஷை உதவுமேயல்லாமல், அந்நிய பாஷைகள் உதவுமா? லத்தீனுக்கும் சமஸ்கிருதத்துக்கும் சொந்தக்காரர்கள் இல்லாமையால் அவைகள் இறந்துபோன பாஷைகளாயும் தமிழ்

இல்லாமையால் அவைகள் இறந்துபோன பாஷைகளாயும் தமிழ் முதலிய தேசபாஷைகள் ஜீவிக்கிற பாஷைகளாயும் இருக்கின்றன. பல பாஷைக்காரர்கள் ஒருவருடன் ஒருவர் கலந்து பேசுவதும் ஒருவருடைய கருத்தை ஒருவருக்கு வெளிப்படுத்துவதுமே பாஷாந்திரங்களைப் படிப்பதினால் உண்டாகிற முக்கிய பிரயோஜனமாயிருக்கிறது. ஒரு பாஷைக்குச் சொந்தக்காரர்களே இல்லாமலிருப்பார்களானால், அந்தப் பாஷையை நாம் படித்து யாரிடத்திலே சம்பாஷிக்கப் போகிறோம்! சமஸ்கிருதம், லத்தீன் முதலிய பாஷைகள் அதிகக் கடினமும் வருத்தமுமான பாஷைகளாயும் சீக்கிரத்தில் மறந்துபோகத் தக்கவைகளாயும் இருக்கின்றன. அவைகளின் இலக்கணம், இலக்கியம், தர்க்கம் முதலிய பல பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவைப் படிப்பதற்கு ஒரு புருஷ ஆயுசு போதாதென்று, அந்தப் பாஷைகளை உணர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். சம்பாஷணைக்கும் உலக வியாபாரங்களுக்கும் உபயோகமில்லாத அந்தப் பாஷைகளை அவ்வளவு பிரயாசைப்பட்டுப் படித்தும் பிரயோஜனமென்ன? ஆனால் சமஸ்கிருதமும், லத்தீனும் அதிக சிறப்பும் அழகும் அலங்காரமும் பொருந்திய பாஷைகளென்பதற்குச் சந்தேகமில்லை. அவகாசமுள்ளவர்கள் சொந்தப் பாஷைகளோடு கூட அந்தப் பாஷைகளையும் படிப்பது அதிக விசேஷந்தான்; ஆனால் சொந்தப் பாஷைகளை நன்றாகப் படிக்காமல் அந்த அந்நிய பாஷைகளிலே காலமெல்லாம் போக்குவது அகாரிய மென்றுதான் நாம் ஆக்ஷேபிக்கிறோம்".

வேதநாயகம் பிள்ளையின் புதினத்தில் செழிக்கும் தமிழ் உணர்வைத் தேசிய உணர்வின் முன்னோடியாகக் கருதவேண்டும். இதைத் தவிர கதையமைப்பில், பெண்மைக்கு முதலிடம் தரப்பட்டுத் தலைவி, தலைவனோடு பயணம் செய்து பிரிந்து ஆணுடையில் விக்கிரமபுரியிலே அரசுப் பொறுப்பை ஏற்கும் போதும் 'ஆனந்தமடத்'தின் சாயலைக் காணலாம். இந்தப் புதினத்திலும் இறந்து போனதாக நம்பப்பட்ட தலைவி புத்துயிர் பெறுகிறாள். 'பிரதாப முதலியார் சரித்திரத்'தில் அற உணர்வும், விந்தை நிகழ்வுகளும் மிகுதி. தலைவி ஆணுடை வழியாகத் தனது ஆளுமை உணர்வை உலகுக்குக் காட்டிப் பின், மறுபடியும் குடும்பப் பெண்ணாக மாறுகிறாள். ஷேக்ஸ்பியரின் கதாநாயகிகள் போல், 'ஆனந்த மடத்'தின் இறுதியில் 'ஞானம்' பேசப்படுகிறது. 'ஆனந்த மடத்தி'லும், 'பிரதாப முதலியார் சரித்திரத்'திலும் Positivism, Englightenment Philosophyஇன் தாக்கம் தெரிந்தாலும், 'பிரதாப முதலியார் சரித்திரம் அவற்றை ஓரளவு கடந்து இந்தியக்

கலாச்சாரத்தை வலியுறுத்துவது போல் தெரிகிறது. வேதநாயகம் பிள்ளை இந்த நாவலுக்கு அடுத்து எழுதிய 'சுகுண சுந்தரி'யின் தலைவியும் ஞானாம்பாளைப் போன்ற தலைமைப் பண்பு வாய்ந்தவளாகவிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. திரு. சிவபாதசுந்தரம் குறிப்பிடுவதுபோல, இரண்டு தலைவிகளும் அரச வாழ்வோடு இணைக்கப்படுகிறார்கள்.

உண்மையில் தமிழ்ப் புதினத்தின் இரு முன்னோடிகளாகக் கருதப்படும் ராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரமு'ம், மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரமு'ம் தமிழ்ப்புதினத்தின் இருவகைத் தன்மைகளின் (இலட்சியவாதம், யதார்த்த வாதம்) எடுத்துக்காட்டு எனக் கைலாசபதி கருதுகிறார். மா. ராமலிங்கம் கருத்துப்படி முன்னது ஆத்மாவின் பயணத்தையும், பின்னது சமூக மனிதனின் பயணத்தையும் படம்பிடித்துக் காட்டுகின்றது. சமயச் சார்பான அகவிழிப்பும், சமுதாய உணர்வும் இந்திய மறுமலர்ச்சியின் இரு கூறுகளே. 'கமலாம்பாள் சரித்திரத்'தின் தலைப்பில் கமலாம்பாள் குறிப்பிடப்பட்டாலும், அவளது பண்பாடும் ஒழுக்கமும் சிறப்பாகப் பேசப்பட்டாலும் அதன் தலைவனான முத்துசாமி ஐயரின் கதையாகின்றது. ஆனால் 'பத்மாவதி சரித்திரத்'தின் பெண்கள் புதிய எழுச்சியின் வெளிப்பாடாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்புதினத்தில் பெண் கல்வி பற்றியும், ஆங்கிலக் கல்வியினால் வரும் தீமைகள் பற்றியும் கூறப்படுவதை, ஆசிரியரின் சமுதாய உணர்வுக்கும் நாட்டுப்பற்றுக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ராஜம் ஐயரும் பெண் கல்வியின் பெருமையை மறைமுகமாகக் காட்டுகிறார். அவரது இரு முக்கிய பாத்திரங்களான லட்சுமியும், கமலாம்பாளும் கல்வியறிவு, இலக்கிய ஈடுபாடு, சங்கீத ஞானமுள்ளவர்களாகப் படைக்கப்படுகின்றனர். மாறாக, அரைக்கல்வியறிந்த பொன்னம்மாளும், கல்வியறிவற்ற பிற வம்பர் மகாசபையின் பெண்களும் தீயவர்களாகவும் கொடுமை செய்பவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். ராஜம் ஐயரின் புதினத்தில் அத்வைதத்தின் ஆதிக்கம் மிகுதி. ஆனால் மாதவய்யா அதிகம் சமூக உணர்வுடன் படைத்திருப்பதால், பத்மாவதி சரித்திரத்தில் சமூகச் சீர்த்திருத்தக் கருத்துகள் மிகுதியாகப் பேசப்படுகின்றன. ஆங்கிலக் கல்வியினால் வரும் பண்பாட்டுச் சீரழிவு குறித்தும் கூறுகிறார். அவர் பெண் கல்வி பற்றி இப்படிக் கூறுகிறார்.

'தீயானது மனிதனுடைய சரீர சௌக்கியத்துக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு கல்வியானது நம்முடைய நல்லொழுக்கத்துக்கும், சுகத்துக்கும் உயர் பதவிக்கும் அவசியமானது. ஆனால், தீயானது கெட்டோர் கைப்பட்ட காலத்தில் தீங்கை விளைவிப்பது போலவே, கல்வியும், தீயோரிடமிருந்தால் கெடுதியை உண்டு பண்ணும். புத்தி விருத்தியும், பேரறிவும், நல்லொழுக்கமுமே கல்வி கற்பதின் முக்கிய பயன்களாகக் கொள்ளவேண்டும். பணமும், கண்ணியதையும் இவற்றிற்குப் பிறகுதான். இப்படி யோசித்தால்தான் பெண்களும் கல்வி கற்க வேண்டுமென்பது நன்றாய் விளங்கும். புருஷனுடைய பணமும் கண்ணியதையும் பெண் சாதிக்கு உதவுவது போல் அவனுடைய கல்வியும் ஞானமும் அவளுக்கு உதவுவதில்லை. புருஷனிடத்தில் பணமிருந்தால் பெண்சாதிக்கு நகைகள் செய்யலாம். ஆனால், புருஷன் மட்டும் சாப்பிட்டால் பெண்சாதி வயிறு நிறையுமா? அதுபோல்தான் கல்வியும் அறிவும். ஆதலால், அறிவையடையும் பொருட்டு, மானிடப் பிறப்பு எடுத்தவர்கள் யாவரும் கல்வி கற்க வேண்டும், ஒருவருக்காக ஒருவர் படித்தால் பயன்படாது. பேரறிவே நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள முக்கிய பேதம். "அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையரேனும் இலர்" என்று திருக்குறளிற் சொல்லியிருக்கிறது. அன்றியும் நமக்குள், சுமார் பதினாலு பதினைந்து வயதுவரை, முற்றிலும் வீட்டுப் பெண் பிள்ளைகளால் தான் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். எளிதாய் எவ்விதமும் திருப்பக்கூடிய அவ்வளவு இளம்பிராயத்தில் கல்வித் தேர்ச்சியுள்ளவர்களுடைய மேற்பார்வைக்குள் இருக்கவேண்டியது, எவ்வளவு அவசியமானது? இன்னுமொரு முக்கியமான விஷயமிருக்கிறது. புருஷன் மட்டும் படித்திருந்தால், தன் மூடத்தனமான மனைவியுடன் அவன் என்ன சிநேகத்தையும், சுகத்தையும் அனுபவிக்கக்கூடும்?' (55)

பெண்கள் தமிழ்க் கல்வி பெற்றால் அவர்களுக்கு அது துணையாக நிற்கும் என்பான் நாராயணசாமி. தமிழில் உயர்ந்த அற்புதமான சாஸ்திரங்களில்லாமற் போனாலும், நீதி நூல்களும், தேவ கீதைகளும், காவியங்களும் எவ்வளவோ இருக்கின்றன. மனத்தை உயர்த்திச் சன்மார்க்கப்படுத்துவதற்கு இவைகளே ஏற்றவைகளாம். ஒரு தேசத்திலும் ஒரு பாஷையிலும் திருக்குறளுக்குச் சமமான நூலே கிடையாதென்றும், தேவாரத்திலும் உருக்கமாயுள்ள தேவ கீதைகள் இல்லையென்றும், இங்கிலீஷ்தாரருக்குத் தெரியாததால் அவ்வளவு

சிறப்படையாமலிருக்கும் 'கம்பராமாயணத்தைப்போல் ஒரு பாஷையிலும் ஒரு காவியமும் கிடையாதென்றும், எங்கள் வாத்தியார் இராஜகோபாலையர் அடிக்கடி சொல்வதுண்டு. ஒருவரோடொருவர் கூடி, வீட்டுக் கறிவகைகளையும், ஊர் வம்புகளையும் பற்றி நம்முடைய பெண்டுகள் பேசியும், கட்டப்ப நாயக்கன் கும்மி, மூளியலங்காரிப்பாட்டு, முதலியவைகளைப் படித்தும் வீண் காலங்கழிப்பதிலும், இப்படிப்பட்ட புஸ்தகங்களைப் படித்துக் களிக்கக்கூடுமானால், எவ்வளவு நன்றாயிருக்கும். சந்திரமதி, சீதை, தமயந்தி முதலிய பெண்ணரசிகளின் சரித்திரங்களைப் படித்தால், எவ்வளவு நன்மையடைவார்கள். (58)

ஆங்கிலக் கல்வியால் ஏற்பட்டிருக்கும் இரண்டும் கெட்டான் நிலைபற்றி இப்படிக் கூறுகிறான். 'நமக்குள் எங்கும், எல்லா விஷயத்திலும் இப்படித்தானிருக்கிறது. நம்முடைய முன்னோர்களைப் போலிருந்து விட்டால் ஒரு தொந்தரவுமில்லை. இப்பொழுது இந்த இங்கிலீஷ் வாசிக்கப் போய், அவர்கள் ஏற்படுத்திய அநேக வழக்கங்கள் முற்றிலும் பிசகாக மனதுக்குத் தோன்ற, அவற்றை விட்டுவிட்டுச் சரியானபடி நடப்போமென்றால், நம்மைப்போற் கற்றுத் தேர்ந்திராத பந்துக்களாயுள்ள பெரியவர்கள் தடையாயிருக்கிறார்கள். நம்மைப் பெற்று வளர்த்து இங்கிலீஷும் படிப்பித்துவிட்ட மாதா பிதா இஷ்டப்படி அவர்களைத் திருப்தி செய்கிறதா? அல்லது, நூதனமான படிப்பின் பயனாக நம்முடைய மனத்திற்கு நல்லதாகத் தோன்றியபடி நடக்கிறதா? அப்படி நடந்தால் சுபாவபேதமும் நன்றித் துரோகமுமாய் முடிகிறதுமன்றித் தாய் தந்தையரை விருத்தாப்பிய காலத்தில் மனச்சஞ்சலப்படுத்த, அவர்கள் சாபத்துக்குள்ளாகிறோம். இப்படி நடந்தால் நம் மனசாக்ஷிக்கு விரோதமாய் நடப்பதால் நமக்கே நாம் கள்ளப்பட்டுத் தன் மதிப்பின்றிப் போவதுமன்றி நாம் அரிதில் தேடிய கல்விப் பொருளும் பயனின்றி ஏட்டுச் சுரைக்காய்க்குச் சம்மாகிறது. ஆகக்கூடிய இங்கிலீஷ்ப் படிப்பாலுண்டாயிருக்கிற கஷ்டம் கொஞ்சமில்லை. நம்முடைய தேசம் இவ்வளவு நாகரீகமான ஆளுகைக்குள்ளிருந்தும் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விளங்காததற்குக் காரணமே இந்த ஈரடியான நிலைமைதான். ஆனால், எல்லாம் நாளுக்கு நாள் அறிவு பரவிச் சீராய் விடுமென்று நம்புகிறேன். அதுவரையும் தர்மசங்கடந்தான்'. (78-79)

மொத்தத்தில் முதல் மூன்று தமிழ் நாவல்களிலும், தேசிய உணர்வு, தாய்மொழிக் கல்வியால் வரும் மறுமலர்ச்சியையும், பெண் கல்வியால் வரும் சமுதாய மாற்றத்தையுமே தழுவியதாக உள்ளது. மாதவைய்யாவின் 'முத்து மீனாட்சி'யில் விதவை மறுமணம் மிக வெளிப்படையாகப் பேசப்படுகிறது. இதில் உயர்கல்வியால் வந்த சீர்திருத்தச் சிந்தனை மற்றும் பிரம்ம சமாஜக் கொள்கைகளின் தாக்கத்தைக் காணலாம் வரா.வின் 'சுந்தரி'யிலும் விதவை மறுமணம் தான் கருப்பொருள். இவற்றில் எல்லாம் தேசிய உணர்வு சமுதாயச் சீர்திருத்தமாக நிழலாடுகிறது.

இவற்றிற்குப் பின்வந்த நாவல்களான குருசாமி சர்மாவின், பிரேம கலாவத்யம்,' சிற்றன்னைக் கொடுமை வழியாக அன்னிய ஆட்சிக் கொடுமையை உருவகமாகக் காட்டியுள்ளது. சாதிக் கொடுமை பற்றியும் மொழி பற்றியும் இப்புதினம் பேசுகிறது. பனையப்ப செட்டியாரின் 'காந்திமதி' என்ற புதினம் துப்பறியும் செயல்களைப் பற்றிக் குறிப்பிட்டாலும் தேசப் பற்றையும் காந்தியைப் போற்றுதலையும் வலியுறுத்துகின்றது. இந்த மரபின் முழுமையை வெங்கடரமணியின் 'முருகன் அல்லது உழவன்', 'தேசபக்தன் கந்தன்' (1952) ஆகியவற்றில் காணலாம். இவற்றில் முந்தியது பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது. பிந்தியது அரசியலை அடிப்படையாகக் கொண்டது. இந்த நாவல் பாரத நாட்டின் மேனிலைக்காக உழைக்கும் தொண்டர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் தேசியம், காந்தியத்தின் தாக்கத்தால் முழு சுவாலையுடன் பிரகாசிக்கிறது. ஆக்ஸ்போர்டில் பயின்ற கந்தனும் ரங்கனும் அப்போதே இவர்களுடன் படித்த ராஜேஸ்வரியின் அழகில் மயங்கி, அவளை அடைய நினைத்தனர். அந்தக் காதல் போட்டியில் ஏழைகள் பால் பரிவும் தேசப்பற்றும் கொண்ட ரங்கன் வெற்றி பெற, அந்தத் தோல்விக்கு மாற்றாகக் கந்தன் தேசத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துத் தில்லையாடி வருகிறான். ராஜேஸ்வரியும் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்கிறாள். ஆனால் ரங்கன் ICS முடித்துக் குண்டூரில் கலெக்டராகிப் பின் தஞ்சைக்கு மாற்றப்படுகிறான். அவனுக்கும் ராஜேஸ்வரிக்கும் நாட்டுப்பணி பற்றிய அணுகுமுறையில் வேறுபாடுகளிருந்தன. அவன் இந்திய மக்களிடம் குறைகாண்பான். அவன் பிரிட்டிஷ் அமைப்புக்குள் இருந்துப் போராட வேண்டும் என்றும் கருதினான். ஆனால் ராஜேஸ்வரி காந்தியடிகளின் தலைமையில் புதிய இந்தியா உருவாகி வருவதாக நம்பி அவர் இயக்கத்தில் முழுமையாக தன்னை இணைத்துக் கொண்டாள். 'சமுதாயம் மாற்றத்தை

நோக்கி முன்னேறுகிறது; அதை ஒரு மணி நேரம் கூட எந்த சக்தியாலும் நிறுத்த முடியாது' என நம்பிய அவள்,

'உனக்கு நானும் நாடும் வேண்டுமென்றால், உடனே கலெக்டர் வேலையை விடு; காங்கிரசில் சேரு; ஏழை மக்களுக்கு இரங்கி உழை;' என ரங்கனுக்குக் கட்டளை இட்டாள். ஆனால் ரங்கனுக்கு உடனே அதில் நம்பிக்கை ஏற்படவில்லை. 'ஒரு நாட்டைப் பண்படுத்தப் பல காலம் பிடிக்கும், ஒரு அமைப்பைச் சீர்குலைக்கச் சில மணி நேரம் போதும்' என வாதிட்டான். ஆனால் அவனோடு அவள் மூன்றாம் வகுப்பில் ரயிலில் பிரயாணம் செய்த போதுதான் மாற்றம் ஏற்படுகிறது. அப்போது கந்தன் ICS ஐ விட்டு விலகித் தேசப் பணியில் ஈடுபட்டுப் பருவ மழை உலகு செழிக்க உதவுவது போல் உழைப்பதையும் உணர்கிறான். ராஜேஸ்வரி நாடு விடுதலை அடையும் வரை பிரம்மச்சரிய விரதம் பூணுவதாகக் கூறுகிறாள். அவனும் கந்தனோடு சேர்ந்து காந்தியப் போரில் இறங்குகிறான். அதே சமயத்தில் கந்தனும் ராஜேஸ்வரியின் ஆத்மபலமும், அவள் பால் அவன் முன் கொண்டிருந்த காதலும் தான் இவனை இப்படி நாட்டுப் பணியில் ஈடுபடச் செய்ததாக உணர்ந்து அவளிடம் கூறுகிறான். சுயராஜ்யம் 'எல்லோரிடமிருந்து முழு ஆற்றலையும் வெளிக் கொணர்ந்து அவரது அக வாழ்விலும் புறவாழ்விலும் ஒளிசேர்க்க வேண்டும்' என நம்பினான். ராஜேஸ்வரியும் இந்தியரின் அடங்கிக் கிடக்கும் ஆற்றலை வெளிக் கொணர வேண்டும், சுரண்டல் முழுதும் தொலைய வேண்டும் என நம்பினாள். இறுதியாக அவன் கோட்டை மைதானத்தில் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது குண்டடிப்பட்டு இறக்கிறான். அங்கே குழுமியிருந்தவர்கள் பல்லாயிரக்கணக்கான போலீசாரால் தாக்கப்பட்டது ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் போன்றது. 'ஆஹா கொலை செய்யும் குண்டுக்குக் கூட அவன் இதயம் அன்புடன் இடம் கொடுத்தது' எனக் கதையை முடிக்கிறார் ஆசிரியர்.

இந்தப் புதினம் ஒரு முழுமையான காந்தியவாதியின் தேசிய நாவல். இங்கே சமுதாயத்தின் அகவிழிப்பை மூன்று முக்கியப் பாத்திரங்கள் வழியாகக் கதாசிரியர் காட்டுகிறார். தேசிய எழுச்சியின் அடிப்படையில் பெண்ணின் ஆத்மீக பலத்தைக் காண்கிறார். ரங்கனுக்கும் கந்தனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு இருவகைப் பாத்திரப் படைப்புக்கு உதவியது மட்டுமின்றி, இந்திய வரலாற்றின் முக்கிய கட்டத்தில் இருவகை

அணுகுமுறைகளுக்கும் விளக்கமாக அமைகிறது. இறுதியில் காந்திய வழியே இந்தியாவுக்கு ஏற்ற வழி; ஏனென்றால் அடித்தளத்திலுள்ள இந்தியரின் அடித்தள ஆற்றலை அது வெளிப்படுத்துவது என்பது காட்டப்படுகிறது. கந்தன் இலட்சியவாதியாக இருந்தாலும் இந்தியாவின் எல்லா மரபுகளையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில், 'யாவர்க்கும் தாய சுமாம் பூமிதேவி அளிக்கும் நற்பயனை சிலர் அடையவும் பலர் பட்டினியால் வாடவும் இடம் தருகின்ற பொருள்நூலை (அர்த்த சாஸ்திரத்தை) தீயிட்டு எரித்திடவேண்டும்' என முழங்குகிறான். சுதந்திரத்தை ஒரு அரசியல் நிகழ்வாக மட்டும் கருதாமல் சமத்துவ நிலையாகவும் கண்டான். இறுதியாகக் காதலை எப்படித் தேசபக்தியாகப் பண்படுத்த முடியும் என்பதையும் இப்புதினம் காட்டுகிறது. பிற்காலத்தில் அகிலன் எழுதிய 'பெண்' என்ற புதினத்தில் இதன் சாயலைக் காணமுடியும். அதில் ராவ் பகதூரின் மகள் வத்சலா கணவனை IAS படிக்கத் தூண்டுகிறார். அவன் தேசிய இயக்கத்தில் சேர்வதில் அவளுக்கு உடன்பாடில்லை. ஆனால் அவன் சுபத்ராவின் காதலன் கள்ளுக்கடையில் காயப்பட்டபோது அவனை அணைத்துக் கொள்வதைக் காணும்போது, வத்சலாவும் தன்னைச் சூழ்ந்த மாயையிலிருந்து விடுதலை பெற்றுப் பெண் ஆகிறாள். 'தேசபக்தன் கந்தனின் மதுவிலக்கு, அஹிம்சை, எளிமை ஆகிய காந்தியப் பண்புகள் கலைவடிவம் பெறுகின்றன.

# கல்கியின் புதினங்களில் காந்தியம்

அமரர் கல்கி ஒரு சிறந்த வரலாற்று நாவலாசிரியர் மட்டுமின்றி, உயர்ந்த சமூகக் கதாசிரியராகவும் திகழ்ந்தார். அவர் சுதந்திரப் போராட்டத்தில் நெருங்கிய ஈடுபாடு கொண்டவர். ராஜாஜியின் முக்கிய சீடர். காந்தியக் கொள்கைகளிலும் காந்தியின் பாலும் ஆழ்ந்த பக்தியுள்ளவர். காந்தியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு மூன்று சிறந்த புதினங்களைப் படைத்தார். அவர் முதலில் எழுதிய 'தியாகபூமி' ஆனந்த விகடனில் தொடர்கதையாக வந்து பின் நூலாகவும் திரைப்படமாகவும் வந்தது. அதையொட்டி 'மகுடபதி'யும், விடுதலைக்குப்பின் 'அலை ஓசை'யும் வெளிவந்தன.

'தியாகபூமி'க்கு முகவுரை வழங்கிய சுப்பராயன் ஆங்கிலத்தில் கால்ஸ் வொர்த்தி போன்றோர் ஜன சமூகத்தின் நாகரிகத்தை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் எழுதிய நாவல்களைப் போன்றது 'தியாகபூமி' எனக்குறிப்பிட்டு நம் நாட்டில் பெண்களின் சுதந்திரம் இப்போது எப்படிக் குறுகிப் போயிருக்கிறது; அதை எவ்விதத்தில் விரிவடையும்படி செய்யலாம் என்பதே இந்தக் கதையின் முக்கிய இலட்சியமாக அமைந்திருக்கிறது என விளக்குகிறார். ஆனால் இப் புதினத்தில் பெண் விடுதலை தேச விடுதலையின் முக்கிய அம்சமாகவே விளங்குகிறது.

இக் கதையின் நாயகியான சாவித்திரி சம்பு சாஸ்திரியின் முதல் மனைவிக்குப் பிறந்த பெண். அவளை மணந்த ஸ்ரீதரின் கொடுமையால் வீட்டைவிட்டு வெளியேறிப் பின் ஒரு பணிக்காகக் குடும்பத்தில் வேலைக்குச் சேர்ந்து அதிர்ஷ்ட வசமாகப் பணக்காரியாகவும் ஆகிறாள். அவளது தந்தையும், இன்னல்களுக்குள்ளாகிச் சாவித்திரியின் குழந்தையை, அவள்

குழந்தை என்று தெரியாமலே வளர்க்கிறார். அதற்குமுன் அவர் ஊரில் வெள்ளம் வந்தபோது சேரிவாழ் மக்களுக்கு அடைக்கலம் தருகிறார். அதற்காக ஊராரின் கோபத்துக்காளாகி ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டார். பஜனை செய்வதைத் தொழிலாகக் கொண்ட சாஸ்திரிக்குச் சமூகத் தொண்டு இயல்பாகவே வந்தது. இந்தப் புதினத்தில் தீண்டாமையை எதிர்த்துக் கல்கி குரல் கொடுக்கிறார். அவர் மாட்டுக் கொட்டகையில் சேரி மக்கள் அடைக்கலம் புகுந்த போது அங்கிருந்த மாடுகள் பேசுவதுபோல் மனிதர்கள் பற்றி நன்கு படம்பிடித்துக் காட்டுகிறார்.

> "ஹாமாம் இவர்கள் எதற்காக அங்கிருந்து ஓடி வந்திருக்கிறார்கள்?"

"இது தெரியாதா? இவர்கள் இருந்த கூரைக் குச்செல்லாம் மழையிலே விழுந்திருக்கும். நம்மைப் போல இந்த ஜனங்களுக்கு ஓடு போட்ட வீடு இருக்கிறதா, என்ன?

"அதற்காக, பிச்சைக்காரன் குடிசையிலே சனீசுவரன் புகுந்தாற் போல், இவர்கள் நம்முடைய இடத்தைப் பங்கு போட்டுக் கொள்ள வந்து விட்டார்களாக்கும்?"

"காலையிலே எஜமான் வரட்டும். அவரிடம் நான் புகார் சொல்கிறேனா இல்லையா, பார்"

"இவர்களாக ஒன்றும் வந்திருக்க மாட்டார்கள். எஜமான் சொல்லித்தான் வந்திருப்பார்கள்."

"போகட்டும் இவர்கள் வந்ததுதான் வந்தார்கள். நம்முடைய இடத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். எதற்காக இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்? இரையாமலிருந்து தொலைந்தால் நாம் தூங்கலாமல்லவா?"

ஹொஹ்ஹோ உனக்கு அது தெரியாதா? மனுஷ ஜாதியினிடத்தில் அதுதான் பெரிய குறை. அவர்களுக்குச் சத்தம் போடாமல் பேசவே தெரியாது. அவர்கள் மேல் குற்றம் இல்லை. சுவாமி அப்படி அவர்களைப் படைத்துவிட்டார்"

சாஸ்திரியாருக்குக் குழந்தை கிடைத்தவுடன் மறுபடியும் குப்பத்துக்கு வருகிறார். அங்கு வாழ்ந்த குழந்தைகளின் அழுக்கு உடம்பும் கந்தல் துணியும் அவர்களுக்குச் சேவை செய்து தூண்ட இந்தச் சாவடிக் குப்பத்து ஜனங்களுக்குச் சேவை செய்வதற்காகவே பகவான் ஒரு குழந்தையைக் கொடுத்துத் தம்மை மறுபடியும்

சம்சாரியாக்கி அவ்விடம் அனுப்பியிருப்பதாக அவர் மனத்தில் தோன்றிற்று. இது தனக்குப் புனர் ஜன்மம் என்றும், இனிமேல் பழைய வாழ்க்கைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டார் (316-17).

இதையடுத்து சாருவை உமா தன் வீட்டில் வைத்துக் கொள்ள விருப்பம் தெரிவிக்கிறாள். அப்போது தேசிய பஜனை செய்து கொண்டு வருபவர்கள் குரல் கேட்கிறது. பராசக்தி அவரைத் தேச சேவையில் ஈடுபட ஆணையிடுவதாக அவர் கருதுகிறார். நாட்டில் அப்போது நடந்து கொண்டிருந்த அமைதியான புரட்சி பற்றிக் கல்கி அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கிறார்.

அந்த வருஷத்தில் பாரத நாட்டில் ஒரு யுகப் புரட்சி நடந்துகொண்டிருந்தது. ஆயிரம் வருஷங்களாக அறியாமையில் மூழ்கி, சோம்பலுக்கு ஆளாகி, வீரமிழந்து, அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த பாரத மக்கள் விழித்தெழுந்து கொண்டிருந்தார்கள். காந்தி மகானுடைய அஹிம்சா மந்திரத்தின் சக்தியால் அவர்களை மூடியிருந்த மாயை ஒரு நொடியில் பளிச்சென்று விலகிப் போனது போல் இருந்தது. அவர்களைப் பிடித்திருந்த அடிமைத்தளைகள் படீர் படீர் என்று முறிந்து விழும் சப்தம் நாலு பக்கங்களிலும் எழுந்தது.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின்னர்
வேறொன்று கொள்வாரோ?"

என்னும் ஆவேசம் தேசமெங்கும் உண்டாயிற்று. நாட்டின் விடுதலைக்காக ஜனங்கள் எந்த விதமான கஷ்டங்களையும் அநுபவிக்கவும், எவ்விதத் தியாகங்களையும் செய்யவும் தயாரானார்கள். தேசப்பணியில் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்வதற்கும் சித்தமானார்கள்.

அன்னையின் கைவிலங்குகளைத் தகர்க்க முயன்றவர்கள் அதே சமயத்தில் தங்களைப் பிணைத்திருந்த தளைகளையும் அறுத்தெறிந்தார்கள். உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற மடமை தகர்ந்தது. "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லாரும் இந்திய மக்கள்" என்னும் உணர்ச்சி பரவிற்று.

ஒரு தன்னந் தனி மனுஷர் தள்ளாத கிழவர்-கையில் கோல் ஊன்றி- "சத்தியமே ஜயம்" என்று சொல்லிக் கொண்டு சுதந்திர யாத்திரை தொடங்கினார். அவரைப்பின்பற்றி அந்தப் புண்ணிய

வருஷத்தில் பாரதமக்கள், ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில், 'கத்தி யின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்று பாடிக்கொண்டு கிளம்பினார்கள்.

இந்தச் சுதந்திர சங்கநாதத்தைக் கேட்ட சம்பு சாஸ்திரி முதலில் தன்னால் முடிந்த பணியாக சாவடி குப்ப ஜனங்களுக்கு உழைப்பதுதான் என இருக்கிறார். பிறகு காந்தியால் நாட்டில் ஒரு புதிய சக்தி, ஒரு புதிய ஆவேசம் பிறந்திருப்பதை உணர்ந்து, இராமருடைய பாலத்துக்கு அணில் பிள்ளை மணலை உதிர்த்தது போல ஊர் ஊராகப் பஜனை செய்துகொண்டு, 'கள்ளை ஒழியுங்கள் கதரை உடுத்துங்கள், சுத்தமாயிருங்கள், என் சாதி பெரிது உன் சாதி பெரிது என்றெல்லாம் சண்டை போடாதீர்கள் எனப் போதிக்க முடிவு செய்தார். அப்போது சாரு உடன் காந்தி பாட்டுப் பாடுகிறார். அவரது தீண்டாமைப் பிரச்சாரம் மக்களைப் பெரிதும் கவர்ந்தது. இவரைப் பற்றிக் கேட்டவுடன் தீக்ஷிதா அப்படீன்னா இந்த மகான் சம்பு சாஸ்திரி என்கிறவர் மகாத்மா காந்திக்குப் போட்டியாகக் கிளம்பியிருக்குராக்கும்?' எனக் கேட்கிறார். அதற்கு 'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மகாத்மா காந்தியைப் பின்பற்றுங்கோ' என்று தான் இவரும் சொல்கிறார், என்று பதில் கிடைக்கிறது. சம்பு சாஸ்திரி ஒரு கிராம மகாத்மாவாக உருவாகிறார். கல்கி இதன் மூலம் காந்தி நெறியை எல்லோரும் அவரவர் நிலையில் ஏற்றுப் பணியாற்ற முடியும் என்பதைக் காட்டுகிறார்.

இறுதியில் ஸ்ரீதரன் உமாராணி, சாவித்திரியிடம் தாம்பத்ய உரிமைகோரி வழக்குப் போடுகிறார். கல்கி சாவித்திரி மூலப்படிவத்தை மாற்றி, உரிமைக்காகப் போராடும் பெண்ணாக சாவித்திரியை உருவாக்குகிறார். ஆண்கள் விரும்பாத பெண்களுக்கு அலவன்ஸ் தருவது போல் ஸ்ரீதருக்கு அவள் தர முன்வருகிறாள். ஆனால் வழக்கில் ஸ்ரீதர் வெற்றி பெறுகிறார். சம்பு சாஸ்திரி தியாக பூமியில் பிறந்த சாவித்திரியும் தியாகம் செய்யவேண்டும் என விழைகிறார். 'தியாகமா?. . அப்பா' என சாவித்திரி அவரிடம் வாதிடுகிறாள். அப்போது பாரத மாதாகி ஜே மகாத்மா காந்திக்கி ஜே என தேச சேவைகள் குரல் கேட்கிறது. உடனே அவளது ஆபரணங்களையெல்லாம் கழற்றி விட்டுக் கதராடையுடுத்தி அப்பாவிடமும் குழந்தையிடமும் கூடச் சொல்லாமல் வெளியே கிளம்பினாள். பெண்ணுரிமைப் போர் காந்தியக் கனலில் நாட்டுரிமைப் போருடன் இணைந்தது.

'விலங்கில் விடுதலை அடையுங்கள் தாயின் அடிமைத்தனத்தை நீக்கினால் பெண்களின் அடிமைத்தனம் தானே நீங்கும்' என்ற காந்தியடிகளின் போதனை இவளுக்குப் புதிய தெம்பைத் தந்தது. அவள் தேசப்பணிக்காகச் சிறை செல்லும்போது ஸ்ரீதரனும் அதே காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டதைக் காண்கிறாள். பிரிந்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்தது மிதிலைக் காட்சியின் புதுவடிவமாக தோன்றியது என்று கல்கி எழுதுகிறார்:

> "அந்த நிமிஷத்தில் ஸ்ரீதரனுக்கும் சாவித்திரிக்கும் புனர் விவாகம் நடந்தது என்று சொல்லலாம். ஏற்கனவே, பெரியோர்களுடைய வற்புறுத்தலினால் தேகசம்பந்தமான விவாகம் அவர்களுக்கு நடந்திருந்தது. இன்றைய சுபதினத்தில் அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்றையொன்று மணந்து கொண்டன. இந்த ஆத்மீக விவாகத்துக்குப் பாரதமாதாவும் காந்தி மகாத்மாவுமே சாட்சிகளாயினர்".

சாஸ்திரி மறுபடியும் சாவடிக்கு வந்து பஜனையில் ஈடுபடுகிறார். அப்போது பாடப்படும் வைஷ்ணவ ஜனதோவின் உண்மையான அர்த்தத்தை உணர்கிறார். சாஸ்திரிக்கு அந்த கீதத்தில் வருணித்திருக்கும் நூறில் ஒரு பங்காவது தனக்கு அருள்வேண்டிப் பராசக்தியைப் பிரார்த்திப்பதோடு நாவல் முடிகிறது. மொத்தத்தில் 'தியாகபூமி'யில் கல்கி பழைய சாவித்திரி புராணத்தைச் சம்பு சாஸ்திரியின் காந்தியக் காப்பியமாக மாற்றுகிறார். சாவித்திரியையும் நாட்டு விடுதலைக்காக அர்ப்பணிக்கும் தேச சேவகியாகப் படைக்கிறார். இந்தக் கதையில் அதிசயச் சம்பவங்கள் மிகுந்திருந்தாலும் அவற்றைக் காந்தி என்ற மகா அதியம் உண்மையோடு இணைப்பதால் காப்பியத் தன்மை பெறுகிறது. சாஸ்திரியும், சாவித்திரியும் காந்தியால் வலுப்பெற்ற சாதாரண மனிதர்களாகப் படைக்கப் பெறுகின்றனர். புதிய சாவித்திரி ஸ்ரீதருக்கும் புத்துயிரளித்து புனர்ஜென்மம் பெறச் செய்கிறார்.

### மகுடபதி

விடுதலைப் போரின் பின்னணியில் எழுதப்பட்ட 'மகுடபதி', தேசிய உணர்வையும் காந்தியத் தத்துவத்தையும் கருப்பொருள்களாகக் கொண்டு எழுதப்பட்டதே.

வானதி திருநாவுக்கரசு மகுடபதியின் பதிப்புரையில் கூறுகிறார்: "பேராசிரியர் அமரர் கல்கி அவர்களின் சமூக

நாவல்கள் ஒவ்வொன்றும் நம் பாரத சமுதாயத்தில் சுதந்திரப்போரின் ஒவ்வொரு கட்டத்தைப் பிரதிபலிப்பவை".

மகுடபதி இந்திய விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய கட்டத்திற்குப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட கதை, 1931 ஜனவரி 6ஆம் தேதி தொடங்குகிறது. 1930-ஆம் ஆண்டு டிசம்பர் கடைசியில் மகாத்மா காந்தி லண்டனில் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு வெறுங்கையோடு திரும்பிய பின் காந்தி - இர்வின் ஒப்பந்தம் கைவிடப்பட்டதும் மறுபடியும் தொடங்கிய இரண்டாவது சத்தியாக்கிரக இயக்கம் தான் மகுடபதியின் பின்னணி. அதன் தலைவன் மகுடபதி கோயம்புத்தூரில் பிரசித்தி பெற்ற ஒரு காங்கிரஸ் தொண்டன். அவன் காந்தி உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த போது கல்லூரிப்படிப்பை நிறுத்திவிட்டுச் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டான். எடுத்த எடுப்பிலேயே கோவையிலே நடந்த சத்தியாக்கிரகம் பற்றி மகுடபதி கிழவனிடம் கூறுகிறார்.

"இதுவரையில் ஒருவரும் சாகவில்லை பாட்டா. ஆனால் அந்தக் கண்காட்சியை நீ பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே? காந்தி மகாத்மாவினுடைய ஆன்ம சக்தியை இன்றைக்குத்தான் நான் நேரில் பார்த்தேன். கொஞ்சங்கூட ஈவு இரக்கம் பச்சாத்தாபம் இல்லாமல், போலீஸார் என்ன அடி அடித்தார்கள்? ஆனால், காங்கிரஸ் தொண்டர்கள் கொஞ்சமாவது மனங் கலங்கவேண்டுமே? ஓடவேண்டுமே? ஒரு தொண்டர் முப்பது அடி அடிக்கிறவரையில் 'வந்தே மாதரம் மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷித்துக் கொண்டிருந்தார். அப்புறம் கீழே விழுந்து மூர்ச்சையானார்".

ஏற்கெனவே மகுடபதி ஒரு வீட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த பெண்ணை விடுதலை செய்வதாகக் கூறியிருந்தார். (நான் செய்கிறேன் தேசம் விடுதலையடைந்தவுடன் நானே வந்து விடுதலை செய்கிறேன்.) அந்தக் கிழவனுக்குச் சாதகமாகவும் சாட்சி கூறியதால் கிழவன் கள் குடிப்பதை நிறுத்தி விட்டான். கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட மகுடபதி கார்கோடக் கவுண்டர்களின் ஆட்களிடமிருந்து தப்ப முயலும் போது மறுபடியும் அந்தப் பெண்ணையும் கிழவனையும் சந்திக்கின்றார். அந்தப் பெண்ணைக் கார்கோடக் கவுண்டன் திருமணம் செய்து கொள்ள முயல்கிறான். அதற்கு அவளது சிற்றப்பாவும் துணை செய்கிறார். அவளை அவர்களிடமிருந்து மகுடபதி காப்பாற்றுவது தான் கதை.

கதையமைப்பிலும் பாத்திரப் படைப்பிலும் கல்கியின் காந்திய ஈடுபாடு மிகத் தெளிவாகத் தெரிகிறது. கதையில் மகுடபதியின் காந்தியப் போராட்டம் செந்திருவின் விடுதலையோடு இணைக்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் செந்திருவுக்குத் தீங்கு நேர்ந்திருந்தால் அஹிம்சையைக் கூட விட்டுவிடலாம் என மகுடபதி எண்ணுவதாகவும், இன்னொரு சமயத்தில் காங்கிரசும் காந்தி மகானும் நான் ஒருவன் இல்லாமலே காரியத்தைப் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் செந்திருவின் கதி என்ன? அவனும் எப்படியாவது போகட்டும் என்று விட்டுவிடுவதா?' என அவன் சிந்திப்பதாகவும் கல்கி படைக்கும்போது மகுடபதியைச் சாதாரண மனித பாத்திரமாக, ஆனால் காந்தியப் பிடிப்பால் அவன் உயர்வு பெறுவதாகவும் காட்டுகிறார். இடையிடையே அவன் காந்தியைப் பற்றி நினைத்துத் தன்னை வலுப்படுத்திக் கொள்வான். அவனது உறவினரான செங்கோடன் போன்றோர்க்கு அஹிம்சையில் நம்பிக்கையில்லை.

இறுதியிலே கார்கோடக் கவுண்டர் மகுடபதியைச் சுட முயலும்போது பெரியண்ணன் அவனைத் தடுத்து 'சுடாதே' எனக் கூறுவதோடு மகுடபதி அவரது மகன் என்ற ரகசியத்தையும் கூறுகிறான். கார்கோடக் கவுண்டன் முதல் மனைவியின் காணாமற்போன பையன் மகுடபதி என்ற உண்மை வெளி வருகிறது. கார்கோடக் கவுண்டன் படுத்த படுக்கையாய்க் கிடக்க மகுடபதி அவருக்குப் பணி விடை செய்வது பகைவனுக்கருள்வாய் என்ற பாரதி தத்துவத்தைக் காட்டுகிறது. கதையமைப்பில் மதுவிலக்கும் அஹிம்சையும் முக்கியப் பங்கு பெறுகின்றன.

## அலை ஓசை

தன் படைப்புகளிலே தலைசிறந்தது என்று கல்கியால் கருதப்பட்ட 'அலை ஓசை'யில் காந்திய அலையின் முழுத் தாக்கத்தையும் உணர முடியும். சுதந்திரப் போராட்டத்தின் கடைசிப் பகுதியான ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் காந்தி மறைவு வரையுள்ள காலக்கட்டம் இப்புதினத்தின் பின்னணி. மூன்றாம் உலக நாடுகளின் படைப்புகள் எல்லாம் ஒருவகை தேசிய உருவகக் கதைகள் (Allegory of the Nation) என்பார் அமெரிக்கத் திறனாய்வாளர் ப்ரெடிரிக் ஜேம்சன். இந்தக் கதை இரு பெண்களை மையமாகக் கொண்டிருந்தாலும் இதன் உண்மையான தலைவர் புதிய இந்தியா எனக் கொள்ளலாம். இந்த இரு பெண்கள் தாரிணியும், சீதாவும் தாங்கள் சகோதரிகள் தான்

எனப் பின்னர் தான் உணர்கின்றனர். அவர்களுள் தாரிணி முஸ்லீம் போல் இடையே காட்டப்பட்டு, இறுதியில் சீதாவின் சகோதரி என உணரப்படுவது. இந்துவும் முஸ்லீமும் அடிப்படையில் ஒரு இந்தியக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதைக் காட்டுவதற்காகக்கூட இருக்கலாம். இவர்களின் உருவ ஒற்றுமையால் பல குழப்பங்களும் சில நன்மைகளும் நடக்கின்றன. அதே போல் துரைசாமி ஐயரின் மௌலி வேடமும் அவருக்கு உதவி செய்கிறது.

மத ரீதியில் மட்டுமன்றிப் பூகோள ரீதியிலும் இந்திய ஒருமைப்பாட்டை இப்புதினம் படம் பிடிக்கிறது. பம்பாயில் இருந்த சீதா கல்கத்தா, டில்லி, ஆக்ரா முதலிய இந்திய நகரங்களோடு இணைக்கப்படுகிறாள். ஆனால் இவற்றிற்கெல்லாம் ராஜம்பேட்டைதான் இணைப்பு மையமாக உள்ளது. எல்லா நிகழ்வுகளுக்கும் காந்தியின் அமைதி அடித்தளமாக அமைவது போல் இப்புதினத்தின் காந்தியப் பின்னணிப் பற்றிக் கல்கி முன்னுரையில் கூறுகிறார்.

கோடானு கோடி மக்களின் கனவு நிறைவேறிப் பாரதநாடு சுதந்திம் அடையும் காலம் நெருங்கியபோது, காந்திமகானின் ஆத்மசக்திக்கு எதிராக நாசகார சக்திகள் கிளம்பிக் கர்ண கொடூரமான கூச்சலுடன் கோர பயங்கரத் தாண்டவமாடின. ஆயினும் இந்த நாசகார சக்திகளையெல்லாம் மகாத்மாவின் ஆத்மசக்தி முறியடித்து வெற்றிச் சங்கம் முழங்கியது. அந்த அற்புத வரலாற்றையும் இந்தக் கதைக்குப் பின்னணியாக அமைக்க முயன்றிருக்கிறேன்.

இந்த வரலாற்று வடுப்பெற்ற நகரங்களின் வரலாறு இன்றைய வரலாறு. சாதாரண மக்களின் வரலாறு, விடுதலை வரலாறு, மற்றும் ஆத்மீக வரலாறாக, இரு பெண்களின் விடுதலை வரலாறாகப் படைக்கப்பட்டுள்ளது.

இன்னொருத்தியைப் பெண் பார்க்க வந்தவரைத் தன் அகன்ற விழியால் விழுங்கி அவரை மணம் செய்து கொள்ளும் சீதா, காந்திய அலையால் இழுக்கப்பட்டுக் காந்தியின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டு கஸ்தூரிபாயைத் தேடி சொர்க்கத்துக்குச் செல்லும் அளவிற்கு உயர்ந்தாலும், அவள் அடிப்படையில் ஒரு சாதாரணப் பெண்தான். மானிடத்தின் மகத்துவத்தை மானுடத்துக்குக் காட்ட வந்த மகாத்மா இந்த நாட்டில் செய்த மாபெரும் புரட்சி - சாதாரணத்தின்

அசாதாரணத்துவத்தை உணர்த்தியதுதான். அதற்கொரு இலக்கிய விளக்கம் தான் 'அலை ஓசை' சீதாவின் கதையில் காதிக் (Gothic) நாவல்களில் கதாநாயகிகளின் வாழ்க்கையைப் போல் பல்வேறு அதிசய நிகழ்ச்சிகள் நடந்தாலும், அவை அவன் இயல்புக்கு முரண்பட்டவையன்று. அவளது காலப் பின்னணியில் அவை இயல்பான நிகழ்ச்சிகளே.

காந்தியம் என்ற மாபெரும் அலை எப்படிச் சாதாரண மனிதர்களைத் தன் வலுவால் இழுத்துச் சென்று, ஒரு பெரிய சரித்திரத்தில் அவர்களைச் சம்பந்தப்படுத்தியதோ, அப்படித்தான் சீதாவின் வாழ்விலும் சில நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. 'ஆள்மாறாட்டம்' போன்ற உத்திகள் கதை முழுவதும் கதையின் சஸ்பென்சை மாத்திரம் காட்டவில்லை. சீதாவும் தாரணியும் 'தாம் யார்' என்றும் ஆத்மீக ரீதியாகவும் தங்களைத் தாங்களே தேடி அலைகிறார்கள். சாதாரணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கதாநாயகி, ராஜகுமாரி என இறுதியில் தெரிய வருவது 'ரொமான்டிக்' கதைகளின் இயல்பு. ஆனால் 'அலை ஓசை'யின் நாயகிகள் இராஜ குடும்பத்தோடு தொடர்பு கொண்டவர்கள் போல் காட்டினாலும் இறுதியில் அவர்கள் சாதாரணமானவர்கள் என்று காட்டப்படுவதில் ஒரு புரட்சியுமிருக்கிறது.

சாதாரண மனிதர்களைச் சரித்திரத்தோடு சந்திக்க வைக்கும் இந்த நாவலிலே, சரித்திரம் புராணியம் (மித்), அதிசயக் கதை (ரொமான்ஸ்) ஆகியவற்றின் தன்மை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், பழைய 'ரொமான்டிக்' அல்லது விந்தையியக் கதைகளில் சாதாரணத்துவம் தெய்வீத் தலையீட்டோடு இணைக்கப்பட்டிருக்கும். இங்கும் தெய்வீகம் காந்தியத்தோடும் மனித இயல்போடும் இணைக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய விடுதலைப் போரிலேயே, இந்த மனிதத்தத்துவத்தின் புராணியத் தன்மையிருப்பதை இங்கு நினைவுகூரல் நன்று. இந்த நிலையில் 'அலை ஓசை' ஏனைய இந்திய மொழிகளில் உள்ள காந்திய நாவல்களுடன் ஒத்திருப்பதை உணரமுடிகிறது.

'சிவகாமியின் சபதத்'தில் பழைய வரலாற்றின் உட்கருவாக புராணியம் இருப்பதுபோல அலை ஓசையிலே இன்றைய வரலாறு புராணியமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அலைஓசையின் முதற் பாகத்தின் பின்னணி பீகார் பூகம்பம். அதில் தாரிணி நேரடியாகவே பங்கு பெறுகிறார். அது

ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் நடைபெற்றது. அது குறித்து அவளே செளந்தர ராகவனுக்கு எழுதுகிறாள். ஜவஹர்லால் நேருவையும், அவள் காண நேர்கிறது. அவற்றையெல்லாம் விட அந்தப் பூகம்பத்தால் ஏற்பட்ட மனிதத்துயர், அதை நீக்கும் பணியில் ஒரு நாய் கூடப் பங்கு பெறுவது அவளைப் பெரிதும் பாதிக்கிறது. அவளே பூமிக்குள் புதைபட விருப்பம் கூடத் தெரிவிக்கிறாள். ஆனால் இது லலிதா-சீதா வாழ்க்கையில் ஒரு சின்ன பூகம்பத்துக்கு வழி வகுக்கிறது. லலிதாவைப் பார்க்க வந்தவன் சீதாவை விரும்பி மணம் செய்து கொள்கிறான்.

இப்புதினத்தின் இரண்டாம் பாகத்தில், சீதாவின் வாழ்விலும் நாட்டிலும் குறிப்பாக அவர்கள் வாழும் டில்லியிலும் புயல் வீசுகிறது. செளந்தரராகவன் ஒரு சராசரி மனிதன். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பதோடு காந்தியின் கொள்கைகளை எதிர்ப்பவன். சீதாவின் அம்மா சூரியா ஒரு சோஷலிசப் புரட்சிவாதியாக இருந்தாலும், காந்திஜியை ஒரு மகானாக மதிக்கின்றாள். அவன் திரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் தாரிணியைச் சந்திக்கிறான். அதற்குச் சில ஆண்டுகள் முன்பு நடந்த கராச்சி காங்கிரசில் ராகவன் அவளைச் சந்திக்கிறான். இவர்கள் எல்லோரும் தாஜ்மகாலுக்குச் செல்கிறார்கள். அப்போது ஏரியில் விழும் போது மீட்கப்பட்டு வாழ்வின் உண்மையை உணர்கிறாள் சீதா. அவள் செவியில் அலை ஓசையும் கேட்கத் தொடங்குகிறது. ராகவனுக்கு மறுபடியும் தாரிணியிடம் சபலம் ஏற்படுகிறது. ஆனால் பிரேமை என்னும் நகரத்திலே அவளோடு வாழ நினைக்கிறாள். அவள் அந்தக் கற்பனை நகரத்தை விடுத்து வாழ்வின் துயரின் வன்மையை உணர்ந்து அதை அணுவேனும் குறைக்கத் தன் வாழ்வை அர்ப்பணிக்க நினைக்கிறாள்.

'எரிமலை' என்ற தலைப்பு பெற்ற மூன்றாம் பாகம் இந்திய மக்களின் மனத்தின் அடித்தளத்தில் பொங்கி வரும் சுதந்திர உணர்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'இந்திய தேசம் ஒரு பெரிய எரிமலையாக இருக்கிறது. எந்தச் சமயத்தில் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்குமோ தெரியாது' எனக் கூறுகிறார். ஜப்பான்காரர்கள் வந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் தந்து இங்குள்ள ஜாதி மதத்தைப் போக்குவார்கள் எனச் சிலர் கருதுகின்றார்கள். நேதாஜியின் படை அவர்களுக்கு உதவும் எனச் சூரியா கூறுகிறான். அவன் சாந்தினி சவுக்கில் புதிய வரலாறு நோக்கி நடக்கும்போது அதன் பழைய

வரலாற்றைக் கல்கி நினைவுபடுத்துகிறார். சூரியாவும் தாரிணியும் சுதந்திர உணர்வில் இணைந்து பணியாற்றுகிறார்கள். சௌந்தர ராகவனுடன் குடும்ப வாழ்வில் குழப்பத்தைச் சந்திக்கும் சீதாவும் சுதந்திரப்போரில் பங்கு பெற விழைகிறாள்.

அப்படியில்லாவிட்டால் தன்னைக் காந்தி ஆசிரமத்தில் சேர்த்துவிடக் கோருகிறாள். பிறகு சில சிக்கல்களுக்குப் பிறகு அவளே கல்கத்தா வந்து சேர்கிறாள்.

அங்கே சித்ராவும் அமர்நாத்தும் தாகூரின் அழகு வேட்கையையும் காந்தியின் சமூகத் தொண்டுணர்வையும் ஒப்பிடுகிறார்கள். 'மக்கள் பசியால் வாடும் நாட்டில் கலை என்ன, கவிதை என்ன, பாடல் என்ன? இராட்டையின் சங்கீதமே இனிமையிலும் இனிமையான சங்கீதம்' என்ற மகாத்மாவின் கூற்றை அமர்நாத் இப்போது ஏற்கிறான். வங்கத்தின் முதல் பஞ்சம் வந்த போது பக்கிம் சந்திரர் எழுதிய 'ஆனந்த மடம்' இந்தியாவின் முதல் புதினம் மட்டுமன்று; இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டக் கதை என்ற கருத்தைச் சித்ரா வெளியிடுகிறாள். அவர்கள் சீதாவைக் கல்கத்தா வீதியில் கண்டு அநாதை விடுதியில் சேர்க்கிறார்கள். ஆனால் அவளைப் புரட்சித் தாரிணி என்று கருதிப் போலீஸ்காரர்கள் அழைத்துச் செல்கிறார்கள்.

நான்காம் பாகம் 'பிரளயம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் தேசிய அளவிலும் சீதாவின் வாழ்விலும் பிரளயம் நடந்தது. இதன் ஆரம்பத்தில் சீதா கிராமத்துக்குத் திரும்பிக் கிட்டாவையரிடம் பேசும்போது, கஸ்தூரிபாயின் பொறுமையையும் பெருமையையும் சிறப்பாகப் பேசுகிறாள். (738) பட்டாபிராமனுக்குத் தேர்தல் வெற்றிக்கு உதவிய போதும் அவள் மேல் அபாண்டமாய்ப் பழி விழுகிறது. பிறகு கல்கத்தா சென்று வஸந்தியையும் பட்டாபியையும் சந்திக்கின்றாள். சுதந்திர தினத்தன்று சூரியாவும் தாரிணியும் கொண்டாட்டங்களைப் பார்த்துக் கொண்டு அவர்கள் பலமுறை நடந்த வெள்ளி வீதியில் பேசிக் கொண்டு நடக்கிறார்கள். அப்போது சூரியா 'சுதந்திரம் வந்து விட்டது; நாம் கல்யாணம் செய்து கொள்வதற்கிருந்த தடைகளும் நீங்கி விட்டது' என்கிறான். ஆனால் தாரிணி இந்தியா உண்மையில் சுதந்திரமடைந்ததாக நம்ப மறுக்கிறாள். (இந்திய தேசம் சுதந்திரம் அடைந்தது உண்மையானால் எதற்காக தேசம் இரண்டாகப் பிளக்கப்படவேண்டும்? சுதந்திர இந்தியா சுதந்திரமாகச் செய்த காரியமா என வினவுகிறாள்). இந்து

முஸ்லீம் பேதம் அவர்களது காதலுக்கும் இடையூறு என அவள் கூறுகிறாள். ஆனால், 'மதம் கடந்த மனிதத் தத்துவம்தான் தங்கள் மதம்' என சூரியா கூறுகிறான். விரைவில் அவள் ரஜனிபூர் ராஜகுமாரியல்ல துரைசாமி அய்யரின் சீமந்த புத்திரி என்பது தெரிய வருகிறது.

இதற்கிடையே மதக் கலவரத்தின் போது சீதாவை மௌலி வேடம் போட்ட தந்தை காப்பாற்ற முயல்கிறார். பிறகு அவர்கள் படகில் போகும் போது யாரோ துப்பாக்கியால் சுட சீதா தண்ணீருக்குள் மூழ்குகிறாள். பிறகு ராகவன் தான் மௌளலியை நோக்கிச் சுட்டதாக அறிகிறான். முஸ்லீம் என அவன் சுட்டது அவனது மாமனார் எனக் காட்டுவதின் மூலம் கல்கி இந்து முஸ்லீம் பேதத்தில் தீமையையும், அஹிம்சையின் தேவையையும் காட்டுகிறார். இந்திய வரலாற்றில் பல களங்களின் தளமாக இருந்த பானிபட் முகாமில் பணியாற்றிய சூரியாவின் துணையால் சீதா காந்தி மகானைக் காண முயல்கிறாள். ஆனால் அதற்கு முன் காந்தியடிகள் கொல்லப்பட்டதால், அவரது இறுதியாத்திரையில் தான் பங்கு பெறுகிறாள். மக்கள் அலையில் மிதந்து வந்த காந்திய அலை முன் அவள் காதுகளில் கேட்டுவந்த அலை ஓசை அடங்கி அவளுக்குக் கேட்கும் திறன் வந்தது.

> "லட்சக்கணக்கான ஜனங்கள் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் காது செவிடுபடும்படியான ஓலம் எழுந்து கொண்டிருந்தது. சீதாவின் காதில் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த அலை ஓசையானது ஜனசமுத்திரத்தின் இரைச்சலோடு ஒன்றாகக் கலந்தது. காந்திஜியின் நிலை இன்னதென்று அறிந்ததும் அவளுடைய நெஞ்சு விம்மி எழுந்து தொண்டையை அடைத்தது. பின் கழுத்துக்கு மேலே இரு செவிகளுக்கும் மத்தியில் எதோ ஒரு நரம்பு, வீணையின் மந்திரத் தந்தி அறுந்தாற்போல், படீரென்று வெடித்து அறுந்தது. அந்த ஓசை மேற்கூறிய இருவகைப்பட்ட அலை ஓசையையும் பிளந்து கொண்டு சென்று அவளுடைய மண்டைக்குள்ளேயே பாய்ந்தது."

அப்போது அவள் கேட்ட கீதம், 'ஹரி தும் ஹரே ஜனீஜீ பிரு (ஹரீ மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக) என்பதே. அவளும் விரைவில் உயிர் நீத்தாள். அப்போது சொர்க்கத்தில் காண விரும்பியது காவியக் காதலர்களை அல்ல, காந்தி காவியத் தலைவியானவள் பாவை காந்தி மகாஜோதியையும் வானுலகில் தரிசிக்கிறாள். இறுதியில் நீலநிற விண்ணொளியில் ஆதியும் அந்தமும் இல்லாத ஆனந்த வெள்ளத்தை அனுபவிக்கிறாள்.

இறுதியில் அவள் விருப்பப்படி செளந்தரராகவன் குருபியாகிவிட்ட தாரிணியை மணக்கிறான். இந்திய தேசத்தின் உரை நடைக் காப்பியமான அலை ஓசையின் இரு தலைவியரும் இந்தியப் பெண்மையின் இரு கூறுகள். இந்திய ஆத்மாவின் இரு வடிவங்கள் புரட்சிவாதியாக இருந்த தாரிணி அமைதி வாழ்வைத் தொடங்குகிறாள். அமைதியாகத் தொடங்கிய சீதா வாழ்வின் துயரை அனுபவித்து ஒரு பிரம்மாண்ட காந்தி தொண்டராக மறைகிறாள். இருவரும் இந்தியாவின் ஆத்ம பலத்தின் வெளிப்பாடு. இன்னொரு நிலையில் சீதா, காந்தியோடு இணைகிறாள், தாரிணி, சுதந்திரப் போரில் காயப்பட்டுப் பின் மதக்கலவரத்தால் பிளவுண்ட சுதந்திர இந்தியாவின் உருவகமாகத் திகழ்கிறாள்.

லலிதாவைப் பெண் பார்க்க வந்த ராஜம் பேட்டையில் கதை முடிகிறது. இப்போது மறுபடியும் ஒரு ஆள் மாற்றம். தாரிணியோடு சூரியா வருவான் என எதிர்பார்த்திருக்கும் லலிதாவும் மற்றவர்களும் அவன் பாமாவோடு வருவதைப் பார்த்து மகிழ்கிறார்கள். சூர்யா காந்தியப் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்குப் பொருள் உற்பத்தி, உணவு உற்பத்தியைச் சொந்தக் கிராமத்திலேயே தொடங்க நினைக்கிறான். நிலத்தை உழைப்பவர்க்குப் பிரித்துத் தருவதை யாரும் தடுக்கமுடியாது என நம்புகிறாள்.

"நாங்கள் காத்திருக்கலாம், அம்மா! ஆனால் பூகம்பமும் புயலும் எரிமலையும் பிரளயமும் காத்திருக்குமா?" என்றான் சூரியா.

லலிதா, "பூகம்பம், பிரளயம் என்றெல்லாம் நீ சொல்லும் போது, அத்தையும் சீதாவும் அடிக்கடிக் 'காதில் அலை ஓசை கேட்கிறது' என்று சொல்லிக்கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது. அவர்களுக்கு என்ன சித்தப் பிரமையா அல்லது அவர்களுடைய காதில் ஏதாவது கோளாறா?" என்று கேட்டாள்.

"பிரமையா, காதில் ஏதேனும் கோளாறா என்று எனக்குத் தெரியாது; அல்லது ஏதேனும் ஒரு தெய்வீகச் சக்தியினால், வரப்போகும் பயங்கர விபத்துக்களின் அறிகுறி அவர்களுடைய மனசில் தோன்றியதா என்றும் தெரியாது. பஞ்சாபிலிருந்து தப்பி ஓடிவந்து நதியில் முழுகியபோது சீதாவின் காது அடியோடு செவிடாகி ஒன்றுமே கேட்காமல் போய்விட்டது. உரத்த பயங்கரமான அலை ஓசை போன்ற சத்தம் மட்டும் ஓயாமல் கேட்டுக்கொண்டிருந்ததாம். ஆனால் காந்திஜியின் புனித உடல் தகனமான அன்று சீதாவின் காது கேட்கத் தொடங்கியது. 'ஹரி! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக' என்ற மகாத்மாவின் மனதுக்கு உகந்த கீதந்தான் முதலில் அவள் காதில் கேட்டதாம். இது ஒரு சுப சூசகம் என்று எனக்குத் தோன்றுகிறது. மகாத்மாவின் மகா தியாகத்துக்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்துக்குப் பெரும் விபத்து ஒன்றும் கிடையாது! இனிமேல் சுபிட்சமும் முன்னேற்றமுந்தான்!' என்றான் சூரியா."

அலை ஓசை அடங்கி மகாத்மாவுக்கு உகந்த கீதம் சீதாவின் காதில் கேட்டது. அது நாட்டின் சுபிட்சத்தின் முன்னோடி என்ற நம்பிக்கை ஒளியோடு கதை முடிகிறது.

இந்திய சுதந்திரப் பின்னணியில் உருவான இந்தப் புதினத்தில் தனி மனிதர் வரலாறு தேச வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. இந்திய சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களின் மௌன மையமாகக் காந்தியம் காட்டப்பட்டுள்ளது. தா.வே. வீராசாமி குறிப்பிடுவது போல் காந்தி கதையில் நேரடியாகப் பங்கு பெறுவது குறைவுதான். ஆனால், அது கண்ணுக்குத் தெரியாத சக்தியாக ஏறக்குறைய எல்லோரையும் பரவலாகப் பாதிக்கிறது. இப் புதினத்தில் காந்தியத்துக்கு மதிப் பளிக்காதவர்களும் இருப்பது இயல்பானதே. ஆனால் பெரும்பாலோர் அவரவர் நிலைக்கேற்பக் காந்தியத்தால் மாற்றம் அடைகிறார்கள். அதில் முக்கியமானவர்கள் சீதா, தாரிணி, சூரியா. காந்தியின் மறைவு இந்திய வரலாற்றிலும் இம்மூவர் வாழ்விலும் சோக நிழலாகக் காட்டப்பட்டுள்ளது. அஹிம்சையும் ஆத்மபலமும் காந்தியத்தின் அடிப்படையாகப் பேசப்பட்டுள்ளன. சௌந்தரராகவன் மௌலியைச் சுட்டதின் மூலம் அஹிம்சையின் தேவையும் மத ஒற்றுமையின் அவசியமும் மறைமுகமாய்க் காட்டப்பட்டுள்ளன. இப் புதினத்தில் காந்தி புராணிய ரீதியில் உயர்த்தப்பட்டாலும், கதையோட்டத்தில் அதிசயங்கள் பல நிகழ்ந்தாலும் காந்தி என்ற மனித தெய்வம்,

அரியவர்க்கு அரியவர் எளியவர்க்கு எளியவராகவும் இருப்பதும் காந்தியம் ஒரு எளிமையான விந்தை என்பதும் இப்புதினம் வழியாக உணர்த்தப்பட்டுள்ளன.

இறுதியாக இப்புதினத்தில் சூரியா தாரிணி திருமணம் சுதந்திரத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. ஆர்.கே. நாராயணின் Waiting for the Mahatma வை நினைவூட்டுகிறது. அதிலும் ஸ்ரீராமும் பாரதியும் காந்தி மகானின் கடைசி வழிபாட்டில் தான் இணைகிறார்கள். அவரது The Dark Room என்ற முந்தைய நாவலின் கதாநாயகி சாவித்திரி 'தியாக பூமி'யின் கதாநாயகி சாவித்திரி போலிருக்கிறாள். அவளும் கணவனின் தீய பழக்கங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாள். சாவித்திரியும் ஸ்ரீதரும் சுதந்திரப் போரில் பங்கு பெறும்போது தான் உண்மையாக ஒன்றுபடுகிறார்கள். கல்கி, நாராயண் கதைகளின் தொடர்புகள் மேலும் ஆய்வதற்குரியவை.

# துணை நூல்கள்


1. இரபிசிங், ம.செ. — தமிழ் நாவல் இலக்கியத்தில் புதிய பரிமாணங்கள், ஐந்திணை.
2. இராமலிங்கம், மா. — நோக்குநிலை.
3. இளவரசு, இரா. — இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், மருதம், 1990.
4. கல்கி — மகுடபதி, தியாகபூமி, அலைஓசை.
5. கைலாசபதி, க. — நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்
6. கைலாசபதி, க. — இருமகாகவிகள்
7. சச்சிதானந்தன், வை. — பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும்.
8. சங்கரநாராயணன், எஸ். — 'கமலாம்பாள் சரித்திரம்'. நாவல் வளர்ச்சி (பதி.மோகன், இரா.)
9. சிவஞானம், ம.பொ. — விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு.
10. சுப்பிரமணியம், வி.எஸ். — பாரதிதரிசனம் (தொகுப்பு)
11. சுபாசு சந்திரபோசு — பாரதிதாசனும் தமிழியமும், சுபாலிகா, 1991.
12. சுபோசன் சர்க்கார் — வங்காள மறுமலர்ச்சி, நியுசெஞ்சுரி.
13. சுந்தரராஜன், பெ.கோ. (சிட்டி) — 'பாரதி கண்ட அக்கினி தத்துவம்'. சிந்தனைப் பண்ணையில் பாரதி. (பதி. குமரி அனந்தன், பொன்னருவி)
14. செல்லப்பன், கா. — இலக்கியத்தில் பழம் புதுமையும் புதுப்பழமையும்.

15. செல்லப்பன், கா. — ஒப்பியல் தமிழ், 'தமிழ்ப் புதினங்களில் பெண்மை'.

16. தணிகை உலகநாதன் — நாமக்கல் கவிஞர் கவிதைகள் (தொகுப்பு)

17. திரவியம், கா. — தேசியம் வளர்த்த தமிழ்.

18. நஜன் — பாரதி கண்ட தெய்வ தரிசனம்.

19. பக்கிம் சந்திரர் — ஆனந்தமடம் (மொழிபெயர்ப்பு: குமார சாமி)

20. பாரதி — பாரதியார் கவிதைகள்

21. பாவேந்தர் — பாரதிதாசன் கவிதைகள்.

22. மன்னர் மன்னன் — கறுப்புக்குயிலின் நெருப்புக் குரல், முத்துப்பதிப்பகம், 1985.

23. மாதவைய்யா — பத்மாவதி சரித்திரம்.

24. ரகுநாதன், தொ.மு.சி. — 'ஒரு தேசியக் கவியின் மலர்ச்சி'. சிந்தனைப் பண்ணையில் பாரதி.

25. ரகுநாதன், தொ.மு.சி. — பாஞ்சாலி சபதம், அண்ணாமலை.

26. ராஜம் ஐயர் — கமலாம்பாள் சரித்திரம்.

27. ராசு, த. — தேசபக்தன் கந்தன், நாவல் வளர்ச்சி (பதி. மோகன், இரா) மணிவாசகர் பதிப்பகம், 1989.

28. ரோமய்ன் ரோலண்ட் — வாழ்விக்க வந்த காந்தி (மொழிபெயர்ப்பு: ஜெயகாந்தன்)

29. வெங்கடரமணி — தேசபக்தன் கந்தன்.

30. வீராசாமி, தா.வே. — தமிழ் நாவல் இயல்.

31. வீராசாமி, தா.வே. — 'கல்கியின் அலை ஓசை'-நாவல் வளர்ச்சி (தொகுப்பு: மோகன், இரா.)

| | | |
|---|---|---|
| 32. | வேதநாயகம் பிள்ளை | பிரதாப முதலியார் சரித்திரம். |
| 33. | Bhasha Sangam | Birth Centenary Special issue of National Poet Namakkal Ramalingam Pillai. |
| 34. | Rabindranath Tagore | Gora, The Home and the World. |
| 35. | Sachidanantan, V. | Whitman and Bharathi. |
| 36. | Swami Vivekananda | The Practical Vedanta. |

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ம.பொ.சி யின் தமிழ் உணர்வு | 40.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |

**Pub.No.442** **தமிழில் விடுதலை இலக்கியம்** **20.00**

